நன்றி - நூலகத்திட்டம்

සරිනිහර්
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் – 50 ஜூன் 30 – ஜூலை 13, 1994 விலை 7/=

### பாடையிலே போவார்!

வாருங்கள் ஐயா! வந்திவர்க்கும் வாக்குகளைத்
தாருங்கள்! தந்துவிட்டுப் பாருங்கள்- தேருங்கள்
'பாடையிலே போவாரை'ப் பஜிரோவில் வீற்றிருந்து
ஓடவைத்த உம்சிறப்பை ஓம்!

ஈழமோகம்

## பாராளுமன்ற தேர்தல்

# வைப்போம் வைப்போம் வேட்டு வைப்போம்
# கேட்போம் கேட்போம் வோட்டு கேட்போம்

கடந்த வெள்ளி இரவு (24/06/94) பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வதற்காக வேட்பாளர் பட்டியலை தயாரிக்கும் முயற்சியில் அரசியல் கட்சிகள் முண்டியடித்துக் கொண்டு நிற்கின்றன. அதேவேளை யுத்தம் நடந்து கொண்டிருக்கும் வடக்கு கிழக்கிலும் தேர்தலை நடாத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. யுத்தப் பிரதேசங்களில் 1/4 பகுதியையே தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அரசாங்கத்தின் இந்த அறிவிப்பானது நாட்டுமக்கள் அனைவரதும் கண்களில் மண்ணைவாரி இறைக்கும் நிகழ்ச்சியென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஆயினும் தமிழ் கட்சிகளோ தேர்தலில் இவற்றைப் பற்றிய அக்கறையின்றி போட்டியிடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

### வவுனியா நிலைமை

தேர்தல் நடக்கவிருக்கும் பிரதேசங்களில் வடக்கை எடுத்துக் கொண்டால் வடக்கின் பிரதான 5 மாவட்டங்களிலுமே இராணுவத்தினர் மிகக்குறுகிய பிரதேசங்களை மட்டுமே கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

வவுனியாவின் 3 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வவுனியா மத்திய பிரதேச செயலர் பிரிவைத் தவிர நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இராணுவம் பூரண கட்டுப்பாட்டை இழந்துள்ளது. செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவில் பெரும்பகுதி இன்னும் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமாகவே காணப்படுகின்றது. வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலர் பிரிவிலும் சிறுபகுதி கட்டுப்பாடற்ற பிரதேசமாகவே உள்ளது.

இவ்வகையில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் வவுனியா மாவட்டத்தின் மொத்த வாக்காளர் தொகையான 72,434 பேர்களில் 46,906 பேரே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளடக்கப்படுகின்றனர். எஞ்சிய 25,528 பேர் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் வாழ்கின்றனர்.

அத்துடன் மொத்த வாக்களிப்பு நிலையங்கள் 65ல் 41 நிலையங்களே கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ளன. எஞ்சிய 24 வாக்களிப்பு நிலையங்கள் கட்டுப்பாடற்ற பகுதிகளில் காணப்படுகின்றன.

### ஒரேயொரு வாக்களிப்பு நிலையம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மொத்த வாக்காளர் தொகையான 52,197பேரில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியான மணலாறு பிரதேசத்தின் ஏறத்தாழ 2000 பேரே வாக்களிக்கும் நிலையில் உள்ளனர். அதாவது இங்குள்ள 50 வாக்களிப்பு நிலையங்களில் ஒரு வாக்களிப்பு நிலையமே கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருகின்றது.

மன்னார் மாவட்டத்தின் மொத்த வாக்காளர் தொகை 54,562 ஆகும். இங்கு மொத்தமாக 54 வாக்களிப்பு நிலையங்கள் உள்ளன. இவற்றில் ஏறத்தாழ 19 வாக்களிப்பு நிலையங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளன.

### தெல்லிப்பழைக்கு போவது எப்படி?


யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரை ஏறத்தாழ 6000 பேர் வாழ்

→ 2





## தேர்தல் களத்தில்...

### சுரேஸுக்கு ஆதரவு 15%



இம்முறை ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பில் அதன் செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட உள்ளதாக அறியப்படுகிறது. ஆனால் இக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஒருவர் இதுபற்றித் தெரிவிக்கையில் ஏற்கனவே 50%வீதமாக உள்ள ஆதரவு சுரேஸ் கேட்பதனால் 15% ஆகலாம் எனவும் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்தையே நிராகரித்த கிழக்குப் பூமி இவரை மட்டும் ஏற்கவா போகிறது எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

### ரெலோ - புளொட் கூட்டு?




ரெலோ சார்பில் அதன் முன்னாள் எம்.பி. கருணாகரனும் அக்கட்சியின் முக்கியஸ்தரான றொபேட் என்பவரும் தேர்தலில் குதிக்க உள்ளதாக ரெலோ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கூடவே இவர்கள் புளொட் இயக்கத்துடன் கூட்டுச் சேர்ந்தே கேட்க உள்ளதாகவும் அறியப்படுகிறது.

### அருணகிரிநாதனும் தேர்தலில்

தற்போது மேலதிக அரசாங்க அதிபராக உள்ள திரு. கே.அருணகிரிநாதன் தனது பதவியை 29.6.94 ராஜினாமாச் செய்து விட்டு ஸ்ரீ.ல.சு.க அமைப்பாளராக செல்லவுள்ளார் எனவும் அக்கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### புலிகள் பச்சைக்கொடி



புலிகள் தேர்தலுக்கு பச்சைக் கொடி காட்டியுள்ளாகள் போல் தெரிகிறது எனவும் அதனால், தான், ஐ.தே.க சார்பில் போட்டியிட உள்ளதாகவும் தனது மட்டங்களில் அரசாங்க அதிபர் மௌனகுருசாமி தெரிவித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

### 'இராசரும்' களத்தில்!

முன்னாளில் த.வி.கூ. சார்பில் தெரிவாகி ஐ.தே.கவுடன் ஒட்டிக் கொண்ட அமைச்சரும் பின்னாளில் தூதுவராக இருந்தவருமான திரு.இராஜதுரை இம்முறை மீண்டும் ஐ.தே.க சார்பில் போட்டியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார் என. அவரின் நெருங்கிய சகாக்கள் தெரிவிக்கின்றனர்.

நன்றி - நூலகத்திட்டம்



# கொட்டாஞ்சேனை பொலிஸாரின் கொட்டம்!

தமிழ் பேசும் மக்களுக்கெதிரான' பொலிஸாரின் கட்டுமீறிய அடாவடித்தனங்கள் இன்னமும் குறைந்தபாடில்லை. குறைந்தபட்ச மனிதாபிமானம் கூட இல்லாமல் ''கண்ட நிண்ட'' இடங்களிலெல்லாம் வந்து அள்ளிக் கொண்டு போய் கூடுகளில் அடைக்கிறார்கள்; கப்பம் கேட்கிறார்கள்.

ஜூன் 13ம் திகதி சனிக்கிழமை இரவு கொழும்பு புறக்கோட்டையிலிருந்து மட்டக்குளி போய்க் கொண்டிருந்த பஸ்வண்டிகளையெல்லாம் மறித்து கொட்டாஞ்சேனைப் பொலிஸார் எல்லோரையும் இறக்கி அடையாள அட்டையை பார்க்கிறார்கள். பிறகு எல்லாத் தமிழர்களையும் ஒரு ஓரமாக நிற்கச் சொல்லி ட்ரக் வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு பொலிஸ் நிலையம் சென்று நாலைந்து பேர் இருக்கக்கூடிய இரண்டு கூடுகளிலும் அறுபது பேரையும் அடைத்து வைத்திருந்தார்கள்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களில் அனேகமானோர் இரவு நேர வேலை முடிந்து வீடு திரும்பியவர்கள். இதில் வயது போனவர்கள், பெண்கள் கூட கைது செய்யப்பட்டார்கள்.

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு கூட்டிச் செல்லப்பட்ட அனைவரிடமும் அடையாள அட்டை பொலிஸ் றிப்போர்ட் , உட்பட அனைத்து ஆதாரங்களும் இருந்தும் இவர்களைப் பிடித்துச் சென்றிருக்கிறார்கள். பிடித்துச் செல்வதில் ஈடுபட்டிருந்த அனைத்துப் பொலிஸாரும், போதை தலைக்கேறிய நிலையிலேயே இருந்துள்ளார்கள்.

இதைவிட பிடித்துச் செல்லப்பட்டவர்களில் புறக்கோட்டையிலுள்ள கொமர்சியல் வங்கியில் முக்கிய பதவி வகிப்பவரும் ஒருவர். அவர் கையில் இருந்த வங்கிச் சாவி, வங்கி தஸ்தாவேஜைகள் வங்கி அடையாள அட்டை என்பவற்றைக் காட்டியும் அவரை விடவில்லை.

அடுத்தநாள் காலையில் கூட்டுக்கு முன்னால் வந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் வங்கிச்சாவியைக் காட்டி நான் போனால் தான் வங்கி திறக்க முடியும். மற்றையவர்கள் வந்து வெளியில் நிற்பார்கள் முடியுமெனில், விடுங்கள் இல்லையேல் வங்கித் தலைமையகத்துக்கு பதில் சொல்லிக் கொள்ளுங்கள் எனக் கூறிய போதும் உடன்படாமல் சாவியைத் தா நாங்கள் கொண்டு போய்க் கொடுக்கிறோம். உன்னை விசாரணை முடிந்தவுடன் தான் விடலாமென பொறுப்பதிகாரி பதில் கூறினாராம். சாவியை யாரிடமும் தரமுடியாது என அவர் விடாப்பிடியாக கூறவே அதற்குப் பின்னர் தான் அவரை விடுதலை செய்தனர்.

இதேபோல் கொட்டகலையைச் சேர்ந்த இன்னுமொருவர் அடுத்த நாள் காலையில் தனியார் மருத்துவமனையொன்றில் காலில் அறுவைச் சிகிச்சை செய்ய வந்தவர். அடுத்தநாள் அறுவைச்சிகிச்சைக்கு போக வேண்டிய வைத்தியரின் மருத்துவ அறிக்கை, படுக்கை, சுடுதண்ணீர்ப் போத்தல், உட்பட எல்லாவற்றையும் காட்டிக் கெஞ்சியும் விடாமல் அவரையும் இழுத்துக் கொண்டு வந்து அடைத்துவிட்டார்கள். அவருக்கு கிடைத்த பதில் தான் 'அடேய் பறத்தெமிலா சத்தம் போடாமல் வாடா பின்னால'... ...

என்று எழுத முடியாத வார்த்தைகள் தான். அந்த மனிதனுக்கோ குறைந்தது ஐம்பது வயதிருக்கும். மிகவும் நொந்து போன நிலையில் தான் பொலிஸ் நிலையத்திலிருந்து வீடு திரும்பினார்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் அப்பாவிகள் என்று தெரிந்தும் ஏன் தான் திரும்பத் திரும்ப கைது செய்கிறார்களோ தெரியாது. நமக்கு தான் தெரியாமலிருக்கலாம். அது சரி கொழும்பில் இருந்து கொண்டு அரசுக்கு துதிபாடும் இயக்கப் பொடியன்களுக்கும், தமிழ் அரசியல் பெரு மக்களுக்குமாவது தெரியாதோ?

# சு.கட்சி அமைப்பாளருக்கு ஐந்துலட்சம்+வாகனம்!

எதிர்வரும் தேர்தலில் கட்சிக்கு விசுவாசமாக இயங்கி வாக்கு வேட்டையாடவல்ல அமைப்பாளர் ஒருவரைத் தேடும் முயற்சியில் ஸ்ரீ.ல.சு.கட்சி திருகோணமலையில் இறங்கியுள்ளது.

இதுவரை திருகோணமலை அமைப்பாளராக இயங்கி வந்த திரு. எஸ்.தவராசா தன் 'பொக்கற்'றை நிரப்புவதிலேயே கவனம் செலுத்தியதால் அவரால் வாக்குப் பெட்டியை நிரப்ப முடியாது எனத் தலைமைப்பீடம் கண்டு கொண்டதாலேயே இந்த நிலைமை எழுந்துள்ளது.

''என்னுடைய வாக்கையும் நான் சம்பந்தனுக்குத்தான் அளித்தேன்'' என்று தமிழ் மக்கள் மத்தியில் பாசாங்காக அவர் சொன்ன வார்த்தைகளே இப்போது அவருக்கெதிராக தலைமைப்பீடத்தில் திருப்பப்பட்டுள்ளதாம்.

அமைப்பாளரும் நானே; வேட்பாளரும் நானே'' என்ற தோரணையில் கட்சி கொடுத்த பணத்தையெல்லாம் சுருட்டிக் கொண்டு தனது வீட்டுக் கதவுகளுக்கும் யன்னல்களுக்கும் தேர்தல்கால ''நீலப் பெயின்ற்'' அடித்த விளையாட்டுக்கள் எல்லாம் வியர்த்தமாகி விட்டனவாம். எவ்வித பிரச்சாரங்களிலும் ஈடுபடாமல் கட்சிப் பணத்தைச் சுருட்டுபவரை எப்படித் தொடர்ந்தும் அமைப்பாளராக வைத்திருக்க முடியும் என்ற சர்ச்சை பலமாக எழவே கொழும்புக்கு ஓடிச் சென்று எவ்வளவோ கெஞ்சிய போதும், அவரை நீக்கியே தீருவதென்று கட்சி திடமாகச் சொல்லிவிட்டதாம். இதனால் மனமுடைந்த அமைப்பாளர் ''அவர்கள் எல்லோரும் கள்ளன்கள்'' என்று புலம்பித் திரிகிறார்.

இத்தனைக்கும், திருகோணமலை மக்களோ இவர் சம்பந்தப்பட்ட பொது வேலைகள் எல்லாவற்றிலும் நிதிமோசடி இடம் பெற்றுள்ளதாகக் கருதுகிறார்கள். இறுதியாக ஆலங்கேணி மீள் குடியேற்றத் திட்ட விவகாரக் கணக்கு வழக்கிலும் நாலரை லட்ச ரூபாய் 'பிசகில்' நிற்பதால் இவர் வெளியேற்றப்பட்டுள்ளார்.

யார் யாரைக் கள்ளன் என்பது ஒரு புறமிருக்க, ஸ்ரீ.ல.சு.கட்சி கள்ளனாக இல்லாத ஒரு தமிழ் அமைப்பாளரையே எதிர்பார்க்கிறதாம். சிலர் நியமனம் பெற ஓடித்திரிவதாகக் கேள்வி. நகராபிதா சூரியமூர்த்தியை மடக்கினால் என்ன என்று கட்சிக்கு யோசனை. உள்ளூராட்சித் தேர்தலில் விழுகிற வாக்குகள் குறைந்தாலும் தலைமைப்பதவியைப் பிடித்த கெட்டித்தனம் பெரிதே என கட்சி எண்ணுகிறதோ. என்னவோ?

திருகோணமலையிலிருந்து பிந்திக் கிடைத்த செய்திகளின்படி கோணேஸ்வரர் கோவில் தர்மகர்த்தா மு.கோ.செல்வராஜாவே திருமலை அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இவருக்கு முதற் கட்டமாக ஐந்து லட்சம் ரூபா பணமும் வாகனமும், வழங்கப்பட்டுள்ளதாம். தேர்தலில் இவர் போட்டியிட மாட்டார் என்றும் தேசிய பட்டியல் மூலம் எம்.பியாக்கப்படுவார், என ஸ்ரீ.ல.சு.கட்சி இவருக்கு உறுதியளித்துள்ளதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

தர்மகர்த்தாவாக இருந்த போது தர்மகர்த்தா சபை இந்தியப்படைக்கு கோணேசர் சிலையை விற்றது.

இப்போ சு.கட்சி அமைப்பாளர் எதை எதையெல்லாம் விற்றுத் தொலைக்கப் போகிறாரோ? யாருக்குத் தெரியும்?

# அசடு வழிந்தார் அரச அதிபர்!

மட்டக்களப்பு ஆனைப்பந்தி மகளிர் வித்தியாலயத்தில், 'காந்தி சேவா சங்கம்' அண்மையில் கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்திருந்தது. கருத்தரங்குக்கு மட்டக்களப்பு அரச அதிபர் மோனகுருசாமி, பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பராஜசிங்கம், ஏறாவூர் பிரதேச சபையின் ஐ.தே.க உறுப்பினர் செய்யத் அலி சாகிர் மௌலானா ஆகியோர் கலந்து உரையாற்றினார். திரு.மௌலானா முன்னாள் ஸ்ரீ.ல.சு.க அமைப்பாளர். இப்போழுது ஐ.தே.கவுடன் இணைந்திருப்பவர். அதிபர் மோனகுருசாமியின் கொழும்புக்கான இடமாற்றத்தை இரத்துச் செய்ய மேலிடத்துடன் உரையாடியதனால் திரு.மௌலானாவும் அரச அதிபரும் மட்டக்களப்புக் கூட்டங்களில் 'இணைபிரியாத நண்பர்கள்'

அரச அதிபர் மோனகுருசாமி எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட இருப்பது, மட்டக்களப்பு மக்களுக்கு இரகசியமான செய்தியல்ல. இந்த நிலையில் திரு.மௌலானாவுக்கு வால் பிடித்து வருகிறார் அரச அதிபர். மேற்படி கூட்டத்தில் தனது உரையை தொடங்கும் போது ''ஜோசப் பராஜ சிங்கம் அவர்களே! எதிர்கால நட்சத்திர நாயகன் திரு.மௌலானா அவர்களே!'' என அரச அதிபர் பேசியது கூட்டத்தில் கலந்து கொண்டோருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. தொடர்ந்து அரச அதிபர் பேசும் போது ''ஊழல், லஞ்சம் என்பவை செய்வது பாவம் தியாக மனப்பான்மை வேண்டும். இதைத் தான் காந்தி சொன்னார்....'' என்று கூறவே, கருத்தரங்கில் கலந்து கொண்ட ஒரு மாணவி ''நீங்கள் உட்பட எத்தனைபேர் இதனை செயலில் காட்டுகிறீர்கள்?'' எனக் கேட்கவே அரசாங்க அதிபர் முதலில் அதிர்ந்து போனாலும் பின்னர் அசடு வழிந்துள்ளார்.

# பாராளுமன்ற....

கின்ற தீவுப்பகுதி மட்டுமே இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டுள் உள்ளது. ஏனைய 6 லட்சம் வாக்காளர்களை கொண்ட பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள கரையோரப் பகுதிகள் உள்ளிட்ட தெல்லிப்பழை முதலான இடங்கள் சனநடமாட்டமற்ற சூனியப் பகுதிகளாகவே உள்ளன. எனினும் தெல்லிப்பழையில் வேட்புமனுத்தாக்கலை செய்வதற்கான ஒழுங்குகளையும் தீவுப்பகுதியில் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கான ஒழுங்குகளையும் அரசாங்கம் மேற்கொள்ள தீர்மானித்துள்ளது. ஆனால் தெல்லிப்பழையில் இராணுவம் நிலை கொண்டுள்ள பகுதிகளை எப்படி அண்மிப்பது என்பது பற்றி அரசாங்கம் எதுவும் தெரிவிக்கவில்லை.

புலிகளை பொறுத்தவரை தேர்தல் பற்றி அவர்கள் இதுவரை எந்த முடிவும் செய்ததாக தெரியவில்லை. இதுவே வடக்கிலிருந்து எந்த வேட்பாளர்களும் போட்டியிடாமலிருக்க போதுமான காரணமாகும்.

ஆக, வடமாகாணத்தின் முக்கால் பகுதியில் தேர்தல் நடைபெறுமா என்பது சந்தேகமே. அவ்வாறில்லாமல் அரசாங்கம் தேர்தலை பலாத்காரமாக நடத்த முற்படினும் சில பகுதிகளில் மட்டுமே தேர்தலை நடாத்தி அங்கு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளை முழுப்பகுதியின் பிரதிநிதிகளாக அறிவிக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, வடக்கு கிழக்கில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இராணுவ தர்பாருக்குள் நடக்கக்கூடிய ஓரிரு இடங்களிலும் நடாத்தப்படுவது உண்மையான தேர்தலாக இருக்குமா என்ற சந்தேகம் எல்லோராலும் எழுப்பப்படுகிறது.

## கூட்டணியினர் வழக்கு?

இதற்கிடையில் வடக்கின் அமைதியற்ற பகுதிகளில் கட்டுப்பாடான பகுதிகளில் மட்டும் தேர்தலை நடாத்திவிட்டு முழுப்பகுதிகளுக்குமான தேர்தலாகவும் அங்கு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளை முழுப்பிரதேசங்களுக்குமான பிரதிநிதிகளாகவும் அறிவிக்க முயலும் அரசாங்கத்தின் செயல் அடிப்படை மனித உரிமை மீறல் ஆகும் என வழக்குத் தொடரப் போவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சென்றவாரம் தமிழர் விடுதலைக்கூட்டணியின் முன்னாள் பா.உ. ஒருவர் நயினாதீவு நாகபூசணி அம்மனைத் தரிசனம் செய்யச் சென்று வந்ததாகவும் தேவியைத் தரிசனம் செய்யும் நோக்கைவிட தீவுப்பகுதியின் தேர்தல் நிலைமையினை அவதானித்து அங்கு தேர்தலில் குதிப்பதற்கான முஸ்தீபுகளைச் செய்வதற்காகவே அவருக்கு திடீர் தேவி பக்தி ஏற்பட்டுள்ளதாகவும் . தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கையின் 25 மாவட்டங்களில், மட்டக்களப்பு மாவட்டத்திலேயே ஆகக்கூடுதலான கட்சிகள் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த வகையில் ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க ஆகியவற்றோடு த.வி.கூ, ரெலோ, புளொட், முஸ்லீம் காங்கிரஸ், ஈரோஸ், ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகள் போட்டியிடுகின்றன. தவிரவும் வேறும் சில சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடத் தயாராகி வருவதாகத் தெரியவருகிறது. வன்னிமாவட்டத்தில் மேற்குறிப்பிட்ட கட்சிகளில் ஈரோஸ், ஈ.பி.டி.பி தவிர்ந்த ஏனைய கட்சிகள் யாவும் போட்டியிடவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஸ்ரீபாத: போலிப் பிரச்சாரங்கள்!

'ஸ்ரீபாத கல்வியல் கல்லூரியைச் சேர்ந்த சிங்கள விரிவுரையாளர்கள் மூன்று மாதங்களுக்குள் விலகாவிட்டால் குடும்பத்தையே அழிப்போம்' என மிரட்டல்கள் விடுக்கப்பட்டிருப்பதாகவும், தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பேரிலேயே இம்மிரட்டல் கடிதங்கள் அனுப்பப்படுவதாகவும் சிங்கள தினசரிகள் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

மேற்படி கல்லூரி மலையகத்தின் குறிப்பாக தமிழ் ஆசிரியர்கள் கலாசாலையாக ஆக்கப்பட்டும் கூட சிங்கள மயமாக்கப்பட்டு வருவதும் தொடர்ந்தும் மலையகத் தமிழ் மக்களுக்கு புறக்கணிப்பு நடத்தப்பட்டு வருவதும் அறிந்ததே. இந்நிலையில் சிங்கள 'விரிவுரையாளர்களுக்கு மிரட்டல்' எனும் போலி பிரச்சாரங்களை செய்து சிங்கள மயமாக்கலுக்கு நியாயம் கற்பிக்க முயற்சிகளை செய்து வருவதாகவும் இதற்கு சிங்கள தினசரிகள் துணைபோவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டமான் - அஷ்ரப் திட்டம்

# துடுப்பில்லாத ஒரு ஓட்டைத் தோணி

தொண்டமான் - அஷ்ரப் இருவரும் கூட்டாக முன்வைத்துள்ள திட்டத்தைப் பற்றி திரு.எஸ். சுந்தரலிங்கம் என்பவரது கட்டுரையைக் கடந்த சரிநிகர் இதழில் பிரசுரித்து அத்திட்டம் பற்றிய வாசகர்களின் அபிப்பிராயங்களையும் கோரியுள்ளீர்கள்.


இப்போதைய ஐ.தே.கவின் நெருக்கடியைப் பயன்படுத்தி தம் சொந்த நலன்களை பலப்படுத்திக் கொள்ள தொண்டாவிற்கும் - அஷ்ரப்பிற்கும் பயன்படும்படியாகத் தயாரிக்கப்பட்டதே இத்திட்டமாகும் என்பது உங்கள் பத்திரிகை வெளியாவதற்கு முதல்நாளே அம்பலமாகி விட்டது.

தென்மாகாணத் தேர்தல்களுக்குப் பின் அளப்பரிய சிங்களவாதியாகத் திகழ முற்பட்ட டி.பி.விஜேதுங்காவிற்கே தமிழ், முஸ்லீம் வாக்கில்லாமல் வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் வெல்லமுடியாதென்பது தெளளத் தெளிவாயிற்று. சந்தர்ப்பத்தை விடுவாரா தொண்டர்? (தொழிலாளர் காங்கிரஸினுள் இன்று பருத்துப் போய்க் கிடக்கும் ஊழல் முதலைக்கு ஐ.தே.கவை விட்டால் வாழ்வதற்கு வேறு வழியில்லை என்பது பரகசியம்) என்னதான் டி.பி. மலையகத் தமிழரைக் கேவலப் படுத்தியிருந்தாலும் ஐ.தே.க.வே கதியென்றிருந்த தொண்டா உடனே தன் கரத்தைப் பலப்படுத்தும் முயற்சியில் இறங்கினார்.

சிங்களவரின் ஆதரவு தனக்கு வீழ்ந்தே போய்விட்டதென்று பெருங்கிலி கொண்ட ஐ.தே.கவிற்கு இன்று தேவைப்படுவதெல்லாம் சிறுபான்மையினரின் வாக்குகளே. *மலையக வாக்குகள் மட்டும்* இன்றுள்ள சூழலில் ஐ.தே.க வெல்வதற்குப் போதாது. முஸ்லீம்களின் வாக்குகளும், வடகிழக்குத் தமிழரின் வாக்குகளும் அதற்கு மொத்தமாகத் தேவைப்படுகிறது.

மலையகம், வடகிழக்கு மற்றும் தென்பகுதிகளில் உள்ள அனைத்துச் சிறுபான்மையினருடைய வாக்குகளையும் தன்னால் திரட்டித்தரமுடியும் என்ற மாயையை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்படுத்தினால் தன் கரம் மிகவும் பலப்படும் என்பதை மிகத் தெளிவாகவே தொண்டமானின் மூளை உணர்ந்து கொண்டது.

தான் சிவதாசனைக் கொண்டு பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பிக்கவெனத் தயாரித்த தீர்



வுத் திட்டத்தை மீண்டும் தேடி எடுத்தார். தூசி தட்டினார்.

''எனது திட்டத்தில் நீங்கள் விரும்பிய மாற்றங்களைச் செய்யுங்கள். நீங்கள் யாவரும் சமர்ப்பிக்கும் மாற்றங்களின் அடிப்படையில் விவாதித்து தமிழ் முஸ்லீம் மக்களுக்கான ஒரு நல்ல அதிகாரப் பகிர்வினை உள்ளடக்கிய ஒரு திட்டத்தை உருவாக்கி அதை ஐ.தே.க., எஸ்.எல்.எப்.பி. இரண்டிற்கும் சமர்ப்பிப்போம். எவர் நம் திட்டத்தை ஆதரிக்கிறாரோ அவருக்கு நம் ஆதரவை அளிப்போம்'' என்று கூறினார். அவரைக் கண்டு பேசிய பல சிறுபான்மைத் தலைவர்களும் தொண்டமானின் கரிசனையை நினைத்து அகமகிழ்ந்து மீண்டனர்.

ஆனால் அவர்கள் சந்தித்து ஒரு சில நாட்களிலேயே ''நான் என்றும் ஐ.தே.கவை கைவிடேன்'' எனத் தொண்டர் கூறியதும், அதற்கு அவர் அளித்திருந்த விளக்கங்களும் தி ஐலண்ட் பத்திரிகையில் வெளியாயிற்று. அத்துடன் தொண்டமானின் நோக்கம் தமிழரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதல்ல. ஏனைய சிறுபான்மைத் தலைவர்களை தன்பின் ஏதோ முடச்சாட்டின் அடிப்படையில் அணிதிரட்டிக் கொண்டு தத்தளித்து நிற்கும் ஐ.தே.கவினுள் தன் அரசியல் அந்தஸ்தை நிலைநிறுத்தப் பலப்படுத்திக் கொள்வதேயாகும் என்பது அவருடன் பேசிய தமிழ்த் தலைமைகளுக்கு ஐயந்திரிபற விளங்கலாயிற்று.


முன்னொரு காலமெனில் அவர்களும் தொண்டமானின் ''சுத்துமாத்து''க் கைங்காரியங்களுக்குத் துணை போயிருப்பர். ஆனால் இன்றோ ஒரு சராசரித் தமிழர் *அரசியல்- யாப்பு- தீர்வுகள் ஆகிய* இன்னொரன்ன விடயங்களின் சில நெளிவு சுழிவுகளை ஓரளவேனும் புரிந்து வைத்திருக்கிறார். (திரு.சுந்தரலிங்கம் போன்ற சில விதிவிலக்குகள் எம்மத்தியில் உளர் என்பதையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும்.) ஆனால் தொண்டமானோ அப்படியல்ல. படிப்பறிவற்ற பல்லாயிரக்கணக்கான அப்பாவி மலையகத் தமிழரின் முதுகில்

**எஸ். தர்மரட்ணம்**

சவாரி செய்வதையும் அவர்களைக் கண்ட கண்ட விஷயங்களிலெல்லாம் பேய்க் காட்டுவதிலும் அவர் விண்ணர். ஒரு கைதேர்ந்த தொழிற்சங்கக் கோடீஸ்வரர்.

எனவே தொண்டமானைப் பொறுத்தவரையில் தமிழர் முஸ்லீம்களுக்கான ஒரு உண்மையான அரசியல் தீர்வு என்பது ஒரு அடிப்படைப் பிரச்சினையல்ல. தன் காரியம் கைகூட எதைப் பயன்படுத்தலாம் என்றுதான் அந்தப் பணக்காரத் தொழிற்சங்கவாதி சிந்திப்பார்.

இனி தொண்டமானின் திட்டமும் அதற்கு மெருகூட்டவென திருவாளர் சுந்தரலிங்கம் முன்வைத்துள்ள



எட்டு விடயங்களும் ஏன் அத்திவாரமே இல்லாத ஒரு ''பம்மாத்து மாளிகை'' என்பதை சிறிது பார்ப்போம்.

தொண்டமான் தன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றிக் குறிப்பிடும் போது அதை யாப்பில் மாற்றம் கொண்டுவருவதன் (Contititional Amendment) ஊடாகச் செய்யலாம் என்றுதான் குறிப்பிடுகிறார்.

தற்போது நடைமுறையில் உள்ள யாப்பில் மாற்றம் கொண்டு வருவதானால் இந்தமாற்றம் யாப்பின் 1,2,3,6,7,8,9,,10,11 ஆகிய சரத்துகளை (Articles) மீறாத வகையில் அமைந்துள்ளது என உயர்நீதிமன்றம் தீர்மானித்தால் மட்டுமே குறிப்பிட்ட மாற்றம் பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மையூடாக யாப்பில் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

மேற்குறிப்பிட்ட சரத்துக்களில் சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் முக்கியமானவை 2,4,9 ஆகிய மூன்றுமே. இலங்கை அரசியல் யாப்பின் 2ம் சரத்து, இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடு என வரையறுக்கிறது.

4ம் சரத்து, சட்டமியற்றும் அதிகாரம் (Legislative Power) பாராளுமன்றத்துக்கு மட்டுமே உரியதெனவும் நிறைவேற்று அதிகாரம் (Executive Power) ஜனாதிபதிக்கு மட்டுமே உரியதெனவும் வரையறுக்கிறது.

4வது சரத்து பாராளுமன்றம் பற்றிக்கூறுவதை சரத்து 76.1 இன்னும் தெளிவாக்குகிறது. அதாவது பாராளுமன்றம் தன் சட்டமியற்றும் அதிகாரத்தை வேறு எந்த உப அமைப்பிற்கும் விட்டுக் கொடுக்கக்கூடாது என அது திட்டவட்டமாகக் கூறுகிறது.

9வது சரத்து பௌத்த மதத்திற்கு அரசு அதிமுன்னுரிமை அளித்து பௌத்த சாசனத்தைப் பேண ஆவன செய்ய வேண்டுமென வரையறுக்கிறது.

இந்த மூன்று சரத்துகளையும் மீறா வகையிலேயே தொண்டாவின் திட்டம் அமைகிறது.

அங்ஙனமாயின் அதன் அர்த்தம் என்ன?

தொண்டமான் - அஷ்ரப் திட்டம் கூறும் சிறுபான்மையினருக்கான 'பிராந்திய சபைக்கு' எந்த வித சட்டவாக்க உரிமையும் இருக்காது. இருக்கக்கூடிய அதிகாரம் என்பது வெறும் கண்துடைப்பாக வெத்துவேட்டாக மட்டுமே இருக்கும். (தற்போது 13வது திருத்தச் சட்டத்தில் உள்ளது போல. சரத்து 154 G 154 H ஆகியவற்றை சுந்தரலிங்கம் கவனமாகப் பார்க்க வேண்டும்)

அதிகாரப் பகிர்வு கொடுக்கப்பட்ட தமது பிராந்தியம் (Unit of Devolution) சம்பந்தப்பட்ட விடயங்களில் அறுதியாக சட்டமியற்ற முடியாவிட்டால் சிறுபான்மையினருக்கு பின்பு அதிகாரப்பகிர்வு ஏன்? பாராளுமன்றத்தின் கீழேயே இருந்து விட்டுப் போகலாமே.

எனவேதான் நான் கூறுகிறேன் தொண்டமான் - அஷ்ரப் திட்டம் ஒரு துடுப்பு இல்லாத ஓட்டைத் தோணியென்று. மறுப்பாரா திருவாளர் சுந்தரலிங்கம்?



# நூலிழையில் தொங்கும் ஜனநாயகம்

- சுப்புக்குட்டி

கடந்த 21.06.94 மாலை கொள்ளுப்பிட்டியிலமைந்துள்ள சஸகாவா மண்டபத்தில் திரு.க.கந்தசாமி நினைவுப் பேருரையை திரு. லூசியன் ராஜகருணா நாயக்கா அவர்கள் வழங்கினார்கள். லூசியன் சுதந்திரப் பத்திரிகை இயக்கத்தின் தலைவரும் கீர்த்தி வாய்ந்த ஆங்கிலப் பத்திரிகையாளருமாவார். முன்னர் The Island பத்திரிகையில் பணிபுரிந்த லூசியன் இப்போது புதிதாகக் கொழும்பிலிருந்து வெளிவர ஆரம்பித்திருக்கும் The Sunday Leader வாரப் பத்திரிகையில் பணிபுரிகிறார்.

LIGHT REFRACTIONS என்ற தலைப்பில் லூசியன் எழுதி வரும் 'பத்தி' மிகுந்த அங்கதச் சுவையுள்ளதும் அரசியல் நிறைந்ததுமாகும். இலங்கையில் ஆங்கிலத்தில் எழுதப்படும் பத்திகளில் இதுவே மிக அதிகமாக வாசகர்களால் வாசிக்கப்படுகிறது என்று தெரிவித்தார் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய ராதிகா குமாரசுவாமி அவர்கள்.

கருத்துச் சுதந்திரம், மாற்றுக் கருத்துக்களின் மதிப்பும் அவற்றுக்கான அத்தியாவசியமான தேவையும், பத்திரிகையாளரின் நிலை போன்ற பல அம்சங்கள் பற்றிச் சுதந்திரமாகவும் தெளிவாகவும் உணர்வு பூர்வமாகவும் லூசியன் உரையாற்றினார்.

உரையின் ஆரம்பத்தில் பத்திரிகை சுதந்திரத்துக்காகவும் அநீதிகளுக்கு எதிராகவும் துணிவுடனும் உறுதியுடனும் குரல் கொடுத்த SATURDAY REVIEW ற்கும் அதனுடன் தொடர்பாக இருந்தவர்களுக்கும் தன்னுடைய கௌரவத்தைத் தெரிவித்த லூசியன் திரு.எஸ்.சிவநாயகம், திரு.காமினி நவரத்னா ஆகியோரை வாஞ்சையுடன் நினைவு கூர்ந்தார்.

மாற்றுக்கருத்துக்களுக்குரிய களம் தொடர்ச்சியாகப் பேணப்பட வேண்டியதையும் பெரும்பான்மையோரின் கருத்துக்கள் அல்லது பொதுசன தொடர்பு சாதனங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்போரது கருத்துக்கள் மட்டுமே ஆட்சி செய்யும் நிலைமை ஜனநாயகத்துக்கு உகந்ததில்லை என்று குறிப்பிட்ட லூசியன் சிங்களப் பத்திரிகை உலகில் விற்பனையிலும் ஆதிக்கத்திலும் முன் நின்ற பிரதானமான பத்திரிகைகள் என்று சொல்லப்பட்ட பத்திரிகைகள் ஆட்சியாளருக்கு வால் பிடித்த அதே வேளை TABLOIDS எனப்படும் அளவில் சிறிய பத்திரிகைகளே மாற்றுக் கருத்துக்களைப் பரப்பி இன்று ஒரு பலமான மாற்றுக் கருத்துக்களுக்காக இடத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்று சொன்னார்.

இலங்கை வானொலி, ரூபவாஹினி ஆகிய எலெக்ட்ரோனிக் தொடர்பு சாதனங்களைக் காரசாரமாக விமர்சித்த லூசியன் பிரதானமான பத்திரிகைகளையும் விட்டு வைக்கவில்லை. இவையனைத்தும் கண்மூடித்தனமாக யுத்தத்தை ஆதரிக்கின்றன என்று கண்டித்த லூசியன் யுத்தம் நடைபெறும் இடங்களில் நிகழும் அநியாயங்களை, அகதி வாழ்க்கையை, குண்டு வீச்சுக்களின் அவலங்களை ஒரு போதும் இந்தப் பத்திரிகைகளும் தொடர்பு சாதனங்களும் எடுத்துச் சொல்லவில்லை என்று சொன்னார்.

இத்தகைய பத்திரிகைகளும் தொடர்பு சாதனங்களும்தான் தேச முழுவதும் ராணுவ, கொலை கலாசாரம் வேரூன்றுவதற்குக் காரணமாகவுள்ளது எனவும் அன்றாடம் பத்திரிகையைப் பார்க்கிற போது கொலையும் கொள்ளையும் தான் இடம்பெறுகிறது என்பது மட்டுமல்ல இவையனைத்தையும் அரசாங்கத்தால் ஆயுதம் வழங்கப்பட்டவர்களே செய்து வருகின்றனர் என்றும் குற்றம் சாட்டினார்.

''ஏன் சாதாரண மக்கள் அகதிகளாக வடக்கிலிருந்து வெளியேற நேர்கிறது? என்ற கேள்வியை இந்தத் தொடர்பு சாதனங்களும் பத்திரிகைகளும் எப்போதாவது கேட்டிருப்பார்களா? அல்லது அகதிகள் பற்றி யுத்த அவலங்கள் பற்றிச் சாதாரண மக்களுக்கு ஏதாவது இவர்கள் எழுதியிருக்கிறார்களா?'' என்று கேட்ட லூசியன் சிலபிரதானமான சிங்கள பத்திரிகைகள் ஆசிரியர் தலையங்களிலேயே சாதி, இனவாதம் போன்ற விடயங்களைக் கக்குகின்றது என்று தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி (JVP) தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற அரசுக்கெதிரான இயக்கங்கள் கூட மாற்றுக் கருத்துக்களுக்கோ, பத்திரிகைச் சுதந்திரத்துக்கோ ஒருபோதும் இடம் தந்த

→

நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
4,ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380



## தேசிய வாதத்தின் எல்லைகள் - 2

### தேசியவாதப் போராட்டமும் தேசிய விடுதலைப் போராட்டமும்

எந்தத் தேசிய அடையாளமும் ஒரேமாதிரியானதாக- மாறற்ற ஒன்றாக இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை. ''தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்க்கோர் குணமுண்டு;'' என்று சும்மா பாடிவிட்டுப் போனாலும் இந்தக் ''குணம்'' காலங்காலமாக மாறியே வந்துள்ளது.

நீண்ட காலமாக இலங்கைக்கு வெளியே வாழ்ந்து வந்த தமிழர்களில் சிலர் எண்பது களின் நடுப்படுதியில் யாழ் திரும்பி வந்த போது தமிழ் பேசத் தெரியாத காரணத்தாலும், ஊர்ப் பரிச்சயமின்மையாலும் ''வெளியார்கள்'' என்றும் அரச உளவாளிகள் என்றும் கொல்லப்பட்டமையை நாம் அறிவோம்.

இன்று தமிழ் மொழியே பேசத் தெரியாத ஒரு பெரிய தலைமுறை வெளிநாடுகளில் வளர்கிறது. இவர்களுக்கு இன்றைய தமிழ்த் தேசியவாதத்துள் இடம் கிடைக்குமா என்ற கேள்வியில் தேசிய வாதங்களின் அடிப்படையான ஒரு எல்லைப்பாடு தங்கியுள்ளது. இது யார் தமிழர்கள், யார் தமிழரல்லாதவர் என்று தீர்மானம் எடுப்பதிலுள்ள நுணுக்கமான பிரச்சினைகளைக் காட்டுகிறது. இத்தகைய சூழலில் தான் தேசியவாதத்தின் எல்லைப்பாடுகளையும் தேசிய விடுதலையின் சாத்தியப்பாடுகளையும் பற்றி நாம் கவனங் கொள்ள வேண்டிய தேவை எழுகிறது.

பல சந்தர்ப்பங்களில் தேசியவாதத்தையும் தேசிய விடுதலையையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பி விடுகிற ஒரு நிலைமையை அரசியலிலும் கலாசாரத்திலும் பார்க்கலாம். பிரித்தானியர்களுக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் மற்றும் அவர் போன்ற ஏனைய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிராக எழுந்த கொலனித்துவத்தினால் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் தேச விடுதலைப் போராட்டங்கள் என ஆரம்பத்தில் அழைக்கப்பட்டன. இந்திய விடுதலைப் போராட்டம் ஒரு நல்ல உதாரணம். இந்தப் போராட்டங்கள் அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கெதிரான போராட்டங்கள் என்ற வகையில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்த போதிலும் 'விடுதலை'யின் பின் அந்நிய ஏகாதிபத்தியம் இருந்த இடத்தில் சொந்த நாட்டு உயர் வர்க்க, மேலோங்கிகளின் ஆட்சியே நிறுவப்பட்டது. தேசிய எழுச்சி பரவலாக மக்கள் அனைவரையுமே உலுப்பி விட்டிருந்தாலும் ஒரு இறுதி ஆய்வில் மேலோங்கிகளான ஒரு சிறு வர்க்கத்தினரே ஆட்சியைப் பிடித்து விடுகிறார்கள். இந்திய, இலங்கை வரலாற்றில் மட்டுமன்றி ஆபிரிக்க நாடுகளின் வரலாற்றிலும் இதுவே இடம் பெற்றுள்ளது. எல்லா மனிதர்களுக்கும் சமத்துவமான வகையில் விடுதலையைப் பெற்றுத் தரும் ஒன்றாக அத்தகைய போராட்டங்கள் அமையவில்லை. இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் அந்நியரின் ஆட்சி பெயரளவிலேயே நீக்கப்பட்டது. சிந்தனையிலும் வாழ்க்கை முறையிலும், கல்வி அமைப்பிலும், மொழியிலும் அரசியலிலும் அந்நியராட்சியின் மொத்த வடிவத்தையே சுதந்திரத்துக்குப் பின்பு ஆட்சிக்கு வந்த எல்லா உள்ளூர் அரசுகளும் பின்பற்றின. எனவே இந்திய தேசிய வாதமும் சரி, இலங்கைத் தேசிய வாதமும் சரி இவை போன்ற வேறு தேசிய வாதங்களும் சரி மானுட விடுதலைக்கான எந்தவொரு ஒழுங்கு முறையையோ திட்டத்தையோ கொண்டிருக்கவில்லை. இதனால் தான் சுதந்திரத்துக்குப் பிற்பாடும பலவகையான மக்கள் போராட்டங்கள் எழலாயின.

நாங்கள் வலியுறுத்த விரும்புவதென்னவெனில், அந்நியரிடமிருந்து சுதந்திரம் பெறப் போராடிய ஒரு தேசியவாதத்துக்கும் சரி, சுதந்திரத்திற்குப் பிற்பாடு இந்த நாடுகளில் இனத்துவத்தின் அடிப்படையில் எழுந்த தேசிய வாதங்களுக்கும் சரி ( சீக்கிய, வங்காளி, தமிழ்) அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன. எனினும், இவையனைத்தையும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் என்றோ அல்லது விடுதலைப் போராட்டங்கள் என்றோ வரையறை செய்வதில் மிகுந்த தடங்கல்கள் உள்ளன.

விடுதலையும் தேசிய விடுதலையும் எங்களுடைய புரிந்து கொள்ளலின்படி சமத்துவம், சுதந்திரம், மானுடம் ஆகிய விழுமியங்களின் மேல் கட்டப்படுவது. இந்த சமத்துவம், இனத்துவ சமத்துவம் மட்டுமல்ல. பொருளாதார சமத்துவம், பால் அடிப்படையிலான சமத்துவம் போன்ற அனைத்தையும் உள்ளடக்க வேண்டும்.

பல தேசியவாதப் போராட்டங்கள் ஆரம்பத்தில் இத்தகைய இலட்சியங்களை முன் வைத்துப் போராட ஆரம்பித்தாலும் இடை நடுவில் இந்த இலட்சியங்களை இழந்து விடுவதைப் பார்க்கிறோம். ஒரு போராட்டம் விடுதலைப் போராட்டமாக இருக்கிறதா அல்லது விடுதலைப் போராட்டமாகப் பரிணமிப்பதற்குரிய வித்துக்களையாவது கொண்டிருக்கிறதா என்பதை இனங்கண்டு கொள்வது மிகவும் சுலபமானதும் தெளிவானதுமான ஒரு விஷயம் ஆகும்.

பின்வரும் அம்சங்களில் ஒரு போராட்டம் என்னவகையான நிலைப்பாடுகளை எடுக்கிறது, அல்லது நடைமுறையில் கைகொள்கிறது என்பது இந்த வகையில் எமக்கு முக்கியம்:

(அ) நிலம் மற்றும் உற்பத்தி சாதனங்களின் உரிமைப்பாடு.
(ஆ) பால் (GENDER) மற்றும் பெண்நிலைவாதம் தொடர்பான நடைமுறை.
(இ) சாதிமுறை குறித்த கருத்தியல்
(ஈ) ஏனைய தேசிய இனங்கள் குறித்த நிலைப்பாடு

இத்துடன் கூடவே, ஒரு போராட்ட இயக்கமானது உள்ளார்ந்த ஜனநாயகம், மாற்றுக் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம், போன்ற அம்சங்களில் ஜனநாயகத்துவம் கொண்டதாக அமைகிறதா எனும் அம்சமும் மிகவும் முக்கியமாகிறது.

ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்ற ஒரே காரணத்தினால் மட்டும் எந்தப் போராட்டத்துக்கும் கண்மூடித்தனமாக அங்கீகாரம் கிடைப்பதில்லை. அதுபோலவே மேற்கூறிய அம்சங்களில் அடிப்படையிலேயே பிழையான நிலைப்பாடுகளிலிருந்தால் விடுதலை என்ற குறிக்கோள் தவறிப் போய் விடுகிறது. அப்படியான ஒரு நிலையில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெறுமனே தேசியவாதப் போராட்டங்களாகக் குறுகி விடுகின்றன. *


இத்தகைய தேசியவாதப் போராட்டங்களில் மானுடம் சுடர் விடுவது சாத்தியமில்லை. மேலும் இத்தகையதொரு சூழலில் ''விடுதலை'' என்னும் உன்னதமான கருதுகோள் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினரின் அல்லது குழுவினரின் தன்னலம் மட்டுமே சார்ந்த தேசியவாதமாகச் சீரழிந்து விடும். தமிழர்களின் விடுதலையையும், முஸ்லீம்களின் விடுதலையையும் பற்றிப் பேசுவோர், அதற்காகப் போராடுவோர் இந்த அடிப்படையான உண்மையைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது ஒரு கட்டாய பாடமாகும். சிந்திக்கிறார்களா?

# சரிநிகரிலும் சாதித்திமிரா ?

இதழ் 48இல் திரு.டேவிட் நந்தகுமாரின் எதிலிருந்து தொடங்குவது-10 என்ற கட்டுரையில் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகத்தைப் பற்றியும் எழுதுகின்றார். நன்று; நன்றிகள். ஆனாலும் சில பாத்திரங்களை வயதானவர்கள் என்று தெரிந்தும் சின்னதம்பி என்று வெறுமனே பெயர் சூட்டி எழுதியுள்ளார். அதுதான் பரவாயில்லை என்று வைத்துக் கொண்டாலும் 'எடா, அவன், இவன்' படவே எழுதியுள்ளார். அதே வேளை தன்னுடைய உறவினர் என்றபடியாலோ என்னவோ சரவணமுத்துவை சரவணமுத்தண்ணர் என்று குறிப்பிட்டுள்ளார். நீதிக்கும் சமத்துவத்துக்குமுரிய பத்திரிகையில் இப்படி இனங்காட்டி எழுதுவதை தவிர்த்தல் நன்று.

சாதித்திமிரின் ஒரு வெளிப்பாடே இது. நாம் இந்தியாவுக்கு காட்டிக் கொடுத்தோ, சிங்களவருக்கு வால் பிடித்தோ உரிமை நிலை நாட்டியதில்லை. இப்போதுள்ளவர்களும் துப்பாக்கி ஏந்தமுன், நாம் ஏந்திப் போராடி நிலை நிறுத்திய மானத்தை இப்படி இழிவுபடுத்தி பாரபட்சமாக எழுதி டேவிட் பாழாக்க வேண்டாம். நாம் போராடிய போது சங்கானை வியட்நாமாக மாறியுள்ளதென்று திரு.அ.அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் எம்மைக் காட்டிக் கொடுத்து பேசியதை ஞாபகப்படுத்திக் கொள்ளவும். திரு.சி.சுந்தரலிங்கம், திரு. மாவை சேனாதிராஜா அவர்களும் மாவிட்டபுரக் கோவிலுக்குள் எம்மை செல்ல விடாது தண்ணீர் ஊற்றியதையும், கொதி தேங்காய் எண்ணெய் எமக்கு மேல் ஊற்ற தாயாராக இருந்ததையும், மிளகாய்த்தூள் வைத்திருந்ததையும், பெற்றோல் போத்தல்கள் வைத்திருந்ததையும் தயவு செய்து சற்று நிதானமாகச் சிந்தித்துப் பார்க்கவும். குரும்பசிட்டியில் தோட்டம் செய்ய வரும் தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு எதில் உணவும், எதில் தேனீரும் கொடுத்தார்கள் அல்லது கொடுத்தீர்கள் என்பதையும் சிந்தியுங்கள். மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் நீங்கள் நடாத்திய திருவிளையாடல்களையும் யோசித்து அதையும் உங்கள் கட்டுரையில் புகுத்துவது மிகவும் நன்று எனக் கருதுகிறேன்.

**சி.ஞானம்**
**பத்தரமுல்ல**




# கூட்டணியின் துரோகம் ?

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்த மட்டில் வரவுள்ள தேர்தலில் ஒருமித்துப் போட்டியிடுவது என்பது நடைபெறக் கூடியதான அறிகுறிகள் நழுவிக் கொண்டே செல்லுகின்றது. ரி.யு.எல்.எப்பினரின் அண்மைக்கால அறிக்கையிலிருந்து இதனை அறியக் கூடியதாக வுள்ளது. அவர்களின் அறிக்கையில் ''நாங்கள் எந்தவொரு கட்சியுடனும் இணைந்து போட்டியிடுவது இல்லையெனவும், கூட்டணியின் தனித்துவத்தை காப்பாற்றுவதற்காக நாங்கள் தனித்தே போட்டியிடவுள்ளோம் என்றும் தெரியப்படுத்தி இருக்கின்றார்கள். மேற்குறிப்பிட்ட நிகழ்விலிருந்து ஒரு உண்மையை உணரக் கூடியதாகவுள்ளது. எந்தவொரு கட்சியிடனும் கூட்டணியினர் இணைந்து கொள்ளப் போவதில்லை என்பது. கூட்டணியினர் எந்த அடிப்படையில் இந்த முடிவுகளை எடுத்தார்கள்? இந்த முடிவுகளினால் இவர்களின் தனித்தவம் காப்பாற்றப்படுமா? என்பதற்கான பதிலை இனிவரும் காலமும், தேர்தலும் தான் பதில் சொல்ல வேண்டும்.

'உள்ளூராட்சி தேர்தலின் போது, கிழக்கில் சகஜ நிலை தோன்றவில்லை இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கான அறிகுறிகளே யில்லை. இப்படியான ஒரு நிலைமையில் நாங்கள் இத்தேர்தலை பகிஸ்கரிக்கின்றோம்' என்று அறிக்கை விட்டவர்கள் இப்போது கிழக்கில் சகஜ நிலை தோன்றிவிட்டது. இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான அறிகுறிகள் வந்துவிட்டது என்றா மக்கள் முன் வாக்குகள் கேட்கப் போகின்றார்கள்? இவர்களின் இந்த சந்தர்ப்பவாத அரசியலை இன்றைய தலைமுறையினர் ஏற்றுக் கொள்வார்களா?

ஏனைய தமிழ் கட்சிகளான ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.பி.டி.பி, ஈரோஸ் ஏனைய கட்சிகள் இதுவரை ஒரு நிலையான முடிவுக்கு வந்து கொள்ளவில்லை. ஆயினும் இக்கட்சிகள் யாவும் இணைந்து போட்டியிட்டால் கூட்டணியினர் தங்களுடைய தனித்துவத்தை காப்பாற்றிக் கொள்வார்களா? இவர்களின் எண்ணம் தண்ணீரில் எழுதிய எழுத்துப் போல் ஆகிவிடக்கூடாதா? அறிவில் சிறந்தவர்கள் சற்று ஆறுதலாக ஆலோசித்து முடிவுகளை எடுத்துக் கொண்டால் இவர்களின் பின்னால் எல்லோரும் செல்வார்கள். திடீரென்ற முடிவினால் எமது வாக்குகள் அல்லவா பிரிக்கப்படுகின்றன. இதனால் யாருக்கு நன்மை ஏற்படப்போகின்றது.

சிலவேளைகளில் கூட்டணியினரால், ஏனைய தமிழ் கட்சிகளிடம் ஒற்றுமையில்லை. இதனால் நாங்கள் தனித்து போட்டியிட்டால் வெற்றிவாகை சூடலாம் என்று நினைத்துத்தான் தனித்து போட்டியிடுவது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கும் என்றால் இந்த முடிவுகளை மறுபரிசீலனை செய்வது சாலச்சிறந்தது.

ஏனைய தமிழ் கட்சிகளில் ஒன்று இரண்டு தவிர்ந்த ஏனைய கட்சிகள் இணைந்து போட்டியிட்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனைய கட்சிகளில், இணைந்து போட்டியிட வேண்டும் என்ற கருத்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. இக்கருத்து கட்சி தொண்டர்கள் மத்தியில் வலுப் பெற்றுக் கொண்டு வருகின்றது.

**சென்ற பாராளுமன்ற தேர்தலில் இணைந்து போட்டியிட்டுக் கூட கூட்டணியினரின் முக்கிய தலைவர்கள் கணிசமான வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி கண்டும் இருக்கின்றார்கள்.** கூட்டணியின் சின்னத்தில் தான் சென்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழ் கட்சிகள் போட்டியிட்டிருந்தன. இப்படி இணைந்து போட்டியிட்டதால் சில பாராளுமன்ற உறுப்பினர்களின் மறைவை தொடர்ந்து காலியாகவிருந்த இடங்களுக்கு தங்கள் பிரதிநிதிகள் வரவேண்டியிருந்த வேளையில் கூட்டணியினர் துரோகம் செய்து விட்டார்கள் என்று ஈ.பி.ஆர்.எல்.எப். குற்றம் சாட்டுகின்றது. இந்த நிலைமையில் இக்கட்சி கூட்டணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கில்லை.

இன்றைய வாக்காளர்களில் பெரும்பாலானோர் இளைய தலைமுறையினராக இருப்பதால் இவர்களின் வாக்குகள் எல்லாம் கூடுதலாக ஆயுதம் தாங்கி போராடி பின்பு அரசியல் நீரோட்டத்துக்கு வந்துள்ள கட்சிகளுக்கே சென்றடையும். இதனால் ஏனைய தமிழ் கட்சிகளிடம் கூட்டணியினரும், ஏனைய தமிழ் கட்சிகள் யூ.என்.பி, எஸ்.எல்.எப்.பி. போன்ற கட்சிகளிடமும் தோல்வியுறும் நிலைமை எற்படக் கூடிய நிலைமையும் தோற்றுவிக்கப்படலாம்.

தமிழர்களாகிய எமது தனித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், எமது பாரம்பரிய பிரதேசம் எம்மவர்களினால் ஆளப்பட வேண்டும் என்றால், எமது பிரச்சினையை வெளியுலகிற்கு வெளிப்படுத்த வேண்டும் என்றால் எல்லா தமிழ் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவதன் மூலமே எமது மக்களின் எதிர்பார்ப்புக்களை ஓரளவுக்காகவது நிறைவேற்றக் கூடியதாக இருக்கும்.

**எஸ்.அன்ரன்**
**மன்னார்**

நன்றி - நூலகத்திட்டம்



# சுவிஸுக்கு

## இலங்கைத் தமிழரில் அக்கறையா ? இலங்கை அரசில் அக்கறையா ?

இலங்கையில் வடக்கு கிழக்கில் தொடர்ந்து கொண்டிருக்கும் போரினாலும், எமக்கு அங்கு போதிய பாதுகாப்பு இல்லாத காரணத்தாலும், பல ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிலும் அகதி நிலை கேட்ட வண்ணம் இருக்கறோம். கடந்த சில.மாதங்களாக சுவிட்சர்லாந்தில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு சுவிஸ் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இலங்கையின் தென்பகுதியில் சுமூகமான நிலைமை இருப்பதாகவும் அங்கு தமிழர்கள் பிரச்சினைகளின்றிப் பாதுகாப்பாக வாழலாம் எனவும் சுவிஸ் அரசு கூறி வருகிறது. இலங்கையின் தென்பகுதியில் நடந்த தமிழர் அழிப்புகளை இந்த ஐரோப்பிய நாடுகள் மறந்துவிட்டன போல் தெரிகிறது. இன்றும் தென்னிலங்கையில் சிறைச்சாலைகளிலும், பொலிஸ், ராணுவ, புலனாயவு நிலையங்களிலும் எத்தனை தமிழ் இளைஞர்கள் சித்திரவதைகளுக்கு ஆளாகிறார்கள் என்பதும், எத்தனையோ இளைஞர்கள் காணாமல் போய்விட்டனர் என்பதும் சிலருக்கு தெரியாமல் இருக்கலாம். இலங்கையில் சேவைபுரியும் ஐக்கியநாடுகள் அகதிகள் ஆணையாளர் (UNHCR) சர்வதேச செஞ்சிலுவை சங்கம் (ICRC) போன்றவற்றுக்கு இவை தெரியாமல் இல்லை. இப்படியிருக்க இங்கிருக்கும் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு சுவிஸ் அரசு இலங்கை அரசுடன் பேசி, ஒரு ஒப்பந்தமும் செய்துள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக சுவிஸ் தமிழர்கள் மூன்று நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து இறுதி நாள் அன்று ஒரு மகஜரை சுவிஸ் அகதிகள் திணைக்களத்துக்குக் கொண்டு போய் கொடுத்தார்கள்.

இதனை. சுவிஸ் தமிழர் பண்பாட்டுக் கழகம் ஒழுங்கு செய்திருந்தது. இவற்றில் மிகவும் வேடிக்கையான விடயம் என்னவெனில் உலக அரங்கில் மனித உரிமைகள் சம்பந்தமாக உரத்த குரலில் பேசும் சுவிட்சர்லாந்து, மனித உரிமைகள் என்னவென்று தெரியாத இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்திருக்கிறது.

மற்றைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சுவிஸில்தான் மிகவும் குறைவான தமிழ் அகதிகள். (கிட்டத்தட்ட 35,000 ற்குள்) இது கூட சுவிஸ் அரசாங்கத்திற்கு பாரமாகத் தெரிகிறது. உண்மையிலேயே இலங்கைத் தமிழரில் அக்கறையுள்ள நாடாக சுவிஸ் இருந்தால் வடக்கு, கிழக்கில் நடக்கும் பல மோசமான மனிதப் படுகொலைகளை நிறுத்தும்படி இலங்கை அரசை வற்புறுத்தலாம். அதுமட்டுமல்ல சென்ற நான்கு வருடங்களாக அமுலில் இருக்கும் பொருளாதார தடை, மருந்து, எரிபொருள், மின்சாரம், விவசாயம் சம்பந்தமான எல்லா தடைகளையும் நீக்கும்படி வற்புறுத்தலாம். அல்லது இலங்கைத் தமிழரின் பிரச்சினையில் ஐக்கிய நாடுகளின் தலையீட்டுக்காவது ஆலோசனை செய்திருக்கலாம். எதுவுமில்லாமல் அங்கே பிரச்சினை இல்லையென்று சொன்னால் மட்டும் போதுமா? இலங்கையில் பணிபுரியும் சர்வதேச செஞ்சிலுவை சங்க ஊழியர்களையே சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் இலங்கை அரசு எமக்கு மட்டும் எங்கே பாதுகாப்புத் தரப்போகிறது?

சுவிட்சர்லாந்தை பொறுத்தமட்டில் சுவிஸ் பிரஜைகளுக்கே வேலையில்லாப் பிரச்சினை நிலவுவது உண்மைதான். ஆனால் நாம் இங்கு செய்யும் வேலைகளை அவர்கள் செய்யமாட்டார்கள். அவ்வளவு கேவலமான வேலைகளை செய்து கஷ்டப்பட்டுக் கொண்டுதான் எமது மக்கள் இங்கு வாழ்கிறார்கள். இது கூட அவர்களுக்குப் பாரமாகத் தெரிந்தால் இலங்கை அகதிகளுக்கு தஞ்சம் கொடுக்காமல் இருந்திருக்கலாம். அல்லது இனி மேலாவது நிறுத்தலாம். இரண்டும் இல்லாமல் எம்மை பலிக்கடாவாக்குவது ஒரு மனித உரிமை மீறல் என்றுதான் சொல்லமுடியும்.

பாலன்
சுவிற்சர்லாந்து

# இது தேர்தல் கால வாக்குறுதி!

மலையக தோட்டத் தொழிலாளர்கள் மீது அக்கறை கொள்ளும் விதத்தில் அரசு பல செய்திகளை பத்திரிகைகளில் வெளியிட்டு வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

அரசாங்கத்தின் இந்தச் செய்திகளின் உண்மை நிலை, அதன் பின்னணி ஆகியவற்றை நாம் ஆராய்ந்து பார்த்தோமானால், இவ்வாண்டு டிசம்பரில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலின் எதிரொலிதான் இந்த செய்திகளின் வெளிப்பாடு என்பதை நன்கு உணரக்கூடியதாக இருக்கும்.

இந்த நிலையில் அரசாங்கத்தின் இத்திடீர் கரிசனையை சற்று சீர்தூக்கிப் பார்த்து நடைபெறவிருக்கும் தேர்தலின் போது சிந்தித்து செயல்பட வேண்டியது மலையக மக்களினதும் தோட்டத் தொழிலாளர்களதும் கடமையும், அவசியமுமாகிறது.

இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த, செய்து கொண்டிருக்கும் அரசாங்கம் மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தின் உயர்வு பற்றி சிறிதேனும் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை எடுத்துக் கொண்டால், அவர்கள் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னர் எந்த நிலையில் வாழ்ந்தார்களோ அதே நிலையில் தான் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் சிறிதேனும் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இன்று ''கம்உதாவ'' என்ற பெயரில் அரசு பல கிராமங்களை அபிவிருத்தி செய்து அக்கிராம மக்களுக்கு காணிகள் வழங்கி நவீன வீடுகள் அமைத்துக் கொடுத்துள்ளது. அத்தோடு, மின்சார வசதி, மலசலக்கூட வசதி, மருத்துவ வசதிகள், தண்ணீர் வசதிகள், விளையாட்டு மைதானங்கள் போன்றவைகளையும் வழங்கி அக்கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றியுள்ளது.

ஆனால் அந்த முன்னேற்றத்தில் சிறிதேனும் தோட்டத் தொழிலாளர்களிடத்தில் காட்டப்படவில்லை. அவர்கள் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த அதே லயன் காம்பராவில் தான் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த லயன் காம்பரா எவ்வித மாற்றமுமின்றி தனது நூற்றாண்டு விழாவையும் நிறைவு செய்துள்ளது வேடிக்கையும், அதேசமயம், வேதனையும் நிறைந்த ஒரு செயலாகும்.

இன்று தோட்டத்துறையை எடுத்துக் கொண்டால், அங்கு தோட்ட மக்களுக்கென சுகாதார வசதி வீட்டு, மின்சார வசதி, இவைகள் இல்லை. மின்சாரம் பெற வேண்டுமென்றால், தொழிலாளர்கள் தங்களது சொந்த பணத்தில் தான் மின்சாரம் பெற வேண்டும். தோட்ட வைத்தியசாலையில் போதிய மருத்துவ வசதிகள் இல்லை. இவற்றை எல்லாம் எமது மலையக மக்கள் உணர்ந்து செயல்பட வேண்டிய காலம் வந்துவிட்டது.

நாம் இவ்வளவு காலமும் பல அரசியல்வாதிகளின் ஏமாற்று வித்தைகளுக்கு ஆட்பட்டு பொன்விழா கண்டோம். எனவே வரப் போகும் தேர்தலிலாவது நாம் எமது சலுகைகள் கிடைக்கும் வகையில் எமது வாக்குகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அதற்கான ஓர் சந்தர்ப்பம் நம்மை எதிர்நோக்கியுள்ளது.

எஸ்.சதானந்தன்
நுவரெலியா

# திருமலை

## உவர்மலை தமிழ் வித்தியாலய அதிபர் நியமனத்தில் அரசியல் செல்வாக்கு

திருகோணமலை உவர்மலை தமிழ் வித்தியாலய பெற்றோர்கள், நலம் விரும்பிகள் எழுபதுபேர் கையெழுத்திட்டுக் கல்லூரி அதிபர் திரு.எஸ்.நவரெட்னம் அவர்களுக்கு எதிராகக் கடுங்கண்டனம் ஒன்றை வடக்கு கிழக்கு மாகாண கல்வி, கலாசார அமைச்சுக்கு அனுப்பியுள்ளனர்.

அதன் சாரம்சம்: திரு.எஸ்.நவரெட்னம் உவர்மலை தமிழ் வித்தியாலய அதிபராக முன்னாள் கல்விச் செயலாளர் ஜனாப்.எம்.ஏ.காதர் மொகைதீனின் அனுக்கிரகத்தாலும் உதவியாலும் நியமிக்கப்பட்டு 01.04.1992 முதல் கடமையாற்றுகிறார். தான் பதவிக்கு வருவதற்காகவும் முன்னாள் அதிபர் திரு.எம்.மகாதேவனை அதிபர் பதவியிலிருந்து அப்புறப்படுத்துவதற்காகவும் திரு.நவரெட்னம் முன்னாள் கல்விச் செயலாளர் ஜனாப்.எம்.ஏ. காதர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் செயலாளர் ஆகியோருடன் இணைந்து பல அவதூறுப் பிரசாரங்களிலும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

திரு.எஸ்.நவரெட்னம் அதிபராக வருவதற்கு எடுத்த ரகசியத் திட்டத்தை ஆராய்ந்த பெற்றோர் உண்மையை வெளிக் கொணரவும், பாடசாலையின் அபகீர்த்தியைப் போக்கவும் உடனடியாக ஒரு விசாரணையை நடத்த வேண்டுமெனக் கோரி 150 க்கு மேற்பட்ட பெற்றோர் கையொப்பமிட்ட விண்ணப்பத்தை கல்வி அமைச்சின் செயலாளரிடம் கையளித்த போது செயலாளர் அதனை ஏற்க மறுத்ததால் அது வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. அவர் இது விடயமாக விசாரணை ஒன்றை நடத்துமாறு கல்விச் செயலாளர் ஜனாப்.எம்.ஏ.காதர் முகைதீனைப் பணித்தும் அக்கட்டளை நிறைவேற்றப்படவில்லை. அதிபர்.திரு.எம்.மகாதேவனும் தன் நற்பெயரை நிலைநாட்டும் பொருட்டு ஒரு விசாரணை நடத்தப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட போதிலும் அது திரு.எஸ்.நவரெட்னத்திற்கும் கல்விச் செலயாளருக்கும் பிரச்சினையை ஏற்படுத்துமென்ற காரணத்தால் இன்றுவரை அவ்விசாரணை நடத்தப்படவில்லை. இதே வேளை திரு:எம்.மகாதேவனுக்கு நீதி வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட ஆசிரியர் அனைவரும் இடமாற்றம் செய்யப்பட்டனர், ஏனையோர் அடக்கப்பட்டனர்.

திருகோணமலையில் 1993ல் நடைபெற்ற ஜனாதிபதி சேவையின் போது பெற்றோர் சார்பில் திரு. ஜோன்.ஏப்ரம்காம் அவர்களால் இதுபற்றி நீதி விசாரணை நடத்தப்பட வேண்டுமெனக் கேட்கப்பட்ட போதிலும் இவ்விடயம் செயலாளர் ஜனாப் எம்.ஏ.காதர் முகைதீனின் அரசியற் செல்வாக்கால் நசுக்கப்பட்டது. எமது பாடசாலையின் கௌரவத்தைக் கருதி இவ்விடயத்தில் விசாரணை ஒன்றை மேற்கொண்டு நீதி வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். இது சாத்தியமில்லையெனின், தன்நலனுக்காக பாடசாலையின் பெயரை மாசுபடுத்திய இப்போதைய அதிபர் திரு. எஸ்.நவரெட்னத்தை உடனடியாக மாற்றி பாடசாலையின் கௌரவத்தைக் காப்பாற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

திரு.எஸ்.நவரெட்னம் பாடசாலை நிர்வாகம் பாடசாலை, அபிவிருத்தி என்ற பெயரில் தன் சுயநலத்திற்காக பாடசாலையை ஒரு வியாபார ஸ்தலமாக மாற்றி வருவது எமக்கு பெரும் வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகிறது. உதாரணமாக 1992ல் பாடசாலை பரிசளிப்பு விழாவுக்கு சேர்க்கப்பட்ட நிதியும், 1993ல் பாடசாலை வாசிகசாலைக் கட்டிடம் கட்டவும், விளையாட்டுப் போட்டி நடத்தவும் மாணவர்கள் மூலம் ரிக்கட் விற்று சேகரிக்கப்பட்ட பெரு நிதியும் அதிபரினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதென அறிகிறோம். இதற்குரிய வரவு செலவு கணக்குகள் கல்வி அதிகாரிகளுக்கோ பாடசாலை அபிவிருத்தி சபைக்கோ இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என அறிகிறோம். இவ் ஊழல்களையும் விசாரணை செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

எமது பாட்சாலை 'சி' தரமுடையதாகும். இதற்கு 1ம் தர அதிபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியிருந்தும் சேவையில் குறைந்த 2ந் தர அதிபரான திரு.எஸ்.நவரெட்னத்தை அதிபராக வைத்திருப்பது கவலைக்குரியதாகும். இதே வேளை 1ம் தர அதிபர் ஒருவருக்கு பாடசாலை கொடுக்கப்படாமல் திருகோணமலை கோட்டக் கல்வி அலுவலகத்தில் ஆசிரிய ஆலோசகர் என்ற போர்வையில் கடமையாற்றுகிறார். அதுமட்டுமன்றி பாடசாலை மூடப்பட்டுள்ளதென்ற போர்வையில் திருகோணமலை பிர்ாந்தியக் கல்வி அலுவலகத்தில் 1ம் தர அதிபர் ஒருவர் எழுதுவினைஞராகக் கடமையாற்றுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இவரை விட 2ந் தர அதிபர் சேவையில் மூப்புடைய பலர் சிறிய பாடசாலைகளில் கடமையாற்றுகின்றார்கள். இத்தனையும் இருக்க சேவையில் குறைந்த 2ம் தர அதிபரான திரு.எஸ்.நவரெட்னம் 1ம் தர பாடசாலையின் அதிபராக இருப்பதுடன் பாடசாலையின் தரத்தைப் பயன்படுத்தி 1ம் தர அதிபர் பதவிக்காக முயற்சிப்பதும், அதற்கு அனுசரணையாக அதிகாரிகள் நடந்து கொள்வதும், ஒரு தனிநபரின் நலனுக்காக ஒரு ஸ்தாபனத்தில் ஊழல்கள் மலிய அனுமதிப்பதும் பெற்றோராகிய எமக்கு வேதனையையும் வியப்பையும் அளிக்கிறது.

அதிபர் திரு.எஸ்.நவரெட்னம் தன் ஊழல்களை மறைக்க தனக்கு சாதகமாக இயங்கி வரும் பாடசாலை அபிவிருத்திச் சபை அங்கத்தவர்களை, அரசாங்க சுற்று நிருபத்திற்கமைய காலத்துக்குக் காலம் தெரிவு செய்யாது தொடர்ந்தும் அவர்களையே பாடசாலை அபிவிருத்திச் சபையில் வைத்திருப்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

நன்றி - நூலகத்திட்டம்



# செய்துமுடி! அல்லது செத்துமடி!!

## எதிலிருந்து தொடங்குவது? - 8

ஆச்சரியம். வல்லிபுர மண்ணை எப்போதும் சுதந்திரம் பற்றிக் கதைத்தார். வாசிகசாலையில் அவர் நிகழ்த்துகிற விவாதங்களுக்கு அளவில்லை.

நாம் சோறு பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தோம்.

இந்தப் பாணை என்ன செய்தால் சாப்பிடலாம்? புழு இருக்கிறது. அவியவில்லை. உதிர்கிறது. சரசு சொன்னார்; ''புட்டு அவிக்கிற மாதிரி நீத்துப்பெட்டியிலை வைச்சு அவிச்சுப் பாருங்கோ. சோக்காயிருக்கும்.'' அவித்த போது, சுடச்சுடத் தின்ற போது அமிர்தமாக இருந்தது. தேங்காய்ப்பாலில் சீனியைக் கரைத்த, பாண் துண்டை தோசைக் கல்லில் சுட வைத்து, சீனியைக் கரைத்து தேங்காய்ப்பாலைப் பாணில் சிறிது சிறிதாக ஊற்றி, பொன்னிறமாகப் பாண் பொரிந்து வருகிற போது, எடுத்துச் சுடச்சுட ஊதிச் சாப்பிட்டால், அமிர்தம் தேவாமிர்தம். கண்டு பிடித்தவன் வாய்க்குச் சர்க்கரை போடு.

விடியலில், சூரியன் நித்திரை விட்டெழுகின்ற சமயம், பின்தோட்டத்தினூடாக துரைராசண்ணர் கடைக்குப் போனால் (அது சங்கக் கடையாகவும் இயங்குகிறது.) பண்டத்தரிப்புப் பேக்கறிப் பாண் கிடைக்கலாம். துரைராசண்ணர் இரக்கம் வைத்தால் சிறிது அதிகமாகவும் கிடைக்கலாம்.

பாண் கிடைக்காத காலைப் பொழுதுகளில் தோட்டத்துக்குள் புகுந்து இரண்டு மரவள்ளித் தடியை இழுக்க வேண்டியதுதான். கிழங்கு அவித்துச் சாப்பிடலாம். ஒருசம்பல் போதும். பிடரியிலிருந்து வியர்வை ஒழுக, ஒழுக, சுடச் சுட வாய்க்குள் போட வேண்டியது. நல்ல கிழங்கு, மாப்பிடிப்பான கிழங்கென்றால், வாய்க்குள் கரைந்து கொண்டு செல்லும்.

ஆனால் கொடுமை என்னவென்றால், மரவள்ளித் தடியை இழுக்கிற போது, பலர் தோட்டத்துக்குள் வந்து விடுவார்கள். காசை நீட்டியபடி தங்களுக்கும் கிழங்கு வேண்டும் என்பார்கள். எல்லார்க்கும் கிழங்கு பிடுங்கத் தொடங்கினால், பள்ளிக்கூடம் போவதற்கு நேரம் கிடையாது. பிடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும். வந்து கொண்டே இருப்பார்கள். ஐயா திட்டுவார்.

வல்லிபுரமண்ணை இவைகளில் மினக்கெடுவதில்லை. அவரும் மகன்மாரும் வியர்வை பெருகத் தோட்டம் கொத்தினார்கள். விடிகிற போது பழந்தண்ணீர் குடித்தார்கள். மதிய நேரத்தில் சாமி அரிசி அல்லது வரகரிசிச் சோறு சாப்பிட்டார்கள். இரவுச் சாப்பாடு குரக்கன் பிட்டாக இருக்கும். அவர் தோட்டத்தில் விளைகிற மரக்கறிகள் கறிகளுக்குப் போதுமானது. சந்தைக்குப் போய்வருகிற சந்தர்ப்பங்களில் மீன் வாங்குவார். ஊரில் வேள்வி நடைபெறுகிற போது ஆட்டிறைச்சி சாப்பிடுவார்கள். வெள்ளிக்கிழமை அம்மன்கோயிலில் கறுத்த உடம்பு பளீரிட கும்பிடுவார். அவர் குடும்பத்தில் ஒருவரும் பவுடர் பாவிப்பதில்லை. தினமும் குளித்தார்கள், சோப் போட்டுக் குளித்ததில்லை. நடையை அதிகம் நம்பினார். திருவிழாக் காலங்களில் நித்திரை முழித்ததில்லை. விரதம். தோட்டத்தில் நீர் இறைத்தார். பின் வந்து தேர்வடம் இழுத்தார். கறுத்த நெற்றியில் நீறு துலங்கியது.

மகன் என்னுடன் படித்தான். படிப்பில் சுமாராக இருந்தான். சுத்தத்தில் அமோகமாக இருந்தான். சிறு பாடசாலையில் படிக்கிற வரைக்கும் வேட்டி மட்டும் கட்டி பாடசாலை வந்தான். கல்லூரி சென்ற போது பிரின்சிபல் சேட் கட்டாயம் போட வேண்டும் என்று விட்டார். படிப்பையே விடுவோமோ என்று வல்லிபுரமண்ணை யோசித்தார். தன் மகனாவது படிக்கட்டும் என்று விரும்பினார். பருத்தித்துணியில், வெள்ளை நிறத்தில் சேட் தைத்துக் கொடுத்தார். மகன் கூச்சப்பட்டான். சிறுமையுற்றது போல் சினந்தான். பெரும்பாரத்தைச் சூடிக் கொண்டது போல் தவித்தான். சில நாட்களில் கவலை அவன் முகத்தில் ரேகைகளைப் பதித்தது.

வல்லிபுரமண்ணைக்கு அரசியல் வாழ்வின் முக்கிய கூறு. சந்தைக்கோ, தோட்டத்திற்கோ போக முடியாத, மதியம் சாப்பிட்டு விட்டு ஓய்ந்து கொள்கிற இரண்டு, மூன்று மணி வெய்யிலில் வாசிகசாலைக்குச் செல்வார். அப்போது வாசிகசாலையில் இருக்கிற சிவலிங்க வாத்தியாரும் நித்திரை தூங்கிக் கொண்டிருப்பார். வீரகேசரி, தினகரன், தினபதி, சுதந்திரன், மித்திரன் எல்லாவற்றையும் விரைவாக வாசிப்பார். சிவலிங்க வாத்தியார் முழிப்பாக இருந்தால், அரசியல் விமர்சனம் செய்வார். அல்லது வருகிற சிவானந்தண்ணருடனோ, கார்க்கார நாகராசண்ணருடனோ விமர்சனத்தில் இறங்கி விடுவார்.

ஒருநாள் வாசிகசாலையில் இருந்த யாவரும் திடுக்கிற மாதிரி, ஒரு கேள்வி கேட்டார்: ''ஜீ.ஜீ.தொடக்கம் இவங்களெல்லாம் பாராளுமன்றம் போய் என்னத்தைக் கண்டவங்கள்?,சிங்கள அரசு ஏதெண்டாலும் அசைஞ்சு குடுத்திருக்கா? பேந்தேன் இவங்கள் போவான்?''

எல்லார்க்கும் ஒரு அதிர்ச்சிதான் வல்லிபுரமண்ணை என்ன உளறுகிறாரா? நல்ல மனுஷன் தான். பாதகமில்லை. பக்திமான். உழைப்பாளி. வாக்கியங்களைக் கவனமாக எடுத்து வைப்பவர். இதென்ன அலட்டுகிறார்?

பாராளுமன்றம் போகாமல் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நின்று கத்துவதனால் ' மாத்திரம் உரிமை கிடைத்து விடுமா? பாராளுமன்றம் தான் இதற்குச் சரியான இடம். அங்கு போய்த் தான் போர் நிகழ்த்தலாம். சொற்றொடர் நடத்தலாம்.

**அ. டேவிட் நந்தகுமார்**

''செய்து முடி அல்லது
செத்து மடி.''

''துப்பாக்கிக் குண்டு
விளையாட்டுப் பந்து.''

''தூக்கு மேடை
பஞ்சு மெத்தை.''

இதனையெல்லாம் வல்லிபுர மண்ணை அறிவார். ஆனால் அவரிடம்.பிசாசு புகுந்து விட்டது. அது தான் இப்படிச்சொல்ல வைக்கிறது. சரி, என்னதான் செய்யச் சொல்கிறார் வல்லிபுரமண்ணை?

இப்படிச் சொல்லி விட்டு வல்லிபுர மண்ணை போய்விட்டார். இனி என்ன செய்வார்? தோட்டத்திற்குப் போவார். பொழுதுபட மாட்டுக்குப் புல் வைப்பார். ஓலை கிழித்துப் போடுவார். பால் கறப்பார். இருள், பாம்புக்கு அஞ்சாது ஒற்றையடிப் பாதையால் வீட்டுக்கு வருவார். வீட்டின் முன்புறத்தில் லாம்பு கொளுவியிருக்கும். சிறிது வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருக்கும். குடிலினுள் • கைவிளக்கு காற்றினால் படபடக்கும்.

நம்மூரில் கைவிளக்கு காற்றினால் படபடக்கிற காலத்துக்கும் ஒரு நாள் ஓய்வு வந்தது.

அப்போது நாகமணி அப்புவின் தோட்டத்தினுள்ளிருந்த இலந்தை மரத்தில் இலந்தைப்பழம் பொறுக்கப் போனேன். இனிய பழம் அது. புழுப்பிடிக்காத பழங்கள். காரை, சூரை மரம் தாண்டி, விடத்தல் மரம் தாண்டி, நாகமணி அப்புவின் தோட்டம் இருந்தது. அந்த இலந்தைமரத்திற்கு அவ்வளவாக ஒருவரும் போவதில்லை.

சண்டிக் கட்டினுள் பழம் நிரப்பி வருகிற போது, நீண்ட வாகனம் ஒன்றினுள் கறுத்த தூண்கள் கொண்டு வந்து றோட்டுக் கரையில் போடப்பட்டது. மின்சார சபையின் வாகனம். கறுப்புத் தூண்களில் 'சொலிக்கிணம்' மணத்தது.

ஒவ்வொரு நாளும் கறுப்புத் தூண்கள் கொண்டு வந்து கொட்டப்பட்டன. ஊரெங்கும் சொலிக்கிணம் மணத்தது. நாலைந்து பேராக நிலம் அளந்து கிடங்கு வெட்டினார்கள். ஒவ்வொரு நாளும் பாடசாலையால் வருகிற போது புதிய, புதிய கிடங்குகள் தோண்டப்பட்டுக் கொண்டிருந்தன. பெரிய உருளைகளில் நீண்ட கம்பிகள் சுற்றப்பட்டு வந்தன. சில வீடுகளின் வளவுகளில் இவை உருட்டப்பட்டுக் கிடந்தன.


ஊழியர் ஏலேலோ சொல்லித் தூண் நிமிர்த்தினர். நிமிர்த்திய தூண்களில் மாபிள் குமிழிகள் இருந்தன. மாபிள் குமிழிகளினூடே நான்கு வரிசையில் கம்பிகள் சென்றன. கம்பிகளினூடே கரண்ட் செல்லப்போகிறது. எங்களுக்குத் தெரிந்து விட்டது.

நம்மூரிற்கு மாயம் வந்து விட்டது. இருள் நம்மூரில் இனிக்கிடையாது. விரட்டியடிக்கப்படப் போகிறது. இருள் இல்லாவிட்டால் பேய்களுக்கு இங்கு இனி என்ன வேலை? வாலை அடக்கிக் கொண்டு, சுடலைக்குள், அந்த மரங்களில் சஞ்சரிக்க வேண்டியது தான். அம்மாள் கோயில் தெருவிளக்கில் இருந்து வருகிற சிறு வெளிச்சம் எவ்வளவு மனச்சஞ்சலத்தைத் தந்தது. இனிச் சஞ்சலம் இல்லை. விசுவையாப்பாவின் வீட்டிலிருந்து பாய் வாங்கி வருவதில் யாதொரு தடையும் கிடையாது. இரவிலும் ஒளி ஆட்சி செலுத்தப் போகிறது.

(வரும்)

# ஐரோப்பிய பாராளுமன்றம், புலி, பயங்கரவாதம், இலங்கை அரசுக்கு ஆயுதங்கள்!

இந்தவருடம் ஏப்ரல் மாதம் ஐரோப்பியப் பாராளுமன்றத்தில் இலங்கை பற்றிய ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு விவகாரங்களுக்கான ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் குழுவின் சார்பாக சிறப்பு உத்தியோகத்தர் ஜாஸ் கவ்றோன்ஸ்கி என்பவர் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார். கூடவே அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக் குழுவின் சார்பிலும் இலங்கை பற்றிய ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்


EUROPEAN PARLIAMENT

session documents

ENGLISH EDITION

REPORT

on the situation in Sri Lanka

Committee on Foreign Affairs and Security

Rapporteur: Mr Jas Gawronski

Rule 52 of the Rules of Procedure

டது. இந்த இரண்டு அறிக்கைகளையும் மையமாக வைத்தே ஐரோப்பியப் பாராளுமன்றம் தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்தும் இலங்கை அரசு குறித்தும் சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. இந்த அறிக்கைகள், தீர்மானங்கள் அனைத்தும் DOC EN/ RR/ 250/ 250466 எனப் பெயரிடப்பட்ட ஐரோப்பியப் பாராளுமன்ற ஆவணத்தில் பதியப்பட்டுள்ளன.

நிறைவேற்றப்பட்ட பதின்மூன்று தீர்மானங்களில் முக்கியமானவற்றின் சாராம்சம் பின்வருமாறு:

* ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழு, சர்வதேச மன்னிப்புச்சபை ஆகியவற்றின் தீர்மானங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் பத்திரிகைச் சுதந்திரம் உறுதி செய்யப்பட வேண்டும்.
* மனித உரிமைகள் ஆணைக்குழு ஒன்று இலங்கையில் நிறுவப்பட வேண்டும்,
* பயங்கரவாதத்தை ஆதரிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டில் ஆட்கள் திருப்பித் திருப்பிக் கைது செய்யப்படுவதை இலங்கை அரசு நிறுத்த வேண்டும்.
* பொதுவான வெளியுறவுக் கொள்கை மற்றும் பாதுகாப்பு என்ற அம்சங்களில் ஐரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் நாடுகள் தங்களது பிரதேசங்களில் இயங்கும் விடுதலைப் புலிகளின் அலுவலகங்களை மூடிவிட வேண்டும். ஏனெனில் ஐரோப்பாவின் நேசநாடு ஒன்றுக்கெதிரான (இலங்கை) பயங்கரவாத நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடுகிறார்கள். மேலும் ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் அங்கம் வகிக்கும் நாடுகளில் வாழும் தமிழர்களிடமிருந்து புலிகள் பணம் **அறவிட்டு அதனை வன்செயல்களுக்குப் பாவிக்கிறார்கள்.**
* இலங்கையில் மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் பேணவும், விடுதலைப்புலிகளதும் இலங்கை அரசினதும் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தவும் உழைக்கும் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் - யாழ்ப்பாணம், இலங்கை தாராள ஜனநாயகத்துக்கான அமைப்பு (Council for Liberal Democracy) போன்ற அமைப்புகளுக்கு ஆதரவு வழங்கப்பட வேண்டும்.
* ஐரோப்பிய பாராளுமன்றத்தின் நிரந்தரமான அலுவலகம் ஒன்று கொழும்பில் நிறுவப்பட வேண்டும்.

இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் தீவிரமாக விமர்சிக்கும் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தீர்மானங்களுக்கு அப்பால் இந்தத் தீர்மானங்களுக்கும் பின்னணியாகத் தரப்பட்டிருக்கும் அறிக்கைகள் பல மனித உரிமைக் குழுக்களில் விமர்சனத்துக்குட்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக **''அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான குழுவின் அறிக்கை''** இலங்கை அரசுக்கு ஆயுத உதவிகளும் ஆயுத விற்பனையும் செய்ய ஐரோப்பியப் பாராளுமன்ற நாடுகள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என்ற கருத்தை கனேடிய மற்றும் ஐரோப்பிய மனித உரிமைக் குழுக்களும் சமாதான இயக்கங்களும் முன்வைக்கின்றன.

மேற்படி அறிக்கையின் ஒன்பது பிரேரணைகளில் (இவற்றைத் தீர்மானங்களுடன் குழப்பிக் கொள்ளக் கூடாது) மூன்றாவது பிரேரணை விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு என்று பிரகடனம் செய்கிறது. ஏழாவது பிரேரணை இலங்கை அரசுக்கு ராணுவ உபகரணங்கள் மற்றும் கண்காணிப்புப் படகுகள் போன்றவற்றை ஐரோப்பிய நாடுகள் விற்பனை செய்வதன் மூலமே மனித உரிமைகள் இலங்கையில் பேணப்படுவதன் அவசியத்தை இலங்கை அரசுக்கு உணர்த்தலாம் என்று கூறுகிறது.

இது என்ன தர்க்க நியாயம் என்பது மாக்கிய வெல்லிக்கும் கூடப் புரியாது. தமக்குத் தேவையான நேரங்

→ 13

நன்றி - நூலகத்திட்டம்



பா ஸ ம்

# புலிகள், சிங்கள மக்கள்: விருப்பும் வெறுப்பும்

நிஷாந்த

தமிழ் முஸ்லீம் மக்கள் அனுபவித்து வருகின்ற இன்றைய சிக்கலான நிலைமைகளை வெறுமனே இன்றைய பொருளாதார நெருக்கடியின் ஒரு பிரதிபலிப்பாக கொள்ள முடியாது; மாறாக அது ஒரு அரசியல் சிக்கலின் வெளிப்பாடே. சென்ற இதழில் இப்பத்தியில் நான் எழுதிய இந்தக் கருத்தை அரசியல் பரிபாஷையில் இன்னமும் சற்று விளக்கமாக ஆராயலாம்.

இப்போதைய புதிய மார்க்சிய ஆய்வுப் போக்கொன்று, அரசியல் நெருக்கடிகள் என்பது கலாசாரம், மதம் மற்றும் கருத்தியல் போன்ற தளங்களில் புத்திசீவிகளும் படித்தவர்களும் ஈடுபடும் நடவடிக்கைகளின் விளைவாக மேலெழும் தெளிவற்றதும் திரிபுபட்டதுமான அரசியல் வெளிப்பாடகவும் கொள்ளப்பட முடியும் என்கிறது. இத்தகைய ஒரு அரசியல் நெருக்கடியானது அரசியல் தலைமையிலும் அதன் அதிகாரத்திலும் நெருக்கடியைத் தோற்றுவிக்கிறது. அது மட்டுமல்லாமல் குழுவாதங்களுக்கும் மேலோட்டமான உடைவுகளுக்கும் வழிகோலுகிறது.

தலைமையிலும் அதனது அதிகாரத்திலும் உடைவும், இவ்வுடைவினால் தொடர்ந்து வருகின்ற வெற்றிடத்தை நிரப்ப எடுக்கப்படும் மனிதாபிமானமற்ற தன்மையும் மிகவும் கூர்மையானதாக அவதானிக்கப்பட வேண்டியவையாகும். கீழே நான் தரும் இரண்டு உதாரணங்கள் இதனை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்ள உதவும் என நினைக்கிறேன்.

முதலாவது எனக்கு தெரிந்த மானுடவியலாளர் ஒருவரது அனுபவம் ஒன்று பற்றியது. மத்திய மலைநாட்டின் தென்மேற்கு பகுதியிலுள்ள பெல்மதுல பகுதியிலுள்ள பின்தங்கிய கிராமமொன்றில் மானுடவியல் ஆய்விலீடுபட்டிருந்த இவருக்கு அக்கிராமவாசி ஒருவருடைய உரையாடலின் ஒரு பகுதியைக் கேட்க முடிந்தது. -தன்னுடைய ஆய்வின்ன சிறப்பாக செய்து முடிப்பதில் மட்டுமே நாட்டம் கொண்டவராக அவர் இருந்த போதும், இக் கிராமவாசியின் வார்த்தைகள் 'அவரை பெரிதும் ஈர்த்துவிட்டன.

அவன் சொன்னான்: 'எப்போதாவது எனக்கு பிரபாகரனை சந்திக்க முடிந்தால் நான், நீயே முழுவதையும் எடுத்துக் கொள் என்றுதான் சொல்வேன்.'

(இந்தக் கிராமம் இலத்திரனியல் தொடர்பு சாதனங்களை இன்னமும் கண்டதில்லை. சொன்னவரின் வயது 60)

இரண்டாவது, கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசியல் வரலாற்றுத் துறையில் விரிவுரையாளராக இருக்கும் எனது நண்பர் ஒருவர் சொன்னது. பூநகரி தாக்குதல் நடந்து ஒருசில நாட்களின் பின் சந்தித்த போது அவர் இப்படிக் கூறினார்:

''இராணுவம் தோல்வி கண்டது மிகவும் நல்லதே. இது இப்படித்தான் நடக்க வேண்டும். விடுதலைப் புலிகள் இவர்களுக்கு நல்ல வேலைதான் காட்டியிருக்கிறார்கள். எனக்கு கொஞ்ச நஞ்சமாவது கவலையாக இருக்கிற தென்றால், அது இந்த அப்பாவிப் பெற்றோர்களின் பிள்ளைகள் அநியாயமாக செத்துப் போகிறார்கள் அல்லது முடமாகிப் போகிறார்கள் என்பதால் மட்டும்தான்.'

கல்வித் தரத்தின் அடிப்படையில் பார்த்தால் முன்னையவர் ஒரு படிப்பறிவற்ற கிராமவாசி. மற்றையவர் உயர்மட்ட புத்திசீவி. கல்வித் தரத்தை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும், இவ்விரு அபிப்பிராயங்களும் இன்றைய சமூகத்தின் மனோநிலையை பெருமளவுக்கு படம்பிடித்து காட்டுகின்றன என்று சொல்லலாம். அதாவது: பிரபாகரனையும், விடுதலைப் புலிகளையும் குறித்து பெரும்பான்மையான சிங்கள மக்களிடையே பிரக்ஞைபூர்வமற்ற ஒருவகையான அனுதாபம் இருக்கவே செய்கிறது.

நான் முன்னரே சொன்னதுபோல தலைமையும் அதிகாரமும் குறித்த பிரச்சினைகளே இத்தகைய கருத்து மேலெழக் காரணமாகும். ஒரு மானுடவியலானது பார்வையில், தலைமைத்துவத்துக்கான தவிர்க்க முடியாத தேவை எந்த ஒரு பழங்குடி மக்களது சமுதாயத்திலும் இருக்கவே செய்கிறது என்பதை மெய்ப்பிப்பதாக இது கொள்ளப்படக்கூடும். ஏனென்றால், இது தலைவர் இல்லாமல் வாழவே முடியாது என்ற கருத்தியலிலிருந்து எழுகிறது. மனித ஆரம்பகால பழக்க வழக்கங்களிலிருந்து ஊட்டம் பெற்று வந்த இப்போக்கு இன்று வரை நிலவவே செய்கிறது. இதனாலேயே மனிதர்கள் தமக்கு அவசியம் ஒரு தலைவர் எப்போதும் தேவை என நம்புகிறார்கள். தலைவர் இல்லாதபட்சத்தில் ஒரு தலைவர் தேவை என்று கோரவும் செய்கிறார்கள். இதனால் தான் பெரும்பாலான சிங்களமக்கள் தாம் எதிர்பார்த்த தலைமை இன்னமும் கிடைக்கவில்லை என்று கூறுகின்றனர். (இவ்விடத்தில் எதிர்பார்த்த தலைமை என்பது இனவாத நோக்குடன் கூறப்படுவதாக நான் கொள்ளவில்லை)


ஒரு திறமையான தலைமை தேவை என்கின்ற தெளிவற்ற ஒரு எதிர்பார்ப்பு காரணமாக, அவர்கள் தங்களால் வெல்லப்பட முடியாத பலம் வாய்ந்த ஸ்தாபனங்கள் வேறொருவரால் தாக்கப்படுவதை விரும்புகிறார்கள். அனேகமான சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகளினால் அரசு தாக்கப்படும்போது அத் தாக்குதல்களை நியாயமானதென உணர்கிறார்கள். இந்தவகையில் விடுதலைப் புலிகள் குறித்த ஒரு ஏற்றுக் கொள்ளும் மனோபாவம் சிங்கள மக்களிடையே உருவாகியுள்ளது. ஆயினும் அவர்கள் விடுதலைப் புலிகளின் சில குறிப்பிட்ட நிறுவனங்கள் மீதான தாக்குதல்களையும், மனிதாபிமானமற்ற குண்டு வைப்புகளையும் ஆதரிப்பதில்லை. (உ+ம்: சிங்களக் கிராமங்கள் மீதான தாக்குதல்கள். குடும்பங்களை சின்னாபின்னமாக்கும் குண்டு வைப்புகள் முதலியன)

இத்தகைய அரசியல் 'யதார்த்தங்கள் காரணமாக விடுதலைப் புலிகள் தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் ஒரு தன்னெழுச்சியான ஆதரவும், பிரக்ஞைபூர்வமான மறுப்பும் கொண்ட நிலைமை நிலவுகிறது. விடுதலைப் புலிகளை, அதற்குரிய கணிப்புடன் நோக்குகின்ற ஒருவர் இதனை முரண்பாடானதாகப் புரிந்து கொள்ளக்கூடும். சிலர் விடுதலைப் புலிகளை ஒரு பாசிச இனவெறி அமைப்பாக வர்ணிப்பதே இப்படியான புரிதலுக்கு காரணமாகும்.

எவ்வாறாயினும், சிங்கள மக்களின் மதிப்பீட்டினை கணக்கிலெடுத்துக் கொண்டால், விடுதலைப்புலிகளை ஒரு பாசிச அமைப்பாக முத்திரை குத்திவிட முடியாது. உண்மையில் அவர்கள் விடுதலைப் புலிகளை ஒரு குட்டிபூர்ஷுவா வர்க்கத்தின் பாசிச போக்குகளையும் சாய்வுகளையும் கொண்ட வெளிப்பாடாகவே அடையாளம் காண்பர்.

இன்று நிலவும் துரதிர்ஷ்ட நிலைமையை நிவர்த்தி செய்ய விரும்புபவர்கள் விடுதலைப் புலிகள் தொடர்பாகவும் பிற தமிழ்க் கட்சிகள் தொடர்பாகவும் சிங்கள மக்களது அபிப்பிராயத்தை மதிப்பிடும் போது இந்த விடயங்களை கணக்கிலெடுத்தாக வேண்டும்.

தம்மை தீவிரவாதிகள் என்றோ, மிதவாதிகள் என்றோ அழைத்துக் கொள்பவர்களும் சரி, சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களால் தலைமை தாங்கப்படும் அமைப்புகளும் சரி இந்த வகையான புரிதலைக் கொண்டிருந்ததும் கூட, கணிசமான அளவுக்கு இன்றைய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகளை மந்தப்படுத்தியுள்ளனவென்றே சொல்ல வேண்டும்.



# யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அ.துரைராஜா, அவர்களின் மரணம் ஒரு அளப்பரிய இழப்பு!

- சி.சிவசேகரம்

பேராசிரியர் அ.துரைராஜாவின் மரணம் எவரும் எதிர்பாராதது. அதன் அதிர்ச்சியினின்று மீள்வது பலருக்கும் எளிதல்ல. மாணவப் பருவந் தொட்டே பலராலும் நேசிக்கப்பட்ட ஒரு இனிய சுபாவமுள்ள மனிதர் அவர். அவரது ஆற்றல் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ந்திருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு அவரது தன்னடக்கமும் தணிந்த சுபாவமும் வளர்ந்திருந்தன. எந்திரவியற்பீடத்தில் அதிசிறப்பாகத் தேர்ச்சி பெற்ற விரல்விட்டெண்ணக்கூடிய மாணவர்களிடையே அவரது பேர் கடந்த முப்பத்தெட்டு வருடங்களாக நிலைத்துள்ளது. மண்ணியக்கவியலுக்கு (Soil mechanics) அவரது ஆராய்ச்சிப் பங்களிப்புகள் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்திலும் பின்னர் பேராதனையிலும் கிடைத்தன. அத்துறையில் அவரது பங்களிப்பு முன்னோடியானது. இலங்கையிலும் எந்திரவியல் ஆய்வுகளை ஊக்குவிப்பதில் அவரது பங்கு முக்கியமானது. ஒரு ஆசிரியாகவும், ஆய்வாளராகவும், எந்திரவியலாளராகவும் அவரது பங்களிப்புகள் பலராலும் மதிக்கப்பட்டன. அவரது மேன்மையை அவரது சாதனைகளின் பட்டியலிற் பலரும் காணலாம்.

அதை இங்கு மீண்டும் நான் எழுதவில்லை. என்னளவில் அவரது சாதனைகளை விட அவரது பங்களிப்புகளின் முக்கியத்துவமே முதன்மையானது. அவரது ஆற்றலை விட மற்றவர்களது ஆற்றல்களை வளர்ப்பதில் அவர் காட்டிய ஆர்வமும் போட்டி பொறாமையற்ற ஊக்குவிப்பும் மிகுந்த மதிப்புக்குரியன.

கொழும்பில் இருந்த இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1956ல் எந்திரவியலில் முதல் வகுப்பில் அதிசிறந்த மாணவராகத் தேறிய அவர் 1963ல் தனது மண்ணியக்கவியல் ஆய்விற்காக முனைவர் (PHD) பட்டம் பெற்று அதே பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்தார். அடுத்த வருடம் எநதிரவியற் பீடம் பேராதனைக்குப் போன போது அவரும் அங்கு சென்றார். அவரது ஆராய்ச்சித் திறமை பேராதனையில் ஒரு தரமான ஆய்வுகூடத்தை நிறுவி நிர்வகித்து இலங்கையின் மண்ணின் பொறியியற் பண்புகளை ஆராயவும் பயன்பட்டது. அதன் விளைவாக, 1971ம் ஆண்டு அவர் குடிசார் எந்திரவியற் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்: 1970களில் அரசாங்கத்தின் உயர் கல்விக் கொள்கையின் குறைபாடுகள் பேராதனை வளாகத்தை மிகவும் பாதித்தன. அந்த நெருக்கடியான சூழலில் 1975இல் எந்திரவியற் பீடத் தலைவராகப் பொறுப்பேற்றார். இப்பதவியை அவர் வலிந்து தேடிச் செல்லவில்லை. மாறாக அன்றைய சூழலில் எந்திரவியற் பீடத்தை வழி நடத்த ஒரு நல்ல தலைமை தேவை என்று கருதிய பெருவாரியான விரிவுரையாளர்களது விருப்பத்தின் விளைவாகவே அவர் அப்பொறுப்பை ஏற்றார். 1977 இனக்கலவரத்தின் போது பேராதனை வளாகத் தலைவர் பேராதனைக்கு வெளியே சென்றிருந்த சூழலில் வளாகத் தலைமைப் பொறுப்பு அவரிடமிருந்து வளாகத்தில் இருந்த மாணவர்களதும் ஆசிரியர்களதும் நலனைப் பேண அவர் செயற்பட்ட முறை சில ஆளுங்கட்சிக்காரர்கட்குச் சினமூட்டியது உண்மை.

1978இல் ஏழாண்டுக்கொருமுறை கிடைக்கும் வருட விடுமுறைக்குக் கனடா போய்த் திரும்பி மீண்டும் 1982இல் வளாகத் தலைவராகப் பொறுப்பேற்றார். 1983க்குப் பின் பேராதனை வளாகத்தில் ஆளுங்கட்சியின் கொட்டம் அதிகமாகவே இருந்தது. அச் சூழலில் அவர் கொழும்பிலிருந்த திறந்த பல்கலைக்கழகத்திற்குக் குடிசார் எந்திரவியற் பேராசியராகப் போய் அதன் எந்திரவியற்பீடத் தலைவராகப் பொறுப்பேற்றார். பேராதனையில் அவர் இருந்த காலத்தில் அவரது பங்களிப்புக்களில் இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்று, பல்கலைக்கழக வளாகத்தினுள் மாலை நேர வகுப்புக்கள் மூலம் தொழிலாளர்கள் உயர் கல்வி கற்கச் செய்யப்பட்ட ஏற்பாடாகும். இதிற் காலஞ்சென்ற பல் வைத்தியத்துறை விரிவுரையாளர் ஸ்ரீபத்மநாதனது பங்கு முதன்மையானது. எந்திரவியற் பீடத்திலேயே இவ்வகுப்புக்களை ஏற்பாடு செய்ததிற் பேராசிரியர் துரைராஜாவின் பங்கு முக்கியமானது.

நூற்றுக்கணக்கான பழைய மாணவர்கள் பட்டமேற் படிப்பு ஆராய்வதற்காக அயல்நாடு செல்வதற்கு அவர் மிகவும் உதவியுள்ளார். பழைய மாணவர்களதும் பீட மாணவர்களதும் நலன்கள் பற்றி தனிப்பட்ட அக்கறை காட்டி மனந்த

→15

நன்றி - நூலகத்திட்டம்



படு கொலைகளைப் பற்றியும் இன அழிப்புக்களைப் பற்றியும் கேள்விப்படுவதும் வாசிப்பதும் எழுப்பும் உணர்வுகளுக்கும், அவற்றுக்கூடாக ''வாழ்ந்து வருதல்'' தரும் அனுபவங்களுக்கும் வித்தியாசங்கள் நிறையவே உள்ளன. அது போலவே படுகொலைகள், இன அழிப்புகள் நடத்த இடங்கள் அவை பற்றிய வரலாற்றுணர்வுடன் பேணப்பட்டிருக்கும் ஆவணக் காப்பகங்கள், நினைவுச் சாலைகள் போன்றவற்றைப் பார்க்கக் கிடைக்கிற போது எழும் உணர்வுகளும், கிளரும் நினைவுகளும் இன்னொரு வகையானவை.

ஹிட்லருடைய தலைமையிலான தேசிய சோஷலிஸ்டுகள் 1933க்கும் 1945க்கும் இடையிலான காலத்தில் யூதமக்களுக்கும், தங்களுடைய அரசியல் கருத்துக்களுக்கு எதிரானவர்களுக்கும் இழைத்த பயங்கரம் மனித குல வரலாற்றிலேயே மிகவும் மோசமானது ஆகும். 60 லட்சம் யூத மக்களும், லட்சக்கணக்கான ஹிட்லரின் 'அரசியல் எதிரிகளும்', மற்றும் அங்கவீனர், ஒரு பால் உறவினர், நாடோடிகள் போன்ற ''தாழ்த்தப்பட்ட மக்களும்'' திட்டமிடப்பட்ட முறையில் நச்சுவாயுக் கூடங்களில் கொல்லப்பட்டனர் என்பது பெரும்பாலானோர் அறிந்ததே.

தேசிய சோஷலிஸ்டுகள் இக்காலப் பகுதியில் ஜேர்மனியிலும் தாம் கைப்பற்றிய பிற நாடுகளான ஒஸ்திரியா, போலந்து, ஃபிரான்சு போன்ற நாடுகளிலும் Concentrtion Camps என்று அழைக்கப்பட்ட கொலை முகாம்கள் பலவற்றை நிர்மாணித்து லட்சக்கணக்கான மக்களைத் துன்புறுத்தி வேலை வாங்கிய பிற்பாடு கொன்றொழித்தார்கள்.

இத்தகைய கொலை முகாம்கள் பலவற்றின் நினைவுத் தடங்கள் ஐரோப்பாவில் இன்றும் நாற்சிக் கொடுமையாளர்களின் குரூரங்களை நினைவுபடுத்தும் ஆவலங்களாகப் பேணப்பட்டு வருகின்றன. வரலாறு, அரசியல் கற்கும் மாணவர்கள் மட்டுமன்றி எல்லாப் பாடசாலை மாணவர்களையுமே இத்தகைய நினைவுத் தடங்களுக்கு அழைத்துச் சென்று இனப்படுகொலையின் பயங்கரங்களையும் நாசத்தையும் உணர்வுபூர்வமாக விளக்கும் நடைமுறைகள் ஐரோப்பாவின் பாடசாலைகளில் உள்ளன.

நாற்சிகளின் கொலை முகாம் ஒன்று 1938 இல் ஒஸ்ரியாவில் உள்ள மோத்ஹவுஸன் என்ற இடத்திலும் அமைக்கப்பட்டது. 1945 இல் நேச நாட்டுப் படைகளால் விடுவிக்கப்படும் வரையில் பயங்கரத்தையும் அவலத்தையும் பரப்பிய மோத்ஹவுஸன் கொலை முகாம் இன்று அந்தப் பயங்கரங்களைப் பார்ப்போர் நினைவு கூரும் ஒரு ஆவணக் காப்பகமாக மாற்றப்பட்டுப் பேணப்பட்டு வருகிறது. ஒரு லட்சத்திப் பதுனோராயிரம் பேரை பலி கொண்ட இந்த கொலை முகாமிலும் சுற்றாடலிலும் உள்ள மண் குருதியில் தோய்ந்த மண்ணாக மாறி விட்டது என்று ஒரு ஜேர்மன் மொழி எழுத்தாளர் குறிப்பிடுகிறார்.

கிட்டத்தட்ட நூறு ஏக்கர் பரப்பில் அமைந்திருந்த இந்த வதை முகாமின் கட்டிடங்களும், உபகரணங்களும் இருந்தது இருந்தபடியே பேணப்பட்டுள்ளன. முகாமின் வாசலிலுள்ள மிகமிகப் பெரிய இரும்புக் கதவின் முன்பு போய் நிற்கிற போது இது முகாமல்ல ஒரு பெரிய கோட்டை என்ற உணர்வு தான் எவருக்கும் ஏற்படும்.

சுற்று மதில்கள் யாவும் கருங்கற் பாறைகளால் கோட்டை மதில்கள் போல 20 அடி 30அடி உயரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன. இந்த மதில்கள் சீனப் பெருஞ்சுவர் மாதிரி ஆங்காங்கே வளைந்து நீண்டு செல்கின்றன. இடையிடை காவல் புரங்கள்

மோத் ஹவுஸன் வதை முகாம் அமைக்கப்பட்டதன் பிரதான காரணம் அதனருகே கருங்கற் பாறைகள் நிறைய இருந்தமையும் கல்லுடைக்கும் கற்குழி (quarry) ஒன்று ஏற்படுத்தி ஆயிரக்கணக்கானோரை கடூழியத்தில் ஈடுபடுத்தும் வாய்ப்பு இருந்தமையும் தான்.

வீனர் கிறாபன் என்று அழைக்கப்பட்ட இந்தக் கற்குழியில் வேலை செய்வதற்காக இரண்டு லட்சம் யூதர்களும் ஏனைய அரசியல் கைதிகளும் நாற்சிப்படையினரால் மோத் ஹவுஸன் கொலை முகாமிற்குக் கொண்டு வரப்பட்டனர். மோத் ஹவுஸன் முகாம் ஒரு தலைமை முகாமாக இருந்தது. அதன் கீழ் வேறும் 49 முகாம்கள் இருந்தன. நாற்சிகளின் பாதுகாப்பு கருதியும், மாற்று நிலைப்பாட்டை எடுக்கக் கூடியவர்கள் என்றுநாற்சிகள்கருதியும் பல சிறு இனத்துவ மக்கள் குழுக்களும் திரள் திரளாக இந்த முகாம்களுக்குக் கொண்டு வரப்பட்டார்கள்.



மோத்ஹவுஸன் கொலை முகாம் : மரணக் கணக்கெடுப்பு


மோத்ஹவுஸன் கொலைமுகாமின் தலைவாசலூடாக உள்ளே நுழைந்தால் பல்லாயிரக்கணக்கானோர் ஒரே நேரத்தில் உடற்பயிற்சி செய்யத் தகுந்ததான பெரிய மைதானம் ஒன்றில் நிற்பதாக நீங்கள் உணர்வீர்கள். இந்த மைதானத்தில் தினமும் மூன்று முறை கைதிகள் எண்ணப்படுவர். பகிரங்க மரண தண்டனை வழங்கப்படுவதும் இந்த மைதானத்தில் தான். மைதானத்தின் எல்லாப்புறங்களிலும் கைதிகளை அடைத்து வைக்கும் மரத்தாலான குடிசைகள் வரிசையாக உள்ளன. இந்தக் குடிசைகளுக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. சில குடிசைகள் 'சிறப்புக்' கைதிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்தன.

உதாரணமாக 20ம் இலக்கக் குடிசைக்குள் 4300 கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் பெரும்பாலும் கொம்யூனிஸ்ட்டுகளும், நாற்சிகளுக்கு எதிராக யுத்தத்திலீடுபட்டுச் சிறைப்பிடிக்கப்பட்ட செம்படை உத்தியோகத்தர்களுமாவர். இவர்கள் 'K' கைதிகள் என அழைக்கப்பட்டனர். ஏனைய யூதக் கைதிகளைப் போல இவர்களுக்கு இலக்கங்கள் வழங்கப்படவில்லை.

'K' என்பது துப்பாக்கிக் குண்டு என்று அர்த்தப்படும் KUGEL எனும் ஜெர்மன் வார்த்தையின் முதலெழுத்தாகும். K -கைதிகள் பட்டினி போடப்பட்டே கொல்லப்பட்டார்கள். எஞ்சியிருந்தோர் தலையின் பின்புறம் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

எல்லாக் கைதிகளுக்கும் பொதுவாக ஆங்காங்கே பொதுக் கழியலறைகள் இருந்தன. அவற்றுக்கு மறைப்புகளில்லை. ஆண் - பெண் பேதமின்றி நூற்றுக்கணக்கானோர் வரிசையாகச் செல்ல வேண்டியிருந்தது.

வாரத்துக்கு ஒரு முறை குளியல். பெரிய குளியலறைகள்; உத்தரத்திலிருந்து நூற்றுக்கணக்கான தண்ணீர்க் குழாய்கள் தூங்குகிற அறைகள். ஆடு, மாடுகள் மாதிரி ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கானோர் ஆடைகள் அற்று இதற்குள் தள்ளப்படுவார்கள். வெளியே பயங்கரமான குளிர் உறையும் பனிக்காலத்திலும் பச்சைத் தண்ணீரே குழல்களூடாகச் சீறி வரும். மூன்று நிமிடக் குளியல். மத்தியானச் சாப்பாடாக 3 உருளைக் கிழங்குகள். இரவுச் சாப்பாடு 250 கிராம் பாண். காலையில் வெறும் கோப்பி.



நச்சுவாயுக் கூடத்துக்கு அனுப்பப்பட முன்னர்.

பசியாலும் நோயாலுமே ஆயிரக்கணக்கானோர் இந்தக் கொலை முகாமில் செத்து மடிந்தனர். உடல்பலம் வாய்ந்தவர்களாக இருந்த ஆண்களும் பெண்களும் கற்குழியில் கடூழியத்துக்கு உட்படுத்தப்பட்டார்கள். கொலை முகாமிலிருந்து சற்றுத்தள்ளி அமைக்கப்பட்டிருந்த கற்குழிக்குச் செல்ல 186 படிகள் இருந்தன. ஆரம்பத்தில் இந்தப் படிகள் ஒழுங்காக அமைக்கப்பட்டிராததால் ஏறி இறங்குகிற போது ஆயிரக்கணக்கானோர் செத்தொழிந்தனர்.

''மரணப் படிக்கட்டுக்கள்'' (TO DESSTIEGE) என்று அழைக்கப்பட்ட இந்தப் படிக்கட்டுக்களில் 50 கிலோ கிராம் கருங்கல்லைச் சுமந்த வண்ணம் விரைவாக ஏறும்படி கைதிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஏறும் வழியில் தவறி விழுபவர்கள் மண்டை பிளந்தபடி நிலத்தில் வீழ்வார்கள். மெதுவாக ஏறுபவர்களுக்குச் சாட்டையடி விழும். சாட்டையடி பட விரைவாக ஏற முயல்பவர்கள் கால் தடுக்கி மேலிருந்து விழுவர். நன்றாகக் களைத்துப் போனவர்களும் வேலை செய்ய மறுப்பவர்களும் மேலிருந்து கீழே தூக்கி வீசப்பட்டுக் கொல்லப்பட்டனர். இந்தத் தண்டனையை நாற்சிகள் ''பரசூட் பரிசு'' என அழைத்தனர். 186 படிகளையும் ஏறி இறங்கிய போது மூச்சு வாங்கியது. சட்டைப் பொக்கெற்றில் பேனா மட்டுமே பாரமாக இருந்தும் ஏறஏறப் படிக்கட்டுகள் வளர்ந்து கொண்டு போவதாகவே தோன்றிற்று.

கவி முருகையனின் கடூழியம் நாடகத்தின் பாங்கன், சயந்தன் ஆகிய பாத்திரங்களில் நினைவு மேலெழுந்தது.

கொலை முகாமின் வெளியே கொன்று எரிக்கப்பட்டவர்களில் சாம்பல் மேடு மலைச்சாரலில் உள்ளது.

கொலை முகாமின் ஒரு மூலையிலே நச்சுவாயுக் கூடம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த நச்சு வாயுக் கூடம் குளியலறையாகவே உண்மையில் தொழிற்படக் கூடியதாக இருந்தது. எனினும் தேவையான போது நச்சு



"பரசுட் பரிசு" பெற்ற

வதை

எழுப்புகி

போது நச்சு
ளோன் -B(CY
தப்படக்
இருந்தன. இவை
களோடு தண்
அமைக்கப்பட்
யான போது
மத்திய கட்டு
இருந்து நச்சு



'துப்
யூத

நன்றி - நூலகத்திட்டம்





...ரு கொலை முகாம் கைதி.

# ...முகாம்கள்

# ...கேள்விகள்

...ன சைக்
...B) செலுத்
...பாடுகள்
...ர்க் குழாய்
...ாய்களாக
தேவை
முகாமின்
அறையில்
...லுத்தப்பட்

டுக் கைதிகள் கொல்லப்பட்டனர்.

முகாமில் மிகவும் பெரிய நிலத்தடி அறைகளும் அமைக்கப்பட்டிருந்தன. கொலை முகாமின் ஒவ்வொரு பகுதியாகப் பார்த்துக் கொண்டு செல்லும் போது திடீரென நிலத்தடி அறைகளுக்குச் செல்கிற பாதை வருகிறது. இந்த நிலத்தடி அறைகளில் தான் கொல்லப்பட்டவர்களை எரிப்பதற்கான மூன்று பெரிய உலைகள் இருக்கின்றன. இந்த உலைகளின் இரும்பு வாசல்களில் தினமும் மலர் வளையங்களையும் மலர்ச் செண்டுகளையும் மக்கள் வைத்துச் செல்கிறார்கள். சாம்பலும், இருட்டும் விரவிக் கிடக்கும் இந்த அறைகளுக்குள் அன்றலர்ந்த பூக்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டுக் கிடப்பது ஒரு பயங்கரம் கலந்த துயர உணர்வை ஏற்படுத்தி விடுகிறது.



...ம் 'போலு' சுடப்பட்ட
...கதி.

உடல்களை எரிப்பதற்கு முன்னால் அவற்றிலிருக்கக் கூடிய தங்கற் பற்கள், மற்றும் கைதிகள் ஒளிந்து வைத்திருக்கக் கூடிய தங்க நகைகளை எடுப்பதற்கான அறுவை அறைகளும் நிலத்தடியிலேயே உள்ளன. இந்த அறுவை அறைகளில் ஒருசில, நாற்சி மருத்துவர்களால் பல்வேறு மருத்துவ ஆய்வுகள் செய்யவும் பயன்பட்டது.


கொலை முகாமிலிருந்த கைதிகளை பல்வேறு இரசாயன, உயிரியல் பரிசோதனைகளுக்கு நாற்சி மருத்துவர்கள் உள்ளாக்கினார்கள். எலிகளையும், பன்றிகளையும் தான் மருத்துவ பரிசோதனைகளுக்குப் பாவித்தமையே வழக்கம் எனினும் நாற்சிகள் தமது குரூரமான மருத்துவ பரிசோதனைகளுக்கு யூதர்களையே பயன்படுத்தினர். இத்தகைய பரிசோதனைகளுக்கான ஒரு ஆய்வு கூடமும் கொலை முகாமின் ஒரு பகுதியில் அமைந்துள்ளது.

கொலை முகாமுக்குக் கொண்டு வரப்படும் ஒருவர் தனது பெயர், விலாசம் அனைத்தையும் இழந்து விடுவார். அவருக்கு ஒரு இலக்கம் தரப்படும். இந்த இலக்கம் ஒரு தகட்டில் பொறிக்கப்பட்டு அவருடைய கையில் கட்டப்பட்டுவிடும். கைதிகளை இனத்துவவாரியாகவும் நாற்சிகள் பிரித்திருந்தார்கள். கைதிகளுக்கு வழங்கப்பட்ட முகாம் சீருடைகளில் மேல்புறத்தில் இடது பகுதியில் கைதிகளை வகைப்படுத்தும் முக்கோணப்பட்டைகள் குத்தப்பட்டிருந்தன. இந்தப் பட்டைகள் பல்வேறு நிறத்தன. அரசியல் கைதிகளுக்கு சிவப்பு நிற முக்கோணம், ஒருபால் உறவினர்க்கு றோஜா வண்ண முக்கோணம், யூதர்களுக்கு மஞ்சள் நிற முக்கோணமும் அதனுள் நட்சத்திரமும், குற்றவாளிகளுக்குப் பச்சை நிற முக்கோணம் என இந்தப் பட்டியல் நீண்டது.

ஏறத்தாழ ஒன்பதினாயிரம் நாற்சிகள் கொலை முகாமின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்தனர். 55 (Schutz - staffel) என இவர்கள் அழைக்கப்பட்டனர். உண்மையில் இவர்கள் தேசிய சோஷலிஸ்ட் கட்சியின் சிறப்புப் பிரிவினரே ஆவர். இவர்கள் கொலை முகாமில் சித்திரவதைகளுக்குப் பயன்படுத்திய பல உபகரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் எம்மில் பலருக்குப் பரிச்சயமான பல பொருள்கள் இருந்தன. அவற்றுள் மண் நிரப்பப்பட்ட ''எஸ்-லோன் பைப்'' போன்றதும் ஒன்று. ஏனைய உபகரணங்கள் நகம் பிடுங்கும் இடுக்கிளிலிருந்து, குதிரை வால் சாட்டை வரை பல வகை. இந்த உபகரணங்களுக்கு ஒவ்வொரு 'செல்லப்பெயர்' வேறு வைத்திருக்கிறார்கள். மண் நிரப்பப்பபட்ட பைப்பின் செல்லப்பெயர்: ''மொழி பெயர்ப்பாளர்''. இலங்கையிலும் வதைமுகாம்களில் வதைகளுக்குச் செல்லப்பெயர்கள் உள்ளன என்பது ரகசியமல்ல. மஸ்கற், கோகா சோலா என்று அந்தப் பெயர்களும் ஞாபகத்தில் வருவது தவிர்க்க இயலாததாக இருந்தது.

இந்த நூற்றாண்டின் மாபெரும் அநியாயம் என்று சொல்லப்படும் நாற்சிகளின் கொலை முகாம்கள் வரலாற்றின் ஒரு பக்கமாக ஆவணங்களுக்குள் சென்றுவிட்டது என்று நாம் அமைதி கொள்ள முடியாது. பல்வேறு வடிவங்களிலும் பல்வேறு அரசியலுக்கூடாகவும் இத்தகைய பயங்கரங்களின் கூறுகள் மேலெழுவதை ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் வளர்ந்து வரும் நவ- நாஜிகளிலும் இன்று பார்க்கிறோம்.

நீங்கள் பயப்படுகிறீர்கள்! பயப்படுவதில் அர்த்தமில்லை. மனித நேயம் எங்கிருந்து ஆரம்பமாகிறது என யோசித்துப் பாருங்கள். உங்கள் அயலவர்களை. வேறு தேசிய இன மக்களை, வேறு





**அங்கவீனரான ஒரு ஒல்லாந்து யூதர்: இருதயத்தினுள் நச்சு ஊசி எற்றப்பட்டுக் கொல்லப்பட்ட பிற்பாடு நாற்சி மருத்துவர்கள் இவரது உடலை வெட்டி ஆய்வு செய்து எலும்புக் கூட்டை மட்டும் தனியே பிரித்தெடுத்தனர். கொலை செய்யப் படுவதற்கு சில நிமிடங்கள் முன்னர் எடுக்கப்பட்ட படமும் எலும்புக்கூடும். இவ்வாறு ஆயிரக்கணக்கானோர் கொல்லப் பட்டனர்.**

நிறவேறியும், இனவெறியும் இன்னொரு முறை மனிதகுல அழிப்புகளுக்குக் காரணமாகாது என்பதற்கு எவ்விதமான உத்தரவாதமுமில்லை.

நிறத்து மக்களை உண்மையாக. இதயபூர்வமாக உங்களால் நேசிக்க முடிகிறதா என்று உங்கள் மனச்சாட்சியைக் கேட்டுப் பாருங்கள்!

நன்றி - நூலகத்திட்டம்



# சிறு புத்தகங்கள் சிறு நிகழ்வுகள் சிறு குறிப்புகள்

# கதிரேசன் பாடல்கள்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஈழத்து இலக்கிய உலகிற்குத் தந்த மும்மணிகள் **மகாகவி, அ.செ.முருகானாந்தம், அ.ந.கந்தசாமி** ஆகியோராவர். இம்மூவரும் அளவெட்டியைப் பிறப்பிடமாக, வளர்ப்பிடமாகக் கொண்டவர்கள். அளவெட்டியில் இவர்கள் பிறந்த வீடுகளின் அயலில், பிறந்து வளர்ந்து, இவர்களுடன் இலக்கியம் படைக்க முற்பட்டவர் **கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை.** மகாஜனக் கல்லூரியில் படித்து, அங்கேயே ஆசிரியராக வாழ்ந்தார்.

உரைநடை இலக்கியத்திற்கு **அ.செ.மு, அ.ந.க** ஆகியோர் வளம் சேர்க்க மகாகவி கவிதை இலக்கியத்திற்கு வளம் சேர்த்தார். கதிரேசர்பிள்ளை அவர்கள் கவிதைக்கும், உரை நடைக்கும் வளம் சேர்க்க முயன்றார். இவரது **பாரதம் தந்த பரிசு** எனும் நாடகத் தொகுதி நூல் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப்பரிசைப் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து எட்டு வருடங்கள் அகில இலங்கைரீதியில் நடைபெற்ற புராண, இலக்கிய நாடகப் போட்டியில் இவரால் எழுதித் தயாரிக்கப்பட்ட நாடகங்களே முதலாமிடத்தைப் பெற்றன. அந்நாடகங்களையே தொகுத்து **பாரதம் தந்த பரிசு** எனும் நாடக நூலாக்கினார்.

பல கவிதைகள் இவர் செய்திருந்தார். கவியரங்குகளில் இவர் கவிதை முதன்மை பெற்று நிற்பதுண்டு. தவில் மேதை அளவெட்டி வி.தட்சிணாமூர்த்தியின் நினைவு அஞ்சலிக் கவியரங்கிற்கு தட்சிணாமூர்த்தியின் தாளக்கட்டுப் போல சொற்களைக் கோர்த்து கவிதை எழுதியிருந்தார். அக்காலத்தில் அக்கவிதை வெகு பிரசித்தம்.

அவரது சிறுவர் பாடல்கள் தற்போது தொகுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. அவர் மகன் **ஆதவன்** இதனைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். ''அழகிய எளிய மெட்டுக்களில் கவிஞர் என்னைத் தன் சைக்களில் ஏற்றிச் செல்லும் போது பாடிய பாடல்களும் இந்நூலில் உண்டு. இன்று சிலவற்றை நான் என் மகனுக்குப் பாடிக் காட்டுகிறேன். காலத்தால் அழியாத இவற்றைப் பலரும் படித்துப் பயன் பெறட்டும் என்பதுவும் கவிஞரின் ஆத்மா சாந்தியடையட்டும் என்பதுவுமே இந்நூல் உருப் பெறக் காரணங்களாகும்'' என்று ஆதவன் எழுதுகிறார். **''கவிஞரின் ஆத்மா சாந்தியடையட்டும்''** என்று (எனக்குத் தெரிந்த) ஆதவன் எழுதுகிற போது சிரிப்பு வருகிறது.

முன்னர் வாசித்த கவிஞரின் சில கவிதைகள் கவித்துவத்தை அடைந்ததுண்டு. மரபுக் கவிதையில் கவிஞர் சில நல்ல கவிதைகள் எழுதினார்.




சிறுவர் பாடல்கள் அந்தளவுக்குச் சிறப்புப் பெற்றதாகக் கொள்ள முடியவில்லை. காரணம் உண்டு. சிறுவர் பாடல்கள் மிக எளிமையாக அமைய வேண்டியது அவசியம். எளிய, சிறிய சொற்கள், தெளிவான ஆற்றொழுக்கான நடை. சிறுவர் பாடல்களுக்கு இவை முக்கியமானவை. உள்ளடக்கத்தைப் பொறுத்தும் தத்துவம் புகட்டுபவை சிறுவர் பாடல்களாக அமைய முடியாது. அழகு, கற்பனை இவற்றை விருத்தி செய்வதாக சிறுவர் பாடல்கள் அமைதல் முக்கியம். இன்னும் சொல்லப்போனால், நகைச் சுவையுணர்வு கலந்து சிறுவர் பாடல்கள் அமைதல் சாலவும் நன்று.

**''நள்ளிருள் போய்ச்சில நாழிகையும் சென்று
ஞால முற்றுந்துயில் கொள்ளுமொரு
கள்ளப் பொழுதினில் மெல்ல வெளிவரும்
காரணம் யாது சொல் தாரகையே....''**

எனத் தொடங்குகிற **விடிவெள்ளி** கவிதையில் பல அரும்பதங்கள் காணப்படுகின்றன. **நாழிகை, ஞாலம், துயில், தாரகை** முதலான சொற்கள் இளம் பராயத்தினருக்கு கடுமையானவையே. இவ்வாறான பாடல்களுக்குப் பொழிப்புரை கூறுதலும் கடினமே. மேற்கூறிய வரிகள மாத்திரமல்ல; வேறு பல பாடல்களையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஆனால் பின்வரும் வரிகளைக் கவனியுங்கள்.

**''குடை பிடித்துச் செருப்புமிட்டு
புத்தகமும் கொண்டு
குடுகுடென நடந்து வரும்
குழந்தைகளே கேளும்
மழைக்காலம் வழி வழுக்கும்
மிகக் கவனம் மக்காள்
வழியருகே வெள்ளம் உண்டு
விலகி வர வேண்டும்....''**

மேற்கூறிய பாடலைக் கவனிக்கிற போது எளிமையான சொற்களும், இலகுவான மொழிநடையும் பாடலை குழந்தைகளுக்கேற்றதாக ஆக்குகின்றது. இத்தகைய எளிமையான வடிவம் கொண்ட பாடல்களை கதிரேசனின் பாடல்களில் அதிகளவில் காணக்கிடைக்கவில்லை.

முற்றாகவே எளிமையற்ற பாடல்கள் இவையென ஒதுக்கி விட முடியாது. சில பாடல்களில் எளிமையும், இலகு நடையும் கைகோர்த்து வருவதனையும் கவனிக்கலாம்.

**''பாலன் என்ற பையனுக்குப்
பாட்டி பணம் தந்தாள்
பாலன் கடைக்கோடி வடை
வாங்கிக் கொண்டு வந்தான்.
கொண்டுவந்த வடையதனில்
கொஞ்சம் கிள்ளித் தின்றான்
கண்ட தங்கை ஓடிவந்து
கையை நீட்டி நின்றாள்...''**

என்று போகிற கவிதையில் எளிமைகளை கட்டி வருகிறது.

இத்தொகுப்பு அழகாகப் பதிக்கப்பட்டுள்ளது. சிறுவர்களைக் கவரக் கூடிய வகையில் எளிமையான பதிப்பாக அமைந்திருக்கிறது. மென்மையான வர்ணங்களும், இலகுவான ஓவியங்களும் இத்தொகுப்பை அழகுபடுத்துகின்றது.

தமிழில் சிறுவர் பாடல்கள் அதிகம் வெளியாவதில்லை. குழந்தைக் கவிஞர் **அழ.வள்ளியப்பா, பா.சத்தியசீலன்** முதலானோர் சிறுவர்க்கான எளிமையான பாடல்கள் பலவற்றை யாத்துள்ளனர். இவ்வகையிலும் இத்தொகுப்புக்கு முக்கியத்துவம் உண்டு.

— பகலவன்



# ஒரு மழைநாள் நிகழ்வுகள்

என்னமாய்ப் பெய்யுது இம்மழை;
குடைகளும் ஒழுகும் விதமாய்.
அனைத்து நிகழ்வுகளுமே
அப்படியே
ஸ்தம்பிதமாய் போக.

சுயமிழந்து
காற்றின் திசையில் மாறி மாறிப்பெய்து
மண்ணில் குழிவுகளை உருவாக்கியவாறு
அது

கொல்லையில் நிற்கிற தென்னை
வெறிகாரனாய்
தலையைச் சுற்றிச் சுழற்றி போடுகிற ஆட்டம்
மழையினூடே மங்கலாய்

தெருவிலே
குடைகள் காற்றோடு போராடி,
புறமுதுகு காட்டி
பின்னோக்கி மடங்கிப் போதல் புதினமாயிற்று

வீட்டினுள்
வெட்டிய குறையில் கிடக்கும் வேளாண்மை
பற்றிய யோசனையுடனான
வாப்பாவின் குறுக்கும் நெடுக்கான உலாத்தலும்,
பாஜையிலே இருப்பிலில்லாத
அரிசி தொடர்பான
உம்மாவின் கவலையும்.

நாங்கள் அப்படியே
சுழியாய் உறைந்து போனோம்.

இடைக்கிடை
மின்னலும், இடியும்
தேங்காய் விழுகிற சத்தமும் சேர்ந்து
இதயத்துடிப்பு வேகத்தை உயர்த்திப் போயின.

அந்நாழிகளில்
முன்னைய 58ன் வெள்ளத்தின் சில சொட்டுகள்
உள்ளூர அச்சமாய்ப் பரவிற்று

தெருவைக் கொத்திக் கிழித்து நீர்விடும் முனைவில்
நான்
மண் வெட்டியோடு

எதிரே;
உடல் குலுக்கி,
சிலிர்த்து,
மயிர் சிலுப்பி
நீர் உதறி பறந்து போனது
வேலியில் நின்ற காகம்.
மழைபற்றிய எதுவித அலட்டலுமேயின்றி

-றஷ்மி

நன்றி - நூலகத்திட்டம்





கடையில் இருந்து பத்து யார் தூரத்தில் வாகனேரிக்குளம். நான் கடை வேலைகளை முடித்துவிட்டு முற்றத்தைப் பெருக்கினேன். வாப்பா ''பொயிலரு''க்கு கரி போட்டுக் கொண்டிருந்தார். புளிய மரத்தடிக் கடையென்றால் தெரியாதோர் யாருமில்லை. நான் வெளியே வந்த போது அப்போதுதான் விடிந்து கொண்டிருந்தது. புளிய மரத்தின் கீழ் இரவு காட்டுக்குச் சென்றவர்கள் மாடுகளை அவிழ்த்து விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களை கடந்து வேப்பங் குச்சியால் பற்களை தீட்டிக் கொண்டே குளத்தை நோக்கி நடந்தேன்.

குளக்கரையின் புதர்களுக்குள் தலைகள் முளைத்திருந்தன. நானும் ஒரு புதருக்குள் பதுங்கி, சாரத்தைத் தூக்கிக் கொண்டு, இன்னுமொரு மடுவுக்குள் இறங்கி கழுவிக் குளத்தில் இறங்கினேன். வேப்பங் குச்சியை வீசிவிட்டு வாய் கொப்பளித்து நிமிர்ந்த போது, குளக்கட்டின் மையத்தில் ''பஜீரோக்''களும் 'ட்ரக்' வண்டிகளும் புயலாய் வந்து கொண்டிருந்தன. அதிகாலையில் வருவதென்றால் ஏதோ விபரீதம் நடந்திருக்க வேண்டும். பட்டிக்கார சாமி ஓடி வந்தான் ''காக்கா ஒரு விஷயம் தெரியுமா? புனான ஏரியா பொறுப்பாளரா நிண்ட 'பொடியன்' ராவு யாரோ வெட்டிப் போட்டானுகளாம். இப்ப புனான யில ரவுண்டப்பாம்.''

என் தேகம் சிலிர்த்துக் கொண்டது. விறகுக்குப் போகும் வண்டிகள் குளக்கட்டில் வரிசையாய் வரும் அழகை ஒரு கணம் பார்த்து நின்றேன். பின்னால் வந்த வண்டிக்காரன் முன்னால் வந்தவனைப் பார்த்துக் கூவினான். ''மச்சான் சாவல் காக்காட கடையில நிப்பாட்டு தேத்தண்ணி குடிப்பம்.''

அவன் எதுவும் பேசாமல் அடிக்கம்பால் மாட்டை அடிக்க அது வாலைக் கிளப்பிக் கொண்டே ஓடியது. நான் வேகமாய் நடந்தேன். வாப்பா தட்டியைத் திறந்து முட்டுக் கொடுத்திருந்தார். வண்டிக்காரர்கள் 'முட்டக்கோசு'ம் பிலேண்டியுமாய் பலகைப் பெஞ்சில் சுவாரஸ்யமாய் இருந்தார்கள்.

நான் செய்தி சொன்னேன். அனைவர் முகத்திலும் பீதியின் ரேகைகள். ''அப்ப இண்டக்கி இவடத்தான் கிடக்கனும். இவனுகள் போக விடமாட்டானுகள்.'' ஒருவன் முணுமுணுத்தான்.
புனானைப் பக்கம் போக சைக்கிளை தள்ளினேன். வாப்பா தடுத்து விட்டார். பேசாமல் புளிய மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டேன்.
டாப்பரின் கடையில் இரு ்து மாரிமுத்து ஓடிவந்தான். அவனை சூழ்ந்து கொண்டனர். அவன் புனானைப் பக்கம் உள்ளவன் என்பதால் தகவல் அறியும் ஆசையில் நானும் எழுந்தேன்.

''ரவுண்டப் முடிஞ்சி ஆட்களெல்லாம் வாராங்க, ராவு வெட்டினவனையும் புடிச்சிட்டாங்க.''

''அவன் வெட்டங்காட்டிலும் ஏரியா பொறுப்பாளன் என்ன செஞ்சானாம்?'' நான் கேட்டேன்.
கேள்வியில் நக்கல் இருந்ததை உணர்ந்த வண்டிக்காரர்கள் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டனர்.
மாரி சொன்னான்; ''ராவு பதினொரு மணி இருக்குமாம், முகமூடி போட்ட ஆட்களாம், பொடியன் அஹமது காக்காட கட பெஞ்சில் படுத்திருக்கான். துவக்க எடுத்தானுகளாம் வந்தவனுகள். பொடியன் முழுச்சிப் பார்க்க வாளால வெட்டிப் போட்டு ஓடிட்டானுகள்.''
''ஆள் பொழப்பானா?''நான் கேட்டேன்.

''ஓம், வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போறாங்க.'' பேசிக் கொண்டிருக்கும் போதே, பஜீரோக்கள் முன்னால் வர, ட்றக்குகள் பின்னால் வந்து கொண்டிருந்தன.

ஒரு ட்றக்கில் பெனியனுடன் ஒருவன் நின்றான். அவன் கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்தன. மாரி என் காதுக்குள் கிசுகிசுத்தான்; ''அவன் தான் வெட்டினவனாம்.''

கடையை நெருங்கியதும் அவன் சிரித்தான். எனக்குள் ஓராயிரம் அதிர்வுகள். உடம்புபூராவும் நாகம் தீண்டின. தலை தெறிக்க ஓடி அவனை நன்கு உற்றுப் பார்த்தேன். அவன் இன்னும் சிரித்துக் கொண்டிருந்தான்.

இவ 'னா கொலை செய்திருப்பான்? ஆமியைக் கண்டாலே வீட்டின் கூரையில் ஒடிப்பதுங்கும் பயந்தாங்கொள்ளி, காக்கிச்சட்டையைக் கண்டால் கூட வெலவெலத்துப் போகும் இவனா, துவக்கையும் பறித்து ஆளையும் வெட்டியிருப்பான்?
எனக்கு அழுகை வரப்பார்த்தது. ஆவேசமாய் ஓடினேன். வாப்பா கடைக்குள் ''டீ'' ஆற்றிக் கொண்டிருந்தார். ''வாப்பா பெரியம்மாட மகன் அயாத்து காக்காவத்தான் புடிச்சிட்டு போறாங்க.''
''எண்ட அல்லாஹ்! அந்த அப்பாவி எப்படி அம்புட்டானோ?'' அவர் தலையில் அடித்துக் கொண்டார். காரையடி பட்டியிலிருந்து மாமா ஓடி வந்தார். அவரை நெருங்கினேன். ''தம்பி அயாத்து மாட்டக் காணலண்டு தேடி வந்திருக்கான். இவனுகள கண்டதும், ஆமிக்காரன் எண்டு ஓட அவன் தான் வெட்டிப் போட்டு பயத்துல ஓடுறான் எண்டு புடிச்சிட்டு போறாங்க.''
கடையை பூட்டிவிட்டு வாப்பா சைக்கிளில் ஏறினார். நான் 'கரியரில் தொற்றிக் கொண்டேன். நாங்கள் ஆறாம் கட்ட கேம்புக்கு போவதற்கு முன், பெரியம்மாவும், பள்ளித் தலைவரும் வந்திருந்தார்கள்.

''மட்டக்களப்புக்கு விசாரணைக்கு அனுப்பியிருக்கம், நாளக்கி விட்டுருவம், நீங்க அலையாம போங்க'' ஒருவன் சொன்னான். பெரியம்மா தலையிலடித்து அழுதாள். அவனின் அளவுக்கு மீறிய அச்சம் தான் இன்று அவனை கைதியாக்கி விட்டது.
இரண்டு கிழமையாய் அலைந்தோம்.
வேற இடத்துக்கு அனுப்பியாச்சாம். ''உங்கட ஏரியாப் பொறுப்பாளர் புஹாரிய புடிச்சி கேளுங்க.'' என்றார்கள்.

அவரைக் காணச் சென்றோம். மெஷின் கண்ணை துடைத்துக் கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் ''என்ன விஷயம்?'' விறைப்பாய் கேட்டார்.
''தம்பி என்ட மகனை அல்லாவுக்காக வுட்டுருங்க, உண்ட காலப் புடிக்கன்.'' பெரியம்மா காலைப்பிடித்து ஒப்பாரி வைத்தாள்.
அவன் பின்னால் நழுவி. ''இங்க பாருங்க. இது ஒபிஸ். இஞ்ச வந்து ஒப்பாரி வைக்காதீங்க, நாளைக்கு ஏ.எஸ்.பி வருவாரு. நாளைக்கு வந்து பாருங்க,'' 'மெஷின் கண்ணை' துடைத்துத் தோளில் போட்டார். நாங்கள் அவிந்த மனசுடன் வெளியில் வந்தோம். அவரின் மோட்டார் பைசிக்கிள் தூரத்தில் சென்றது.
ஒருமாதம் இருக்கும் அயாத்து வரவே இல்லை. ஒரு நாள் புனாணை அணைக்கட்டுக்குச் சென்றேன். செல்லன் தூண்டில் போட்டுக் கொண்டிருந்தான். என்னைக் கண்டதும், தூண்டிலை கரையில் போட்டுவிட்டு ஓடிவந்தான் ''தம்பி உண்ட பெரியம்மாட மகன் கிடச்சிட்டானா?''
''இல்லை'' என்றேன்.
''அவன் இனி கிஐடக்க மாட்டான். உங்கட கடமைய செய்யிங்க'' ''ஏ ணண்ணை அப்படிச் சொல்றீங்க?''

''தம்பி நேத்து ராவு, இந்த குளத்துல வலை போட வந்தேன். அந்த காட்டுப்பக்கம் ஒரே கத்தும் சத்தம். 'என்ட அல்லாஹ் என்ன வுடுங்க. நான் செய்யல, எனக்குத் தெரியாது' இப்பிடி கேட்டிச்சி, பொறகு சத்தம் வரல்ல. அது அயாத்துர குரல்தான். அண்டக்கி நானும் அவனும் தானே மாடு தேடி வந்தம். அவன்ட பயம் அவனுக்கு சாவக்கொடுத்திட்டு, முருகா, வெட்டினவனுக்கு நீதான் கூலியக் கொடு.''

பிறகு சொன்னான்; ''தம்பி கொஞ்ச நேரத்துக்குப் பொறகு ''ட்றக்கை கொண்டு வந்து இங்கேதான் கழுவினாங்க. ஒரே இரத்தமாய் கிடந்தது'' எனக்கு இதயம் கழன்று அதைப் பருந்து கொத்தி இழுப்பதைப் போல் வலித்தது. இன்னும் ஹயாத்தின் புதைகுழி கண்டு பிடிக்கப்படவில்லை. பாவம்! பெரியம்மா மூணு வருஷமாகியும் மகன் விசாரணை முடிந்து வருவான் என்ற நப்பாசையில் வாசலில் நிற்கிறாள்.

ஓட்டமாவடி அறபாத்



## என்னுடன் இரவைக் கழித்த நிலவு

நிலவு,
ஓடி வந்து
என் கட்டிலில்
குப்புறப்படுத்தது.

அதன் ஆடைகள்
கிழிந்து கிழிந்து இருந்தது.
உள்ளங்கி மட்டும்
மானத்தை மறைத்துக் கொண்டது.

என் கட்டில் முழுக்க
வாந்தி எடுத்தது
ஒவ்வொரு வாந்திக்குள்ளும்
வானத்து நட்சத்திரங்கள்
மின்னி, மின்னி மறைந்தன

நிலவு,
கட்டிலில் உருண்டு, புரண்டு படுத்தது
காலையும் அடிக்கடி
உயர்த்தி அடித்தது.

நான் அதன்
தலைமாட்டில் குந்தி
அதற்காக கண்ணீர் வடித்தேன்.
நிலவும்,
கண்ணீர் வடிய, வடிய
வறுமையின் வாடை
வானத்தின் அடித்ததால்
பக்கத்து நட்சத்திரங்களை
பிடித்து சப்பியதாகவும்
வானத்து சூரியன்
காலால் உதைத்து
பூமிக்கு தள்ளி விட்டதாகவும்
அழுதழுது அதன் சங்கதியை சொன்னது.

பெரும் சத்தத்துடன்
என் தெருநாய்கள் குரைத்தது
நிலவும்- நானும் ஒன்றாக உறங்கி
அந்த இரவை கழித்துக் கொண்டோம்

முகமட் அபார்

## வெளியார்



தோலும் நிறமும்
இனத்தைப் பிரிக்கும்.

மொழியும் வாழ்வும்
சினத்தைக் கொடுக்கும்

''வெளியாள்'' என்ற
பேச்சு மட்டும்
வந்தும் போயும்
நெஞ்சை உறுத்தும்.

-துஷ்யந்தன்

நன்றி - நூலகத்திட்டம்



## இலங்கை அரசியலமைப்புக்களும் இனப்பிரச்சினையும் - 13

# டொனமூரின் மலையகத் தமிழர்களுக்கெதிரான சட்டங்கள்

டொனமூர் அரசியல் திட்டத்தில், சிறுபான்மையோருக்கு எதிரான மிக மோசமான அம்சமாக விளங்கியது பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமே ஆகும். இப்பிரதேச வாரிப் பிரதிநிதித்துவம் என்பதன். அரசியல் தாற்பரியம் சிறுபான்மை யோரைப் பொறுத்தவரை மிகவும் ஆபத்தான ஒன்றாக விளங்கியது. நாடு பல தேர்தல் தொகுதிப் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டு அத்தேர்தல் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்படுபவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதே இதன் அரசியல் தாற்பரியமாகும். சிங்கள மக்களை மிகவும் பெரும்பான்மையாகக் கொண்ட ஒருநாட்டில் இப்பிரதிநிதித்துவமுறை இயல்பாகவும் ஆட்சிப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்திருந்தது. ஏற்கனவே பேரினவாத சிந்தனையால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு இனத்திடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தமையானது பேரினவாத சிந்தனைகளை செயல்முறைக்கு கொண்டு வருவதை மிகவும் இலகுவாக்கியது. சிறுபான்மை இனங்களது தலைவர்கள் இது தொடர்பான அச்சங்களை வெளிக்காட்டியிருந்த போதும் பெரும்பான்மை இனத்தின் ஆதரவினை பெற்றுக் கொள்வதற்காக டொனமூர் குழுவினர் இதுபற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. சிறுபான்மையோரை திருப்திப்படுத்துவதற்காக் பேரளவில் பேரினவாத சிந்தனையின் செயற்பாட்டுக்கு விதிக்கப்பட்ட தடைகள் நடைமுறையில் பயனளித்ததாக இருக்கவில்லை.

டொனமூர் திட்டத்தில் பேரினவாத சிந்தனையின் செயற்பாட்டுக்கு பிரதான தடையாக தேசாதிபதியின் அதிகாரங்கள் விளங்கும் எனக் கூறப்பட்டது. சிங்கள மக்களைப் பெரும்பான்மையாக கொண்ட சட்ட சபையான அரசாங்க சபைக்கு சட்டமாக்கும் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டாலும் தேசாதிபதியின் கையொப்பத்தின் பின்னரே அவை சட்டமாக்கக்கூடிய நிலை இருப்பதாலும் இனரீதியான பாரபட்சங்களைக் கொண்ட சட்டங்களை தடுக்கும் விசேட அதிகாரம் தேசாதிபதிக்கு இருப்பதனாலும், தேசாதிபதியின் அதிகாரங்கள் சிறுபான்மையோருக்கு போதிய பாதுகாப்பாக இருக்கும் என டொனமூர் குழுவினர் தரப்பில் கூறப்பட்டது. ஆனால் நடைமுறையில் தேசாதிபதி பிரித்தானிய பேரரசின் நலன்களுக்கு எதிரான சட்டங்களை உருவாக்கிய போது தனது அதிகாரங்களைப் பிரயோகித்து தடைசெய்தாரே தவிர சிறுபான்மை இனங்களுக்கு எதிரான சட்டங்கள் இயற்றப்படும் போது கண்டும் காணாதவராக அதற்கான சம்மதத்தினை தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக சிறுபான்மையோருக்கு சாதகமாக நடந்து பேரினவாதிகளின் எதிர்ப்பை சம்பாதிக்கவோ அதன்வழி இலங்கையில் இருக்கும் தமது நலன்களை இழக்கவோ தேசாதிபதியும் பிரித்தானிய ஆட்சியாளரும் விரும்பவில்லை. இதன் விளைவு சிறுபான்மையோரைப் பொறுத்தவரை மிகவும் பாரதூரமாக இருந்தது. இதனால் டொனமூர் அரசியற் திட்ட காலத்தில் சிறுபான்மை இனத்தவர்களில் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள் இந்திய வம்சாவழியினரே ஆவர். இக்காலத்தில் இவர்களுக்கு எதிராக பல சட்டங்கள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டன.

இந்திய வம்சாவழியினர் மத்தியில் அவர்களுக்கான அரசியல் இயக்கம் டொனமூர் அரசியல் திட்ட காலத்தின் நடுப்பகுதிவரை தோற்றம் பெற்றிருக்கவில்லை. 1939இல் இவர்களது இலங்கை இந்திய காங்கிரஸ் தோற்றம் பெற்றாலும் அரசியலில் தாக்கம் செலுத்தக்கூடியளவுக்கு செல்வாக்குப்பெற்ற இயக்கமாக அது வளர்ச்சி பெறறிருக்கவில்லை. இதனால் இவர்களுக்கு எதிராக சட்டம் இயற்றப்பட்ட போது தாக்கம் செலுத்தக் கூடிய எதிர்ப்புகள் எவையும் தோன்றியிருக்கவில்லை.

அன்றைய காலகட்டத்தில் சிறுபான்மையினர் மத்தியில் ஓரளவாவது தாக்கம் வரக்கூடியவாறான எதிர்ப்பை செலுத்தக்கூடிய நிலையில் இருந்த தமிழ்த் தலைமைகளும் இது தொடர்பாக மௌனமே சாதித்திருந்தன. இந்நிலைமைகள் பேரினவாதிகளின் சட்டம் இயற்று செயன்முறையை சுலபப்படுத்தியிருந்தன.

இக்காலத்தில் இயற்றப்பட்ட சட்டங்களில் மூன்று சட்டங்கள் இந்திய வம்சாவழியினரைப் பொறுத்தவரை பாரதூரமானவையாக இருந்தன.

**- செம்பாட்டான்**

(1) 1935ம் ஆண்டின் 19வது சட்டமாகிய காணி அபிவிருத்திச் சட்டம்.
(2) 1940ம் ஆண்டின் 24வது சட்டமாகிய மீன்பிடிச் சட்டம்.
(3) 1942ம் ஆண்டின் 47வது சட்டமாகிய பேருந்துச் சேவை அனுமதிப்பத்திரச் சட்டம்.

முதலாவது' சட்டமாகிய காணி அபிவிருத்திச் சட்டம் முடிக்குரிய காணிகளைப் பங்கிடும் போது அதனை இலங்கையருக்கே பங்கிடப்பட வேண்டும் எனக்கூறியது. இங்கு இலங்கையர் என்ற பதத்திற்குள் யார் அடக்கப்படுவார்கள் என்பது 1927 இல் உருவாக்கப்பட்ட நிலை ஆணைக்குழுவின் சிபார்சுகளுக்கேற்ப முடிவானது. நிலை ஆணைக்குழுவின் சிபார்சுகளின் படி இலங்கையர் என்ற பதத்திற்குள்' சிங்களவர்கள், இலங்கைத் தமிழர், பறங்கியர், இலங்கை முஸ்லீம்கள், இலங்கை மலாயர் சமூகத்தவர் இலங்கையை தாயகமாகக் கொண்ட ஐரோப்பியர் என்பவர்களே அடக்கப்பட்டனர்.

இந்தியவம்சாவழியினர் அடக்கப்படவில்லை. இதனால் 1939 - 1947க்கு இடைப்பட்ட காலங்களில் மலையகப் பகுதிகளில் கிராமிய் விரிவாக்கத் திட்டங்கள் என்ற பெயரில் 148, 562 ஏக்கர் காணிகள் குடியானவர், மத்தியவகுப்பினர் என்போர் மத்தியில் பங்கிடப்பட்ட போது இந்திய வம்சாவழியினராகிய மலையகத் தமிழ் மக்கள் அதில் சேர்க்கப்படவில்லை. மறுபறத்தில் தோட்டங்களை கிராமங்களாக மாற்றுகின்ற போது கூட அங்கு குடியிருந்த இந்திய வம்சாவழி தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு நடுத் தெருவில்' விடப்பட்டனர். 1949இல் இடம் பெற்ற உருளை வள்ளித் தோட்டச் சம்பவம் இதற்கு சிறந்த உதாரணமாகும். அங்கிருந்த இறப்பர் தோட்டத்தை சிங்கள மக்களுக்கு பகிர்ந்து கொடுத்தார்களே தவிர அங்கு வாழ்ந்த இந்திய வம்சாழியினருக்கு பெயருக்காவது சிறிய நிலமாயினும் கொடுக்கப்படவில்லை.

இரண்டாவது சட்டமாகிய மீன்பிடிச் சட்டம் இலங்கையரல்லாதோர் இலங்கையின் கடற்பிராந்தியத்தில் மீன்பிடிக்க விரும்பினால் அனுமதிப்பத்திரத்தை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டது. இச்சட்டத்தின் இலக்கும் இந்திய வம்சாவழியினரை மீன்பிடித் தொழிலிலிருந்து தடுப்பதாகவே இருந்தது.

மூன்றாவது சட்டமாகிய பேருந்து சேவை அனுமதிப்பத்திரத்திச் சட்டம் பேருந்துச் சேவையை நடாத்துவதில் இலங்கையருக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் எனக்கூறியது. அதாவது ஒரு கம்பனியில் 85% மான பங்குகள் இலங்கையருக்கு இருந்தால் மட்டுமே அதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும் என்றும், பலமனுக்கள் விண்ணப்பத்துக்கு அனுப்பப்பட்டால் இலங்கையர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் விதித்தது.

இச்சட்டங்கள் அக்காலத்தில் எழுச்சியடைந்த இலங்கையர் மயமாக்கம் என்ற கொள்கையின் பிரதிபலிப்பாகவே இருந்தது. உண்மையில் இலங்கையர் மயமாக்கம் என்பதன் மறைமுக கருத்து இலங்கையிலுள்ள அனைத்து வளங்களின் கிடைப்பனவில் இருந்து இந்திய வம்சாழியினரை அப்புறப்படுத்துவதேயாகும். இதே காலப்பகுதியில் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தும் இலங்கையர் மயமாக்கம் கொள்கை பலமாகப் பின்பற்றப்பட்டது. புதிதாக ஊழியர்களைச் சேர்க்கும் போது இந்திய வம்சாவழியினர் புறக்கணிக்கப்பட்டதுமல்லாமல் ஏற்கனவே கடமையாற்றியவர்களும் பலவந்தமாக நிறுத்தப்பட்டனர். 1939ம் ஆண்டு சேர். ஜோன்.கொத்தலாவல போக்குவரத்து அமைச்சராக இருந்த போதும் போக்குவரத்து துறையிலிருந்து மட்டும் 2500 இந்திய வம்சாவழி ஊழியர்கள் தொழிலிருந்து நீக்கப்பட்டனர். இதனால் 1936இல் 26வீதத்தில் இருந்து இந்திய வம்சாவழி அரசாங்க ஊழியர்கள் 1943 இல் 12%மாக குறைந்தனர்.

இவற்றைவிட 1937ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் சட்டமும் இந்திய வம்சாவழியினருக்கு எதிராக இருந்தது. டொனமூர் திட்டகாலத்தில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா உள்ளூராட்சி அமைச்சராக இருந்த போது இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின்படி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை இந்திய வம்சாவழியினருக்கு மறுக்கப்பட்டது. ஆரம்பத்தில் தோட்டத்துறைகளில் இருக்கும் ஐரோப்பியருக்கும் இவ்வுரிமை மறுக்கப்பட்டாலும் பின்னர் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் இந்திய வம்சாவழியினருக்கு தொடர்ச்சியாக மறுக்கப்பட்டே வந்தது. இவர்களுக்கு உள்ளூராட்சி மட்டத்தில் உரிமை கொடுப்பதானது அவர்களது அரசியல் ஸ்திரத்தை பலப்படுத்தி விடும் என்பதே இதற்கு காரணமாக அமைந்தது.

சட்டசபையில் இவர்களுக்கான வாக்குரிமையும் 1940இல் மட்டுப்படுத்தப்பட்டது. இவர்களை வாக்காளர்களாக பதிவதற்கு இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையாலேயே இம் மட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் 1931இல் 2,25,000ஆக இருந்த இந்திய வாக்காளர் தொகை 1936இல் 1,68,000ஆக குறைந்தது. அதே வேளை ஏனையவர்களில் வாக்காளர் தொகை 1931 இல் 10,50,000இலிருந்து 1940இல் 26,35,000ஆக அதிகரித்திருந்தது.

டொனமூர் அரசியல் திட்டத்தில் சிறுபான்மையோரைப் பாதித்த மூன்றாவது அம்சம் நிர்வாகக் குழு ஆட்சி முறையாகும். இதுவும் தேசவாரிப் பிரதிநிதித்துவ முறையிலிருந்து தோற்றம் பெற்ற ஒன்றாகும். இம் முறையின்படி சட்டசபையான அரசாங்க சபையின் உறுப்பினர்களில் மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களையும் தவிர ஏனைய 58 உறுப்பினர்களும் ஏழு குழுக்களாக பிரிக்கப்பட்டனர். இக்குழுக்களிடம் கல்வி, சுகாதாரம், விவசாயம், உள்ளூராட்சி, உள்நாட்டு தொழில், போக்குவரத்து ஆகிய ஏழு துறைகள் ஒப்படைக்கப்பட்டன. குழு உறுப்பினர்களே குழுக்களின் தலைவர்களை தெரிவு செய்வர். இவர்களே அத்துறைகளின் மந்திரிகளாக விளங்கினர். குழுக்களில் பெரும்பான்மையாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே இருந்தனர். இதனால் சிறுபான்மை இனத்தவர் குழுக்களின் தலைவராக அதாவது மந்திரியாக வரவேண்டுமாயின் பெரும்பான்மை இனத்தவரின் தயவிலேயே தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டது. • 1931இல் மந்திரிசபை அமைக்கப்பட்ட போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆதரவு தெரிவித்தமையால் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த பெரி-சுந்தரம், மாக்கான் மாக்கார் என்போர் தொழில் மந்திரியாகவும் போக்குவரத்து மந்திரியாகவும் வர முடிந்தது. ஆனால் 1936இல் மந்திரிசபை அமைக்கப்பட்ட போது பெரும்பான்மை இனத்தவர்கள் ஆதரவு தெரிவிக்காமையினால் ஒரு சிறுபான்மையினராவது மந்திரியாக தெரிவு செய்யப்படவில்லை. அம்மந்திரிசபை தனிச் சிங்கள மந்திரிசபையாகவே இருந்தது.

பேரின ஆதிக்கம் கொண்ட குழுக்களின் இத்தகைய நிலைமைகளினால் தீர்மானம் எடுக்கும் செய்முறையிலும், தாக்கங்களை ஏற்படுத்த சிறுபான்மை இனத்தவர்களினால் முடியவில்லை. இதனால் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான தீர்மானங்கள் குழுக்களில் எடுக்கப்பட்டபோது அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. உண்மையில் இவர்களது பிரதிநிதித்துவம் சட்டசபையிலும் நிர்வாக குழுக்களிலும் கருத்துக்களைக் கூற இடமளிக்கப்பட்டதே தவிர தாம் சார்ந்த இனங்களின் நலன்களை பேணுவதற்கு பெருமளவு உதவவில்லை. இந்நிலை டொனமூர் திட்டத்தில் மாத்திரமல்ல. இன்றுவரை தொடர் நிலையிலேயே உள்ளது. இவையெல்லாம் உணர்த்துகின்ற உண்மை என்னவென்றால், தேசிய இனங்களுக்கு அதிகாரம் பங்கிடப்பட்டால் ஒழிய இப்பிரதிநிதித்துவத்தினால் எவ்வித பயனும் இல்லை என்பதே ஆகும்.

## தொலைதல்



ஒரு கடிதம் கூட
எழுதமுடியாததான வெறுமை
இந்த மழைக்கால குளிர் இரவு
இழுத்துப் போர்த்திப் படுக்கத்தான் சரி
கனவு வரும்
நாளைக்கு அதைச் சொல்லிச் சொல்லி
பொழுதைப் போக்கலாம்
சிலவேளை ... கனவில்
தொலைந்து போன அவளும் வரலாம்
வந்தால் நான்
சிலநாட்களுக்காவது
என்னைத் தொலைப்பேன்
......
தொலைந்த தேசத்தில்,
தொலைந்து போன இருப்பில்
நானும் அவளுக்காகக்
கொஞ்சம் தொலைந்து போவதில்
இப்போதைக்குக் கிடைக்கும் திருப்தி
எனக்குப் பெரியதுதான்

-ஸ்ரேகன்-

30. 05. 1994

நன்றி - நூலகத்திட்டம்



(சென்ற இதழ் தொடர்ச்சி)

# இடதுசாரிகளை முறியடிக்க உருவான இ.தொ.கா

வி.ரி.தர்மலிங்கம்

## இடதுசாரித் தொழிற் சங்கம் உதயம்:

தோட்டங்களில் நடேசய்யர் காலடி எடுத்து வைத்ததைத் தொடர்ந்து இடதுசாரித் தொழிற் சங்கம், தோட்டங்களுள் நுழைந்தது. அவர்களின் செயற்பாடுகள் விறுவிறுப்பு நிறைந்ததாக நிர்வாகத்திற்கு எதிராக போராடும் நிலையை உருவாக்கிக் கொண்டு வளர்ந்தது.

இளம் இடதுசாரிகள் 1930ம் ஆண்டளவில் இலங்கை அரசியலில் காலடி வைத்தனர். 'சோசலிஸ ஆட்சியின் மூலமே தொழிலாளர் விடுதலை பெற்று, பொருளாதார சுதந்திரம் பெற்று உரிமையுடன் வாழ முடியும் என்ற கொள்கையுடன் துடிப்புடன் இறங்கினர். 'சூரியமல்' இயக்கம் மூலம் அவர்கள் மக்கள் மத்தியில் அறிமுகமானார்கள். ''லங்காசமசமாஜக்கட்சி'' என்ற அரசியல் இயக்கத்தையும் அதனைத் தொடர்ந்து தொழிற் சங்கங்களையும் அமைத்தனர். இலங்கையில் மிகவும் ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்த மக்களை போராட்டப் பாதைக்கு அழைத்துவரும் நோக்கத்துடன் அவர்கள் மத்தியில் செயற்பட முனைந்தனர். எனவே தோட்டத் தொழிலாளர்களுக்காக அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் யூனியனை 1935ல் தொழிற் சங்க சட்ட மூலத்திற்கு ஏற்ப பதிவு செய்தனர். தொழிலாளர்கள் மத்தியில் வர்க்க சிந்தனையை உருவாக்கினர்.

இவர்கள் ஏற்படுத்திய போராட்ட உணர்வு பல பகுதிகளிலும் அநியாயத்தை எதிர்க்கும் உணர்வினை ஏற்படுத்தியது. 'முல்லோயா'ப் போராட்டம் இவர்களின் போராட்டப் பாதையில் முக்கியமான வரலாற்றுத் திருப்பமாகும். முல்லோயாப் போராட்டமே தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கப் போராட்டத்திற்கு அடியெடுத்துக் கொடுத்தது. தோட்ட சாம்ராஜ்யத்திற்குள் போராட்டத்தை இடது சாரிகள் அறிமுகப்படுத்தி மக்கள் மனதில் வீரம் செறிந்த உணர்வினை ஏற்படுத்தினர்.

இலங்கையில் சோஸலிசக் கொள்கைகளை அறிமுகப்படுத்திய முன்னோடிகளாக திரு. பிலிப் குணவர்த்தன, டாக்டர் என்.எம்.பெரேரா, டாக்டர் விக்கிரமசிங்க, கொல்வின், ஆா.டீ.சில்வா ஆகியோர் திகழ்ந்தனர். இலங்கை அரசியலில் பிரவேசித்திருந்த சோஸலிஸ்டுக்களில்டாக்டர் என்.எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர்.டீ.சில்வா ஆகியோர் தோட்டத் தொழிலாளர் மத்தியில் வர்க்க சிந்தனையை உருவாக்க எண்ணினர். இவர்களுடன் தொடர்பு கொள்வதற்காகவே தோட்டத் தொழிலாளர்கட்கென தனியான தொழிற்சங்கத்தை அமைத்தனர். தோட்ட நிர்வாகத்துக்கெதிரான போராட்டத்தை நடாத்தினர். இரண்டாம் உலகமகா யுத்தக் காலத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் எனக் குற்றம் சுமத்தி பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர். இவர்களைச் சிறையில் அடைத்த போதிலும் 1942 வரை இத்தொழிற்சங்கம் செயற்பட்டது. இருப்பினும் தொடர முடியவில்லை. இவர்களின் உணர்வு மிக்க செயற்பாடுகளும் தோட்டத் தொழிலாளர்களை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணங்களும் செயலிழக்க நேரிட்டது.

தோட்டத்திற்குள் இவர்களின் பிரவேசம் உணர்வுள்ள வர்க்க சிந்தனையாளர்கள் பலரை உருவாக்கியது. சிந்தித்து துணிந்து முகம் கொடுக்கக் கூடிய செயல்வீரர்கள் பலரை தோட்டங்களில் உருவாக்கியது. கொள்கைப்பிடிப்புள்ள தொழிலாளர்கள் உதயமானார்கள்.



இந்த உறுதி வாய்ந்த தொழிலாளர் சக்திகள், மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமுடியாமல் தலைவர்களின் சிறைவாசம் குறுக்கிட்டது. இதனைத் தொடர்ந்து வேறு பல தொழிற்சங்கங்கள் தோட்டங்களில் உருவாகின.

## காங்கிரஸின் தோற்றம்:

இலங்கையில் நகர்ப்புறத்தில் வாழ்ந்த இந்தியர்களுக்காக அமைக்கப்பட்ட அமைப்பிலிருந்து உருவாகியதே மலையகத்தில் இன்று கோலோச்சும் காங்கிரசின் அடிநாதமாகும். தோட்டங்கள் திறக்கப்பட்டு மக்கள் படிப்படியாகக் குடியேறிய பின் அவர்களுக்கென ஒருவாழ்க்கை அமைந்து விட்டது. அவர்கள் ஒரு புதிய சமூகமாக நிலையான வாழ்க்கையை அமைத்துக் கொண்டபின், இந்தியாவிலிருந்து தொழிலை நாடிப் பலர் வந்தேறினர். இலங்கை வாழ் இந்தியரின் நலன் காக்கவே இலங்கை இந்திய சங்கம் என்ற அமைப்பை 1912ம் ஆண்டு உருவாக்கினர். இச்சங்கத்தை தோற்றுவித்தவர்களுள் பிரதானமானவர்கள் திருவாளர்கள் பெரியசுந்தரம், டேவிட் ஆகியோராவர். இலங்கை இந்தியர் சங்கம் இந்திய வம்சாவழியினரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக 1924 ல் சட்ட நிரூபணசபைத் தேர்தலில் திரு டேவிட் அவர்களை அபேட்சகராக நிறுத்தியது. ஆனால் அவர் தோல்வியுற்றார். திரு.பெரியசுந்தரம் போட்டியிட விரும்பியும் சட்டப் பிரச்சினை காரணமாக போட்டியிட முடியவில்லை. 1931ம் ஆண்டு தேர்தலில் அரசாங்க சபைக்கு திரு பெரியசுந்தரம் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொழில் மந்திரியாகப் பதவியேற்று அரசாங்க சபையில் இந்திய வம்சாவழியினரைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்.

இலங்கையில் இந்திய வம்சாவழியினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல அமைப்புக்கள் உருவாகியிருந்தன. 17.01.1939ல் ஜவகர்லால் நேரு இலங்கைக்கு வருகை தந்த போது அவரின் அறிவுரைக்கேற்ப இந்த அமைப்புகள் ஒன்றிணைக்கப்பட்டன. இணைந்த அமைப்புகளின் உருமாற்றமே இலங்கை இந்தியக் காங்கிரசாகும். இந்தியர் என்ற உறவுமுறையைக் கொண்டாடியே இவர்கள் தோட்ட மக்கள் மத்தியில் பிரவேசித்தனர்.

1922 முதல் திரு.நடேசய்யரின் தொழிற்சங்கமும் 1935 முதல் ல.ச.ச.கட்சியும், தோட்டத் தொழிலாளர் யூனியனும், இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர் மத்தியில் செயற்பட்டுக் கொண்டிருந்தன. இவர்கள் இந்த மக்களின் நலனில் அக்கறை கொண்டு ஏறத்தாழ 18 ஆண்டுகாலம் செயலாற்றி அந்த மக்களின் நல்வாழ்விற்கு வழிவகுத்துக் கொண்டு போகும் பொழுது 1939ம் ஆண்டு இலங்கை இந்திய காங்கிரஸ் இடையில் புகுந்தது. இந்த அமைப்பில் தொழிலாளர் பிரிவு இந்திய வம்சாவழியினர் என்ற உணர்வினை தோட்ட மக்கள் மத்தியில் புகுத்தி தங்கள் அமைப்புக்கு செல்வாக்கைப் வளர்த்துக் கொண்டனர். பெரிய கங்காணிமார் இந்த அமைப்புக்கு ஆதரித்தனர். கங்காணிமார்களினதும், துரைமார்களினதும் ஆதிக்கத்திற்கு சவால்விட்டு தோட்ட மக்களைத் தட்டியெழுப்பிக் கொண்டிருந்த நடேசய்யரின் செல்வாக்கை முறியடிக்கவும், இடதுசாரிகளின் தொடர்பைத் துண்டிக்கவும், தேர்தலின் போது தொழிலாளர்களின் வாக்கைக் கவர்ந்து அரசாங்க சபையில் அங்கத்துவம் பெறவுமே தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் தங்களின் அமைப்பை இ.இ. காங்கிரஸ் உருவாக்கியது. தோட்ட மக்களின் பலவீனத்தால் அவர்கள் தங்களின் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள முடிந்தது. இ.இ.காங்கிரசே 1950இல் இலங்கை தொழிலாளர் காங்கிரசாகப் பெயர் மாற்றம் பெற்றது. இதிலிருந்து ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஜனாப் ஏ.அஸீஸ் தலைமையில் பிரிந்தது. இந்த அமைப்பு மக்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்தை தொடர்ந்து செயற்படுத்தியது. இந்த நாட்டில் வாழ்கின்ற ஏனைய மக்களின் வாழ்க்கை முறையின் வளர்ச்சிக்காக இலங்கையை ஆட்சிபுரிந்த அரசாங்கங்கள் எந்தளவுக்கு உழைத்தார்களோ அதில் சிறியளவு உழைப்பையேனும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை முன்னேற்ற பயன்படுத்தவில்லை. ஆனால் அரசாங்க சபையில் உறுப்பினராகத் துடித்தவர்கள் இன்று அமைச்சர்களாகும் வரை உயர்ந்திருக்கின்றார்கள். 1931ல் அரசாங்கச் சபைக்கு நடந்த தேர்தலின் போது திரு.பெரியசுந்தரத்தை ஆதரித்து பெரிய கங்காணிமார், தோட்டத்துரைமார், வீரகேசரிப் பத்திரிகை ஆங்கில அரசு ஆகியன பிரச்சாரம் செய்தன. இந்த அமைப்புக்கு அதே ஆதரவு இன்றும் தொடர்கின்றது.

(வரும்)



# வில்லுப்பாட்டுக்கொரு வீரமணி!

யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக மஹாகவியின் கண்மணியாள் காதை வில்லுப்பாட்டை லடீஸ் வீரமணி அவர்கள் நிகழ்த்திய போது சபையினருக்கு ஒரு புதுவகையான அனுபவம் கிடைத்தது. பாரம்பரியமானதும் வைதீகமானதுமான அம்சங்களை மட்டுமே பாடிக் கொண்டிருந்த வில்லிசை, லடீஸ் வீரமணி அவர்கள் மூலம் புத்துயிர் பெற்றது. யாழ்ப்பாணத்தில் லடீஸ் வீரமணியின் வில்லிசை நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கிறங்கிப்போன எஸ்.எம்.கோபாலரத்தினம் (முன்னாள் ஈழநாடு ஆசிரியர், எழுத்தாளர்) வில்லுப்பாட்டுக்கொரு வீரமணி; தமிழ்க் கவிதைக்கு ஒரு மஹாகவி என்ற நீண்ட ரசனாபூர்வமான ஒரு கட்டுரையை எழுதினார்.

இன்று கலைஞர் லடீஸ் அவர்கள் 05.06.1994 அன்று காலமாகி விட்டார் என்று அறிகிற போது சிறுவயதில் யாழ்ப்பாணத்து வில்லிசை நிகழ்ச்சிகளுக்கு அவருடன் போயிருந்த ஞாபகங்கள் எழுகின்றன. நாடகக் கலைஞராகவும் பாடகராகவும் எல்லா வயதினர்க்கும் ஒத்த கூட்டாளியாகவும் எல்லோரையும் மகிழ வைத்த லடீஸ் அவர்கள் இன்று இல்லை. பல சந்தர்ப்பங்களில் தன்னுடைய நாடகங்களை மேடையேற்ற முடியாமல் கஷ்டப்பட்டவர் லடீஸ். எனினும் சலோமியன் சபதம் போன்ற அவருடைய நாடகங்கள் மிகுந்த கவனிப்பைப் பெற்றன. எந்தவொரு சிறு பாத்திரமானாலும் அதனை அற்புதமாக நடித்து அவையினரின் கவனத்தை ஈர்த்து விடுவதில் லடீஸ் ஒரு கெட்டிக்காரர். ஒருமுறை புகழ்பெற்ற நெறியாளர் ஒருவரின் நாடகத்தில் முக்கியமான வேடம் லடிஸுக்கு வழங்கப்படவில்லை. ஒரு சிறு காட்சியில் வரும். பிச்சைக்காரன் பாத்திரமே லடிஸுக்கு வழங்கப்பட்டிருந்தது. என்றாலும் நாடகம் பார்த்தோர்கள் அனைவரையும் உயிர்த்துடிப்பு மிக்க (லடிஸுக்கு மிகவும் விருப்பமான வார்த்தைகளில் சொல்வதானால் ''ஜீவ களை'' மிக்க) அந்தப் பாத்திரம் ஆகர்ஷித்து விட்டிருந்தது.

வாழ்க்கையில் எல்லா வகையான ஏற்ற இறக்கங்களையும் லடீஸ் சந்தித்திருந்தார். எண்பதுகளின் நடுப்பகுதியில் ஈழப்புரட்சி அமைப்பினர் (EROS) லடிஸின் பாடல்களுக்கும், வில்லிசைகளுக்கும் ஒத்தாசையாக இருந்து லடிஸின் நிகழ்ச்சிகளைத் தமிழ் நாட்டில் அரங்கேற்றினர். ''ஈழமாதா இறத்தம் போதாதோ?'' (லடீஸ் அவ்வாறு தான் பாடுவார் ''றத்தம்'' என வன்மையாக உச்சரிக்கும் போதுதான் ஆத்திர உணர்வு தொனிக்கிறது என்பது அவர் கருத்து) என்ற லடிஸின் பாடல் மிகுந்த புகழ் பெற்றது என்பது மட்டுமல்ல கேட்பவரை பலவிதமான உணர்ச்சி நிலைகளுக்குள் மாறி மாறி ஆழ்த்தி விடுகிற ஒரு பாடலுமாகும்.

84ம் ஆண்டளவில் தமிழ்நாட்டில் இருந்த போது, லடிஸின் சில நிகழ்ச்சிகளைப் பார்க்க முடிந்தது. குறிப்பாக அவர் மஹாகவியின் ''யாழ்ப்பாணப் பாட்டை'' பாடுகிற போது வருகிற அவரது குரலின் ஏற்ற, இறக்கம், அசாதாரணமானது.

லடீஸின் நண்பர்களும் கலை இலக்கிய ஆய்வாளர்களும் லடிஸின் பாடல்களை ஒலிப்பதிவு செய்து வெளியிடுவது சிறந்த முறையில் லடிஸை நினைவு கொள்வதாக அமையும்.

## ஐரோப்பிய....

களில் விடுதலைப்புலிகள் போன்ற அமைப்புக்களின் நடவடிக்கைகளில் கண்டும் காணாதது போல விடுவதும் தமக்கு விரும்பாத நேரங்களில் 'பயங்கரவாதம்' என்று முத்திரை குத்தி விடுவதும் மேல்நாட்டு ராஜதந்திர வழக்கு.

இஸ்ரேலின் ரகசிய உளவுப்படையான மொஸாட்டினதும் மற்றும் இஸ்ரேலிய விஸ்தரிப்புவாத அரசியலமைப்புக்களது நடவடிக்கைகளையும், கொலைகளையும் 'தேவை கருதி' இந்த நாடுகள் அனுமதித்துள்ளன. அதுபோலவே குர்ஷிஷ்தான் மற்றும் துருக்கிக் கொம்யூனிஸ்ட் இயக்கங்களை அண்மைக்காலம் வரை அனுமதித்திருந்த இந்த நாடுகள் இப்போது இஸ்லாமியப் பயங்கரவாதம்/ அடிப்படைவாதம் என்ற பூச்சாண்டியைக் காட்டி அவற்றைத் தடை செய்து விட்டன.

இஸ்லாமிய அடிப்படைவாதிகளோ அல்லது வேறு 'பயங்கரவாதி'களாலோ அபாயங்களும் ஆபத்துக்களும் இல்லை என்று ஒருவரும் வாதிட முடியாது. எனினும் இந்த மேலைநாடுகளின் சுயநலமும் இரண்டக நிலையும் (Double Standards) ஒரு பொதுவான ஜனநாயகச் சூழல் ஏற்படுவதற்கு உதவாது.

மனித உரிமைகளும் ஜனநாயகமும் ஏனைய அடிப்படைச் சுதந்திரங்களும் பாராபட்சமற்றும் சொந்த நாட்டு நலன்களை முன் வைக்காமலும் பேணப்படுவதில் தான் சமாதானமும் அமைதியும் கிட்ட முடியும்.

ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் இலங்கை பற்றிய அறிக்கைகளும் இந்தப் பின்னணியிலேயே நோக்கப்பட வேண்டும்.


- சிவா கௌதமன்

நன்றி - நூலகத்திட்டம்



# இது தான் எனது பாதை !

## குமார் பொன்னம்பலம்





இது தேர்தல் ஆண்டாக இருப்பதனால் முதலாவதாக ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவுக்கோ ஸ்ரீ.ல.சு.கவுக்கோ வாக்களிக்குமாறு தமிழர்களைக் கேட்பதன் மூலம் சில தமிழ் அரசியல் வாதிகள் மீண்டும் ஒரு தடவை தமிழர்களை ஐ.தே.கவின் அல்லது ஸ்ரீ.ல.சு.கவின் வால்களாக இருக்கும் படி தூண்டிக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

தமிழர்கள் ஐ.தே.கவையோ ஸ்ரீ.ல.சு.கவையோ ஆதரிப்பதற்கு எவ்வித காரணமும் இல்லை. இனிமேலும் இவ்வாறு செய்வது எமது தலைகளில் நெருப்பை வாரிக் கொட்டுவதற்குச் சமமாகும்.

ஆரம்பத்தில், ஆளும் கட்சியான ஐ.தே.க வை எடுத்துக் கொள்ளுவோம். 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான தமது விஞ்ஞாபனத்தில் ஐ.தே.க தமிழர் பிரச்சினை என்று ஒன்றுண்டு என்பதை அங்கீகரித்து, வட்டமேசை மாநாடொன்றைக் கூட்டுவதன் மூலம் அதற்குத் தீர்வு காணப்படும் என வாக்குறுதி அளித்திருந்தனர். தமது அந்த ஆட்சிக்காலத்தின் போது அவர்கள் இவ்வாறு எதையும் செய்ய வில்லை.

பதிலாக அவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை நிறுவினர். ஆனால் ஆரம்பத்திலிருந்தே இம்முறையை ஐ.தே.க. நகைப்பிற்கிடமாக்கி வந்தது. இந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் ஈழக் கோரிக்கைக்கு மாற்றாக அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். 1982ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க.தமிழர்களுக்கு எதையும் காட்டமுடியவில்லை.

குறிப்பிட்ட ஒரு நிலைப்பாட்டுடன் ஒரு தமிழன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சமயத்தில் தமிழ் ஈழத்துக்காக வாக்களித்த தமிழர்கள் ஸ்ரீலங்காவுக்கான ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் அக்கறை கொள்ள வேண்டிய அவசியமில்லை எனவும், திருகோணமலையில் தாம் எடுத்த முடிவுக்கிணங்க தமிழ் வேட்பாளருக்கெதிராகத் தமிழர்கள் வாக்களிக்க வேண்டுமெனவும் பகிரங்கமாக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அறிக்கை விடுத்திருந்தனர்.

தமிழர்கள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை ஆதரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் மறைமுகமாக விடுத்திருந்தனர். இதே வேளை ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தினர் எஸ்.எல்.எப்.பி. அபேட்சகருக்கு மெய்காவலர்களைத் தந்துதவினர்.

அவரது மேடையிலிருந்து உரைகளும் ஆற்றினார். இவ்வாறு செய்யும் அதே வேளையில் ஈ.பி.ஆர்.எல்.எப் இரகசியமாக ஐ.தே.க.வை ஆதரித்தனர்; ஏனெனில் பிரேமதாச இலங்கை இந்திய உடன்படிக்கையை நீடித்திருக்கச் செய்து இந்திய அமைதிகாக்கும் படையையும் வைத்திருப்பதற்கு எண்ணியதாலாகும். இதனைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஆகையால் இந்த விஷயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் அரசியல் தில்லுமுல்லுகளுக்கு குற்றவாளிகளாகக் கணிக்கப்பட வேண்டும். தமிழர்களிடையே இத்தகைய அரசியல் போக்கு இனிமேலும் நீடிக்கக்கூடாது. இத்தகைய அரசியல்வாதிகள் தமிழர்களைப் பகடைக்காய்களாக உபயோகித்து அரசியல் லாபம் தேட விடமுடியாது. சொந்த நலனை மட்டும் நாடிநிற்கும் ஒரு சில அடிவருடிகளைத் தவிர எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் ஐ.தே.கவுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

இனி, ஸ்ரீ.ல.சு.கவை எடுத்துக் கொள்வோம். அதன் பழைய வரலாறு எப்படி அமைந்திருக்கிறது? 1982 ஜனாதிபதித் தேர்தலில் மிளகாய்க்கும் வெங்காயத்துக்குமாக சில தமிழர்கள் ஸ்ரீ.ல.சு.கவுக்கு வாக்களித்தனர். ஏனெனில் 1970-1977 காலப்பகுதியில் ஸ்ரீ.ல.சு.க. அரசாங்கம் தமிழ் கமக்காரர்களுக்கு உதவி செய்திருந்தது. 1988 ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க. ஜனநாயக மக்கள் முன்னணி விஞ்ஞாபனத்தை மக்கள் முன்வைத்துப்போட்டியில் இறங்கியது. இவ்விஞ்ஞாபனம், ''இனப்பிரச்சினைத் தீர்வு'' பற்றி முழுமையாக, பூரண அத்தியாயத்தைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் 8 மணித்தியாலங்களுக்கு மேல் செயற்பட்டு 8 மாதங்கள் செலவழித்து தயாரிக்கப்பட்டது இந்த விஞ்ஞாபனம். இதில் 8 அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பங்கு பற்றியிருந்தனர். ஸ்ரீ.ல.சு.க, ம.ஐ.மு, ஸ்ரீ.மு.கா, ஈ.எல்.ஜே.பி, லிபரல் கட்சி, ஜ.தொ.கா, ம.வி.மு, தமிழ் காங்கிரஸ் ஆகிய எட்டுக் கட்சிகளும் இதில் கலந்து கொண்டன. இவ்விஞ்ஞாபனத்தில் ஸ்ரீ.ல.சு.க., ம.ஐ.மு, லிபரல் கட்சி, ஜ.தொ.கா, அ.இ.த.கா, என்பன கையொப்பமிட்டன. ஸ்ரீ.மு.கா, ஈ.எல்.ஜே.பி, ம.வி.மு என்பன விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ள விடயங்கள் தவிர்ந்த வேறு காரணங்களுக்காக, விஞ்ஞாபனத்தில் கை ஒப்பமிடவில்லை. இந்த 8 கட்சிகளைத் தவிர 'புளொட்' இயக்கமும் சில அமர்வுகளில் பங்குபற்றி விஞ்ஞாபனத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டது. 'ஈரோஸ்' இயக்கமும், அதன் தலைவரால் எழுதப்பட்ட கடிதத்தின் மூலம், விஞ்ஞாபனத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டது. முடிவு செய்யப்படும் ஒவ்வொரு விடயம் பற்றியும் உடனுக்குடன் அறிவிக்கப்பட்டபோதும் விடுதலைப்புலியினர் எந்தக் கட்டத்திலும், ''இனப்பிரச்சினைக்கான தீர்வு'' பற்றிய அத்தியாயத்திலுள்ள எந்த விடயம் பற்றியும் எவ்வித மறுப்பும் காட்டவில்லை. இருந்த போதிலும், 1988 ஜனாதிபதி தேர்தல் முடிவு தெரிவிக்கப்பட்ட 72 மணியாலங்களுக்குள் ஸ்ரீ.ல.சு.க இந்த விஞ்ஞாபனத்தை ஒரு தலைபட்சமாக தூக்கியெறிந்து விட்டது.

இதன் பின்னரும், இவ்வளவுகால அனுபவங்களின் பின்னரும் தமிழர் விடுதலைக்கூட்டணியும் ஈ.பி.ஆர்.எல்.எப் உம் ஸ்ரீ.ல.சு.க யின் பக்கம் சாயப்போவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இவ்வாறு அவர்கள் செய்வது நியாயமானதா?

1993 மாகாணசபைத் தேர்தல்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஈ.பி.ஆர்.எல்.எப் உம் நவசமசமாஜக் கட்சியை ஆதரிக்குமாறு தமிழர்களைக் கேட்டனர். 1994 தென் மாகாண சபைத் தேர்தல் முடிவு வெளியாகிய சில மணி நேரங்களில் இரு கட்சியினரும் தமது பாதையை மாற்றி ஸ்ரீ.ல.சு.கவைப் புகழ்ந்து பாட ஆரம்பித்து விட்டனர். இத்தகைய மாறாட்டத்துக்கு என்ன காரணம்? திருமதி குமாரதுங்கவா? ஆனால் அவர் தேர்தல் காலத்துக்கு முன்னமே இருந்தவராயிற்றே. அவர்தான் ஸ்ரீ.ல.சு.கவை அத் தேர்தலில் முன்னெடுத்துச் சென்றவர். அவரின் எந்தச் செயலாவது எந்தக் கூற்றாவது தமிழர்களுக்கு நம்பிக்கை தருவதாக இருந்ததா? ''விடுதலைப் புலிகளைக் காட்டிலும் படையினர் எந்த விதத்திலும் சிறந்தவர்களல்ல'' என்ற ஒரேயொரு கூற்றைத்தான் தேர்தலுக்கு முன்னர் அவர் கூறியிருந்தார். இது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாகி விடுமா?

திம்புவில் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப் உட்பட தமிழர் கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட 4 விடயங்களுள் ஒன்றான, தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை ஸ்ரீ.ல.சு.க அங்கீகரிக்குமா? 13வது திருத்தத்துக்கூடாக சமஷ்டி போன்ற ஒன்றை இலங்கை கொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப் உட்பட சகல தமிழ் அரசியல் கட்சிகளும் கோரி நிற்கும் பூரண அதிகாரங் கொண்ட சமஷ்டி ஆட்சி முறையை ஸ்ரீ.ல.சு.க ஆதரிக்குமா?

ஸ்ரீ.ல.சு.க ஆட்சிக்கு வருமானால் நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்டப் போவதாகக் கூறி வருகிறது. அதற்குச் சில காலம் செல்ல வேண்டும். அப்போது பாராளுமன்றம் பூரண அதிகாரம் கொண்டதாக வரும். அதன் பின்னர் ''பெற்றோரிலிருந்து பிள்ளைக்கு'' தாரைவார்க்கும் வைபவம் இடம்பெற வேண்டும்; அதற்கும் சிறிது காலம் செலவாகும். இந்தக் காரியத்தைச் செய்து முடித்த பின்னர் ஸ்ரீ.ல.சு.க மாகாண சபை முறையை நீக்க முன்வருவார்கள். இதற்கும் ஒரு சிறு காலம் செல்லும்; இவையாவும் சிங்கள மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளாகும். இவை தமிழர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் அல்ல. தருமம் வீட்டில் ஆரம்பிக்கீ வேண்டும். இவை எல்லாவற்றையும் செய்து முடித்த பின்னர்தான் திருமதி குமாரதுங்காவின் முதன்மை விடயங்கள் வரும். அதாவது வாழ்க்கைச் செலவு உயர்வும், ஜனநாயக மீறல்களும் வரும். இத்தகைய விடயங்கள் யாவும் செய்து முடிக்கப்பட்டதும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் நடாத்தப்பட வேண்டிய காலம் வந்துவிடும்! அவற்றோடுதான் சிறுபான்மையினரைக் காதலிக்கும் படலம் மீண்டும் ஆரம்பமாகும்!!

ஆக, இனிமேல் தமிழர்கள் ஐ.தே.கவையோ ஸ்ரீ.ல.சு.கவையோ ஆதரிப்பதனால், தமிழர் பிரச்சினையை மேலும் ஆறு வருடங்களுக்குத் தள்ளிப் போடுவதற்கு அவர்கள் உதவுகிறார்கள் என்பதைக் கூறி நான் அவர்களை எச்சரிக்க விரும்புகின்றேன்.

தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டால் தமது ''சீவனோபாயம்'' பாதிக்கப்படுமென்று கருதுபவர்கள் போல ஒவ்வொரு தேர்தலிலும் மாறி மாறி பக்கங்கள் சாயும் அரசியலில் ''பிழைத்துக் கொண்டிருக்கும்'' தமிழ் அரசியல் வாதிகளைத் தமிழர்கள் இனிமேலும் நம்பி மோசம் போகக் கூடாது

இவ்வாறு சொல்லும் போது நான் யாரைப் பிரதிநிதித்துவம் செய்கிறேன் என்று கேட்கலாம். அகில இலங்கைத் தமிழ் காங்கிரசோ அல்லது நானோ ஆளுவதற்கான தெய்வீக உரிமைக் கொள்கையை ஆதரிப்பவர்களல்ல; 1983க்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியால் கூறப்பட்டது போலவும், 1985 திம்பு பேச்சுவார்த்தையில் சில தமிழ் அரசியல் கட்சிகளினால் கூறப்பட்டது போலவும், தற்போது விடுதலைப்புலிகளால் கோரப்படுவது போலவும், தமிழ் மக்களின் பூரண தனிப்பிரதிநிதிகள் என்று நாம் எம்மைக் கூறிக் கொள்ளும் அகங்காரம் கொண்டவர்களல்ல. நான் எனது மனச்சாட்சியையே பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். அதற்குத் தான் நான் வகை சொல்ல வேண்டியவன். நானும் ஒரு தமிழன்; எனது மனச்சாட்சி எதைச் சரி என்று சொல்கிறதோ அதை நான் தமிழ் மக்கள் முன்வைத்துள்ளேன்.

ஆக ஒரு தமிழன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும்; அவனுக்கு தமிழர்கள் அனைவரும் ஒருமித்து வாக்களிக்க வேண்டும். தமிழர் பிரச்சினையை கையாளுவதில் சூடுசுரணையற்ற, பாராமுகமான போக்கைக் கடைப்பிடிக்கும் ஐ.தே.கவுக்கும் ஸ்ரீ.ல.சு.கவுக்கும் எதிராக தமிழர்கள் காட்டக்கூடிய ஒரே எதிர்ப்பு இதுவாகும். இதுதான் எனது பாதை.

நன்றி - நூலகத்திட்டம்



## நிர்வாணமாகும் ....

வில்லை. சிங்கப்பூரிலும், அவுஸ்ரேலியாவிலும் ஒலியால் ஏற்படும் சூழல் மாசு காரணமாகவே ஒலிபெருக்கி தடை செய்யப்பட்டுள்ளதே அன்றி, சிறுபான்மை மக்களது மதங்கள் மீதான காழ்ப்புணர்வினால் அல்ல என்பதை அவர் வசதியாக மறந்து விட்டார்!

சகிப்புத்தன்மையை சிறுபான்மை மக்களிடம் எதிர்பார்ப்பது ஆக்கிரமிப்பு அன்றி வேறல்ல.

பௌத்த மதத்தினை ஆக்கிரமிப்பு மூலமாக கட்டி எழுப்புவதுதான் தலைவரின் நோக்கமென்றால், பாவம் புத்தபகவான்! பரி நிர்வாணம் அடைந்தது அவர் மட்டுமல்ல அவரது போதனைகளும் தான் போலும்!

## யாழ். பல்கலைக் கழக ....

புளொட்டுக்கு எதிராக இராஜமனோகரி புலேந்திரன் இன்று வவுனியாவில் முழங்குவதும் ஜனாதிபதி வரை முறையிடுவது பற்றியும் புளொட்டின் நெருங்கிய ஆதரவாளர் ஒருவரிடம் கேட்ட போது அவர் சிரித்துக் கொண்டே சொன்னார்: இராஜமனோகரி புலேந்திரனின் இறந்து போன கணவர் எழுந்து வந்து டிங்கிரி பண்டாவிடம் சொன்னாலும் எம்மை ஒன்றும் செய்ய முடியாது.

அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரன் வவுனியாவைப் பொறுத்த வரை ஒரு ஜெயலலிதாவாக இருக்கவே பார்க்கிறார். தனக்குக் கீழ்ப்படியாத அதிகாரிகளுடன் முறைப்புடன் நடந்து கொள்கிறார். எதற்கெடுத்தாலும் கோபமாகப் பேசிக் கொள்வாராம். அதைவிட வவுனியாவில் கஷ்டப்பட்டு கையளிக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களை விட தனக்கு வேண்டிய்வர்களுக்கும் ஐ.தே.கட்சி அங்கத்துவம் பெற்றவர்களுக்குமே கொடுக்கு படி கட்டளையிட்டுள்ளார்.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன குரேயின் முன்னூற்றி முப்பது வீடுகள் அண்மையில் கையளிக்கப்பட்டன. இதிலும் அனேகமான வீடுகள் பாதிக்கப்பட்டவர்களை விட ஐ.தே.கட்சி அங்கத்துவம் பெற்றவர்களுக்கும் இராஜமனோகரி புலேந்திரன் அம்மையாருக்கு நெருக்கமானவர்களுக்குமாகவே கொடுக்கப்பட்டுள்ளது என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

### தவறுக்கு வருந்துகின்றோம்

**அது திருமலைக் கோவிலே**

இதழ் 49ல் முன்பக்கத்தில் வெளியான 'அமைதிப்படைக்கு விற்கப்பட்ட சிலை?' என்ற செய்தியில் சிலை களவு போன கோவிலின் பெயர் தவறுதலாக இடம் பெறவில்லை. அது திருமலை கோணேஸ்வரர் கோவில் ஆகும்.

**கட்டுரையாளர் தில்லைராஜா**

அதே இதழில் 'நாட்டை அழித்து காட்டை வளர்ப்போம் டும்..டும்..டும்' என்ற 9ம் பக்க கட்டுரையை எழுதியவர் பெயர் இடம்பெறவில்லை. இக்கட்டுரையை எழுதியவர் இ.தில்லைராஜா

**அது புலிகளல்ல!**

48வது இதழில் இரண்டாம் பக்கத்தில் வெளியான நாட்குறிப்பில் மே-22ம் திகதிய செய்தியில் சபாலிங்கத்தின் கொலைக்குப் பின் மேலும் நால்வர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என வந்துள்ளது. இச் செய்தி தவறானது என பிந்திக் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. இவை தனிப்பட்ட விரோதங்களாலும் வேறு காரணங்களாலும் நடந்த கொலை எனத் தெரிய வருகிறது.

## நூலிழை...

தில்லை என்பதையும் லூசியன் சுட்டிக் காட்டினார்.

இன்றைய இலங்கைச் சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் எத்தனையோ விஷயங்களைப் பத்திரிகைகள் சுலபமாகப் புறக்கணித்து விடுகின்றன எனவும் இலங்கையில் ஜனநாயகம் நூலிழையில் தொங்குகிறது என்றும் லூசியன் மேலும் தெரிவித்தார்.

வழமை போலவே லூசியனுடைய இந்தச் சொற்பொழிவும் நூல் வடிவில் திரு.க.கந்தசாமி நினைவுக்குழுவால் வெளியிடப்படும் என்று தெரிகிறது.

## எங்களுக்கும் ........

ளர்ந்தவர்களை ஊக்குவித்து உதவினார். அவரது வேலை நாள் காலை ஏழுமணிக்குத் தொடங்கி மாலை ஆறு ஏழு மணிவரை தொடரும். மிக வேகமாகவும் குறைவான ஓய்வுடனும் வாரத்தில் ஏழு நாட்களும் வேலை செய்தும் அவருடைய முகத்தில் நிரந்தரமாக இருக்கும் முறுவல் மறைவது அரிது. அவரது வேலைப்பளுவின் மத்தியிலும் அவரிடம் ஆலோசனை கேட்டுப் போவோருடன் முகஞ்சுழியாது செலவிட அவருக்கு நேரம் இருந்து. அவருடைய மூத்த மகன் கடும் நோய்க்காளாகி திடீரென ஆறு வயதில் இறந்த ஒரு சந்தர்ப்பத்தை விட, அவர் உணர்ச்சி மேலிட்டு இரைந்து பேசியதை நான் அறியேன். அவரது இனிய சுபாவம் அவரது எளிமையான மனிதப் பண்பின் நேர்மையான வெளிப்பாடு என்பதே என் எண்ணம்.

1988இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குத் துணை வேந்தராக நியமனம் வழங்கப்பட்ட போது முன் நிபந்தனையாக யாழ்ப்பாணத்திற்கு எந்திரவியற்பீடம் தரப்பட்டால் மட்டுமே பதவி ஏற்பேன் என்று கூறினார். அரசாங்கம் இதைக் கொள்கையளவில் ஏற்று ஒரு பேராசிரியரையும் நியமித்தது. ஆயினும் யுத்தச் சூழலும் அரசாங்கத்தின் நம்பகமற்ற தன்மையும் வளாகத்திற்காக இட ஒதுக்கீட்டை விட அதிகமாக வேறு எதையுமே சாத்தியப்படுத்தவில்லை.

வேந்தராகப் பொறுப்பேற்று அவர் ஆற்றிய பணியை என்னை விட நன்றாக யாழ்ப்பாண மக்கள் அறிவார்கள். பிற பல்கலைக்கழகங்கள் மூடியிருந்த இரண்டு ஆண்டுகளும் யாழ் பல்கலைக்கழகம் இயங்கியதென்றால் அதில் அவரது பங்கு மிகப் பெரியது. மோட்டார் வாகனம் வசதி இல்லாத சூழலில் காலையில் இருபது மைல் தூரம் சைக்கிளில் தினமும் வீட்டிலிருந்து வளாகத்திற்குப் போய் அதே தூரத்தை மாலையில் திருப்பிச் சென்றது அவரது எளிமையை மட்டுமன்றிச் சூழ உள்ள நிலவரத்தை அவர் எவ்வளவு உணர்ந்து நடந்தார் எனவும் விளக்கப் போதுமானது. தனக்காக விசேட வசதிகளை அவர் கோரியதில்லை. அவரது நேர்மையான தளராத கடும் உழைப்பு வடக்கில் விடுதலைப் புலிகளிட்மும் தெற்கில் அரசாங்கத்திடமும் அவருக்குப் பெருமதிப்பைச் சம்பாதித்தது.

பேராசிரியர் துரைராஜா என்றுமே எந்தக் கட்சியிலும் இருக்கவில்லை. பொதுவாக ஓரளவு இடதுசாரி அனுதாபம் இருந்த போதும் அவரது தமிழ்த் தேசிய இன உணர்வு முக்கியமாக 1977 வன்முறைக்குப் பின்பு வலுப்பெற்றது. ஆயினும் இனவாததிற்கு அவர் இடங் கொடுக்கவில்லை. தனது தேசிய இன உணர்வு பற்றி அவர் இரகசியமாக இருக்கவில்லை. தமிழ்த் தேசிய இனத்தின் இருப்புக்காக உரிமை பற்றி அவர் ஒளிவு மறைவில்லாமலேயே பேசினார். வடக்கில் நடக்கும் இன ஒழிப்பு யுத்தத்திற்கு எதிரான போராளிகள் என்ற வகையில் விடுதலைப்புலிகளிடம் அவருக்கு அனுதாபம் இருந்தது. அதே வேளை மறித்து வைக்கப்பட்டவர்கள் சார்பாகப் பேசவும் தன் செல்வாக்கை அவர் பன்முறை பயன்படுத்தியிருக்கிறார். எனினும் அவரது மனிதாபிமானச் செயற்பாடு அவரது சூழலின் தன்மையால் வரையறுக்குட்பட்டே இருந்தது. அவரது சூழலின் அடிப்படையில் அவரது பங்களிப்பை மதிப்பிடுவோமாகில் அவரது பங்களிப்பின் மேம்பாட்டை உணர்வது எளிதாயிருக்கும்.

உடல்நலக்குறைவு காரணமாக அவர் தன் பதவிக்காலத்தை நீடிக்காமற் கொழும்புக்குத் திறந்த பல்கலைக்கழகத்திற்குத் திரும்பிய வேளை 1994 ஏப்பிரலில் அவரைச் சந்தித்தேன். அப்போதும் தனது கடமையையே அவர் மிகவும் வலியுறுத்திப் பேசினார். அவரது உடல் சிறிதே தளர்ந்தாலும் இன்னும் பல ஆண்டுகள் கொழும்பின் சற்றே சிரமமற்ற சூழலிற் தொடர்ந்தும் பணியாற்றுவார் என்றே அவரும் பிறரும் நம்பினர் அவருக்குப் பிரியாவிடை தந்த யாழ்ப்பாணமும் இதை எதிர்பார்க்கவில்லை.

நாம் இழந்தது ஒரு அதிசிறந்த கல்விமானையும் நிர்வாகியையும், உழைப்பாளியையும், ஆராய்ச்சியாளரையும், பேராசானையும் மட்டுமல்ல. நம்பகமான ஒரு நண்பரை ஒரு அற்புதமான இனிய நல்ல நேர்மையான் மனிதரை இழந்துள்ளோம். அதுவே என்னால் தாங்க முடியாத இழப்பு.

# மணிவாசகம்

### சிங்கங்களும் யானைகளும் ஒன்று சேர்ந்தால்....

''சிங்கங்களும், யானைகளும் ஒன்று சேர்ந்தால் செய்ய முடியாதது எதுவுமேயில்லை.''

**ஸ்ரீ லங்கா ஜனாதிபதி டீ.பீ.விஜேதுங்க -திவயினவில் - 21.06.1994**

### மேலான தியாகம் வேண்டும்!

''போர்வீரர்கள் தமது உயிரையும், எதிர்காலத்தையும் தியாகம் செய்துள்ளனர். அதனையும் விடத் தியாகத்துடனும், அர்ப்பணிப்புடனும் இந்நாட்டின் அரசியல், மதத் தலைமையும், சமூகப் பொருளாதாரத் தலைமைமையும், இராணுவத் தலைமையும் செயற்பட வேண்டும்.''

**ஸ்ரீ லங்கா பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க -லங்காதீபவில் -22.06.1994**

### இரத்தத் திலகம்!

''பொய் வஞ்சகமற்ற அரசியலொன்றை இந்நாட்டில் உருவாக்கி சுதந்திர அடிமையற்ற ஜனநாயகச் சமூகமொன்றைக் கட்டியெழுப்ப உழைக்க வேண்டும். அவ்வாறு அர்ப்பணிப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் பாதுகாக்கச் செயற்படுவோமானால் இந்நாட்டின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என இரத்தத்தால் கையெழுத்திட்டு வழங்குவேன்.''

**ஸ்ரீ லங்கா மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினீ திசாநாயக்க திவயினவில் -22.06.1994**

### தீர்வு துப்பாக்கியிடம் என்றார்கள்!

''அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுள்ளது துப்பாக்கியிடமும், குண்டுகளிடமும் எனக் கடந்த காலத்தில் பெரிய இடங்களில் கற்பித்ததனால் இந்நாட்டில் கொலை செய்யும் சமூகமொன்று உருவானது.''

**ஸ்ரீ லங்கா மேல் மாகாண முதலமைச்சரும், கல்வி அமைச்சருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க -திவயினவில் -22.06.1994**

### மகாசங்கம் = சிப்பாய்கள்

''இந்நாட்டின் மகா சங்கத்தை உத்தியோகப்பற்றற்ற சிப்பாய்கள் சிலருடன் ஒப்பிடலாம். இன்று வரை நாடும் இனமும், புத்தசாசனமும் பாதுகாக்கப்பட்டது அவர்களினால் ஆகும்.''

**வேரஹர அரியவங்ஸ தேரர் -திவயினவில் -25.06.1994**

### நாம் ஏமாறமாட்டோம்

''ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவே ஆளும் கட்சியும், எதிர்கட்சியும் முட்டி மோதுகின்றன. இந்நேரத்தில் எமது கட்சியை இவ்விரு கட்சிகளும் புதுமையான முறையில் அனுதாபத்துடன் நோக்குகின்றன. ஆனாலும் நாம் அவ் அனுதாபங்களுக்கு ஏமாற மாட்டோம். முஸ்லீம் மக்களுக்குக் காலம் காலமாக இருந்தே பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இவற்றுக்குப் பொருத்தமான பதிலொன்றைத் தரக்கூடியவர்களுக்கே எமது ஆதரவை வழங்குவோம். இல்லாவிட்டால் நாம் தனியாகவே பொதுத் தேர்தல்லும், ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடுவோம்.

**ஸ்ரீ லங்கா முஸ்லீம் கொங்கிரஸின் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப்- லங்காதீபவில் -20.06.1994**

### அம்மையார் நினைத்தாலும் முடியாதது!

''விகிதாசாரத் தேர்தல் முறையின்படி எந்த அரசியல் கட்சியும் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாது. நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லதொழிக்க 2/3 பெரும்பான்மை அதிகாரத்தைப் பெற வேண்டும். சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் கூறுகிறார் நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழித்துவிட்டு தாம் வீடு செல்வதாக. அவர் அதனைச் செய்வது எவ்வாறு? எப்படிக் கூறினாலும் நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்க முடியாது.''

**ஸ்ரீ லங்கா பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க -திவயினவில் -20.06.1994**

### சேறு வீசும் நண்பர்கள்!

''நம் முன்னுள்ள கடுமையான போராட்டம் வடக்கு யுத்தமாகும். அதில் தவறான முறையில் தனிப்பட்ட இலாபம் பெற முயற்சி செய்து முடியாதவர்கள் பத்திரிகைகளைப் பிடித்துக் கொண்டு எனக்குச் சேறு பூசும் இயக்கமொன்றை நடத்துகிறார்கள். எனது நண்பர்களும் இச் சேறு வீசும் குழுவில் உள்ளனர்.''

**ஸ்ரீ லங்கா அரச பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்ரன் வனசிங்க -லங்காதீபவில் -21.06.1994**

சீ. சாத்தனார்

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

## எங்களுக்கும் ஆயுதம் தாருங்கள்

-ராஜமனோகரி புலேந்திரன்

வவுனியாப் பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) அமைப்புக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது. இதன் தொடர்ச்சியாக வவுனியாவிலுள்ள புளொட் இயக்கத்தினரிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும் அல்லது அவர்களை வவுனியாவிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரன் ஜனாதிபதி வரை பேசியுள்ளதாக மேலும் தெரிய வருகிறது.



வவுனியாவில் நடந்த ஐ.தே.கட்சி நிர்வாகிகள் மாநாட்டிலும் கட்சியின் செயலாளர் மூலம் ஜனாதிபதிக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பப்பட்டது. அதிலும் எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் வவுனியாவிலுள்ள புளொட், ரெலோ இயக்கங்களிடமுள்ள ஆயுதங்களைப் பறித்தெடுக்க வேண்டும் என்றும் இவர்களின் கப்பம் வாங்குதல் போன்ற தன்னிச்சையான நடவடிக்கைகளைக் கட் ப்படுத்த வேண்டும் இல்லையேல் வவுனியாவிலுள்ள ஐ.தே.கட்சி உறுப்பினர்களுக்கும் ஆயுதம் தரவேண்டும் என்றும் அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரன் புளொட், ரெலோ இயக்கத்தினரின் நடவடிக்கைகளுக்கு எதிராக தானும் ஜனாதிபதியை நேரில் சந்தித்து பேசி விரைவில் இவர்களுக்கு விடைகொடுத்து விடுவதாகவும் பேசியுள்ளார்

அவரைத் தொடர்ந்து பேசிய ஐ.தே.கட்சியினர் புதிய செயலா

**மைதிலி**

ளர் காமினி ஜயசேகரா அரசின் தயவில் நின்று கொண்டே இந்தத் தமிழ் இயக்கங்கள் ஜனாதிபதியை தமிழர்களுக்கெதிரானவர் என பிரச்சாரம் செய்கின்றனர் என்று குற்றம் சாட்டினார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் புளொட் வவுனியாவில் அமோக வெற்றியீட்டியது. எதிர்வரும் தேர்தலிலும் இந்த மாதிரி ''அசம்பாவிதங்கள்' நடந்து விடக் கூடாது என்று ஐ.தே.க உறுதியாக இருக்கிறது.

ஆனாலும் புளொட் இயக்கத்தினரின் ஆயுதங்களை அரசினர் களைவதென்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. வவுனியாவில் இராணுவ சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரசுக்குப் பாரிய பங்களிப்பு செய்தவர்களும் வடக்கின் இராணுவ செயற்பாடுகளுக்கு முன்னின்று வழிகாட்டியவர்களும் புளொட் இயக்கத்தினரே ஆவர்.

வவுனியாவிலுள்ள பாதுகாப்பு முன்னரண் நிலைகளிலும், தாண்டிக்குளம் எல்லையிலும் இன்று வரை இராணுவத்துக்கு உதவியாக இவர்கள் உள்ளார்கள்.

அரசின் இராணுவ அதிகாரிகள் வவுனியாவில் புளொட் இயக்கம் மீது கடும் நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் புளொட் இயக்கத்தைப் பாதுகாப்பு அதிகாரிகள் பகைத்துக் கொள்வார்களெனில் அது அவர்களின் பலவீனமாகவே கருதப்படும். தங்கள் இலக்கை தேவையை அடையும் வரை பாதுகாப்பு வட்டாரத்தில், குறிப்பாக வவுனியாவில் புளொட் அரசுக்கு செல்லப்பிள்ளையாகவே இருக்கும்.

→15

## நிர்வாணமாகும் பௌத்த போதனைகள்

''முஸ்லீம் பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட வேண்டும். ஒரு நாளைக்கு ஐந்து தடவை ஒலிக்கும் இஸ்லாமிய ஒலியானது பௌத்த மத கலாசாரத்தை நகர மற்றும் கிராமப் புறங்களிலும் கருவறுக்கும் வேலையையே செய்து வருகின்றது. இந்த இஸ்லாமிய ஒலியின் ஆதிக்கம், இலங்கை ஒரு பௌத்த நாடுதானா என்று சந்தேகப்படுமளவுக்கு மோசமாகி விட்டுள்ளது. எனவே பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கிகளை பாவிப்பதற்கான அனுமதி மறுக்கப் பட வேண்டும்.''

இந்த மகத்தான கருத்தை வெளியிட்டிருப்பவர், இலங்கையின் பௌத்த இனவாத ஊற்று மூலகங்களில் ஒன்றான அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தலைவர் டட்லி குணசேகர ஆவர். அண்மையில் அறிக்கையொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்:

அவர் தனது இந்த மாபெரும் 'தம்ம' கைங்க ரியத்திற்கு சான்றாக பாகிஸ்தானில் அரசியல் சமய வைபவங்களில் ஒலிபெருக்கி பாவிக்கப்படுவதை தடைசெய்யும் சட்டம் அமுலுக்கு கொண்டு வரப் பட்டுள்ளதை உதாரணம் காட்டியுள்ளார். சிங்கப்பூர், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் இவ்வாறு ஒலிபெருக்கி தடைசெய்யப் பட்டுள்ளமையையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

தனியான முஸ்லீம் பாடசாலைகள் கூட அவரது அர்த்தத்தில் பௌத்த மதத்திற்கு ஆபத்தானவையாம்!

பாரம்பரிய பௌத்தத்தின் சகிப்புத் தன்மை பற்றியும் இவ்வறிக்கையில் குறிப்பிடும் இவர் இவை பிற மதத்தவர்களால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்!

பௌத்த இனவாதத்தின் அப்பட்டமான, சிறுபான்மை இனங்கள் மீதான வெறியை வெளிப்படுத்தும் டட்லி குணசேகராவின் இந்தப் பேச்சானது இஸ்லாமிய மதத்தின் மீது தொடுக்கப்படுகின்ற புதிய தாக்குதலாகும். கிழக்கு மாகாணத்தில் முன்னைய பௌத்த மன்னர்களால் அடைக்கலம் கொடுக்கப் பட்ட இஸ்லாமியர்கள், இப்போது அம்மண்ணை தமதாக்கிக் கொண்டு விட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வளவு பேசும் தலைவர் பல்லின மக்கள் வாழும் நாடு இது என்று (தேர்தலுக்காகவேனும்) ஜனாதிபதியவர்களால் அறிவிக்கப்பட்ட இந்நாட்டில், பௌத்தமதச் சடங்குகளும் 'பிரித்' ஓதல் ஒலியும் பிற மதத்தவர் காதுகளிலும் விழுந்து கொண்டிருக்கின்றது என்பதைப்பற்றி கவனித்ததாகத் தெரிய

→15

## வானமே எல்லை

ஜூலை 15ம் திகதி வரை

பிற்போடப்பட்டுள்ளது

சரிநிகர் 50வது இதழ் வெளிவருவதையொட்டி உலகளாவிய அளவில் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடக எழுத்துரு என்பனவற்றிற்கான போட்டியொன்றை சரிநிகர் நடாத்தவுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழில் எழுதுகின்ற உலகில் எந்த மூலையிலும் வாழ்கின்ற எவரும் இப்போட்டியில் பங்கு கொள்ளலாம். போட்டியில் பங்கு பற்றுவதற்கு வயதெல்லை கிடையாது.

போட்டி விதிகள்:

1. ஆக்கங்களுக்கான கருப்பொருட்கள் தொடர்பாக எந்தக் கட்டுப்பாடும் இல்லை. -வானமே எல்லை.
2. ஆக்கங்கள் படைப்பாளியின் சொந்தப் படைப்பாகவும், இதற்கு முன் பிரசுரமாகாமலும் ஒலி/ஒளி பரப்பாகாமலும் இருக்க வேண்டும்.
3. மொழி பெயர்ப்புகள், தழுவல்கள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.
4. எல்லா ஆக்கங்களும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டும்/தட்டச்சில் பொறிக்கப்பட்டும் பத்துப் பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
5. ஆக்கப்பிரதியில் எழுதியவர் பெயர், முகவரி என்பன இடம் பெறக் கூடாது. அவை தனியாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. ஒருவர் எத்தனை போட்டியிலும் பங்கு பற்றலாம்.
7. ஆக்கங்கள் 1994 ஜூலை 15ம் திகதிக்கு முன்னர் கீழுள்ள முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கவிதை/ கட்டுரை/ சிறுகதை/ நாடக எழுத்துரு எனக் குறிப்பிடல் வேண்டும்.
8. ஆக்கங்கள் திருப்பியனுப்பப்பட மாட்டா என்பதால், ஆக்கதாரர் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது உகந்தது.
9. சரிநிகர்- மேர்ஜ் நிறுவனத்தில் வேலை செய்பவர்களும், அவர்களது உறவினர்களும் இப்போட்டிகளில் பங்கு பற்ற முடியாது.
10. சரிநிகர் நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.

மாணவர்களுக்கு:

இதே தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையிலான போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் தமது ஆக்கங்களை அனுப்பும் போது அப்பாடசாலையின் அதிபரால் உறுதிப்படுத்தப்படும் கடிதமொன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

ஏனைய மேற்கூறிய விதிகள் இவர்களுக்கும் பொருந்தும்.

*பரிசு விபரம்:*

*முதல் பரிசு ரூபா 1000/=ம் சான்றிதழும்*

*இரண்டாம் பரிசு ரூபா 750/=ம் சான்றிதழும்*

*மூன்றாம் பரிசு ரூபா 500/=ம் சான்றிதழும்*

முகவரி:

நடுவர்குழு,<br>
'வானமே எல்லை,<br>
4,ஜெயரட்ன மாவத்தை<br>
திம்பிரிகஸ்ஸாய<br>
கொழும்பு -05

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம். 1994/5/5

28/6/94